# ஞானவீரம்

## 70ஆவது ஆண்டு சிறப்பு மலர்

## 2014




## ஞான வீர சனசமூக நிலையம்

## கோண்டாவில்

# ஞானவீரம்

## 70 - வது ஆண்டு நிறைவு விழா மலர்



**மலராசிரியர்:- க.க.ஈஸ்வரன்**

**புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்**

**2014**

# விநாயகர் வணக்கம்



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



# செம்மாந்தோட்ட ஞான வைரவர் ஆலயம்

| | |
|---|---|
| Name of the Magazine:- | Ganaveeram 70th Finished Magazine |
| Publishers:- | Ganaveera Community centre |
| Address:- | Station Road, Kondavil. |
| Editor:- | Mr. K.K.Eeswaran |
| Edition:- | April 2014 |
| Printers:- | Gangai Printers, Jaffna. |

| | |
|---|---|
| தலைப்பு: | ஞான வீரம் 70வது ஆண்டு நிறைவு விழா மலர் |
| மலராசிரியர்: | திரு.க.க.ஈஸ்வரன் |
| பதிப்புரிமை: | மலர்க்குழு |
| பதிப்பு: | சித்திரை 2014 |
| வெளியீடு: | ஞான வீரம் மலர்க்குழு<br>ஞான வீர சனசமூக நிலையம்<br>புகையிரத நிலைய வீதி,<br>கோண்டாவில். |
| அச்சுப்பதிப்பு: | கங்கை அச்சகம், யாழ்ப்பாணம் |



எமது நிலையம் உருவாவதற்கு உரிய
நிலத்தை பெருமனதோடு உவந்தளித்த
திரு.இ.முருகேசு அவர்களுக்கு
இந்நூலை காணிக்கையாக்குகின்றோம்.



# எமது நிலையக் கொடி

ஞானவீர சனசமூக நிலையம் கோண்டாவில்

22-7-1944

# எமது இலட்சணை

# நிலைய கீதம்

ஞான வீர சனசமூக நிலையம் வாழப் பாட்டுப்பாட்டுவோம்–கோண்டாவில் (2)
நாளும் பொழுதும் நாங்கள் கூடி வாழ்த்துப்படுவோம்
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே
கல்வி என்ற செல்வப் பயிர் வளர்க்கும் மேடையாம்,
காதலோடு ஆடிப்பாடிப் பயிலும் சாலையாம், (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

எண்ணும் எழுத்தும் பொருள்களோடு இணைவு காணுவோம்,
என்றும் எங்கள் நிலையம் நாடி இன்பங் காணுவோம், (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

மக்கள் தொண்டை சனசமூக நிலையம் மூலம் மகிழ்ந்து ஆற்றுவோம்,
எங்கள் வாழ்வை எங்கள் வளத்தை ஏற்றிப் போற்றுவோம், (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

ஏழை மக்கள் வாழ்வைக் காத்து ஏற்றங் காட்டுவோம்,
எங்கள் சனசமூக நிலைய மூலம் மாற்றங் கூட்டுவோம், (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

முத்தமிழை நாளும் வளர்த்து முதன்மை காட்டுவோம்,
வித்தை பல பெருக்கியிங்கே விடிவு காட்டுவோம், (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

ஈழ மண்ணில் கோண்டாவிலில் நிலை யமிது,
இயற்றும் பணி மகிழ்வு கூட்டுமே, (2)
தோழமையாய் நாங்கள் கூடி தொடர்ந்து
பணிகள் ஆற்றுவோம் (2)
வாழ்க வாழ்கவே ஞான வீர சனசமூக நிலையம் என்றும் வாழ்க வாழ்கவே

# 2014ம் ஆண்டுக்கான நிர்வாக சபை

**போசகர் திரு.மு.இராசையா**

| | | |
|---|---|---|
| 1. லயன்.க.ம.இராஜேந்திரன் J.P | – | தலைவர் |
| 2. திரு.இ.ராஜ்குமார் | – | உபதலைவர் |
| 3.திரு.செ.தனுஜன் | – | செயலாளர் |
| 4.திரு.சு.விஜிஜேந்திரன் | – | பொருளாளர் |
| 5.திரு.சி.பகலவன் | – | உபசெயலாளர் |
| 6.திரு.அ.தற்குருநாதன் | – | உறுப்பினர் |
| 7.திரு.பொ.ஆனந்தராஜா | – | உறுப்பினர் |
| 8. திரு.து.கஜேந்திரன் | – | உறுப்பினர் |
| 9.திரு.செ.ஜெகபாலன் | – | உறுப்பினர் |
| 10. திரு.கு.மதுசுதன் | – | உறுப்பினர் |
| 11.திரு.யோ.தர்சன் | – | உறுப்பினர் |
| 12. திரு.ச.அனித்ராஜ் | – | உறுப்பினர் |
| 13. திருமதி.சு.சத்தியபவாணி | – | உறுப்பினர் |
| 14. திருமதி.ஈ.தயாளினி | – | உறுப்பினர் |
| 15. திருமதி.ந.சுதாயினி | – | உறுப்பினர் |
| 16. செல்வி.சி.கஸ்தூரி | – | உறுப்பினர் |
| 17. செல்வி.லி.மயூரி | – | உறுப்பினர் |

**நிலையப் பொறுப்பாளர் - திரு.கு.முருகையா**

# நிர்வாக சபை உறுப்பினர்கள் - 2014




இருப்பவர்கள் (இ-வ) திரு.இ.ராஜ்குமார்(உப தலைவர்) திரு.செ.தனுஜன்(செயலாளர்) திரு.அ.தற்குருநாதன்,(உறுப்பினர்) திரு.க.ம.இரோஜேந்திரன்J.P (தலைவர்)
திரு.சு.விஜிஜேந்திரன்(பொருளாளர்) திரு.பொ.ஆனந்தராசா(உறுப்பினர்) , திரு.சியகவன் (உபசெயலாளர்)

நிற்பவர்கள் (இ-வ) திருமதி.சு. சத்தியபவாணி(உறுப்பினர்) , திருமதி.ந. சுதாயினி(உறுப்பினர்) , திரு.து. கஜேந்திரன்(உறுப்பினர்) ,
திரு.யோ. தர்சன்(உறுப்பினர்) , திரு.ச.அனித்ராஜ்(உறுப்பினர்) , திரு.செ.ஜெகபாலன்(உறுப்பினர்) , செல்வி.வி.மயூரி.(உறுப்பினர்),
திருமதிரா. துபாளினி(உறுப்பினர்) ,செல்வி.சி.கஸ்தூரி(உறுப்பினர்)திரு.இகே.மதுசுதன்(உறுப்பினர்)

# பொருளடக்கம்


01. ஆசிச்செய்தி

02.வாழ்த்துச் செய்தி

03. தலைவரின் பேனாவில் இருந்து

04.செயலாளரின் எண்ணம்

05.பொருளாளரின் எழுத்துக்கள்

06.மலர்க்குழுவின் உள்ளம்


07.கவிதைப் பூங்கா

08.மாணவர்கட்டுரைகள்

09.ஆய்வுக் கட்டுரைகள்


10. எம்மை வழிநடத்தியவர்கள்

11. நன்றி



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966


021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை


# ஆசிச் செய்திகள்



அன்புசார் பெருந்தகையீர்:-

யாழ்ப்பாணம் கோண்டாவில் பிரதேசத்தில் 70 ஆண்டு காலமாக சமூகப் பணியாற்றி தலைநிமிர்ந்து நிற்கும் ஞானவீரம் சனசமூக நிலையத்தை வாழ்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். சீரும் சிறப்பும் கொண்ட கோண்டாவில் பிரதேசத்தில் கற்றவர்களும், பண்டிதர்களும் ஆசார ஒழுக்கத்தோடு வாழ்வதிலும் பழமையான கல்விப்பாரம்பரியம் கொண்ட பாடசாலைகளும், ஆலயங்களும் நிறைந்த அப்பிரதேசத்தில் 70 ஆண்டுகாலமாக ஞானவீரம் சனசமூக நிலையம் மக்கள் வளமாக வாழுவதற்கும் அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாக கல்வித்துறைக்கும் ஆரோக்கியமான விளையாட்டுக்களுக்கும் மக்களை ஐக்கியப்படுத்தும் சங்கமாகவும் அமைந்து பணியாற்றும் சனசமூக நிலையம் 70 ஆண்டுகள் பணியாற்றியது எல்லோருக்கும் மனமுகந்த மகிழ்ச்சியை தருகின்றது. இச்சனசமூக நிலையம் வருங்காலத்தில் இன்னும் பல சேவைகளை மேலெட்டுத்து வெல்வது சிறப்பானது. 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் ஞானவீரம் மலரினை வெளியிடும் சனசமூகத்தினரையும், நூலாசிரியரையும் வாழ்த்துகின்றோம். ஞானவீரம் சனசமூகநிலையத்தின் பணிகள் சிறப்பாக நடைபெற இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

---



ஞான வைரவப் பெருமான் துணை கொண்டு !

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங்களின் நிகழ்வுகளையும் பொது அறிவு என்னும் அமுதத்தையும் அள்ளி தரும் அமுதசுரபியாம் எழுபதாம் ஆண்டு விழா காணும் ஞான வீர சனசமூக நிலையம் இது 1944ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையத்தின் செயற்பாடுகளைப் பாராட்டுவதுடன், மேன்மேலும் இந்நிலையத்தின் செயற்பாடுகள் மேம் படுவதற்காக என்னுடைய நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கின்றேன்.!

**சிவஸ்ரீ பஞ்சாட்சர பாசாங்குச குருக்கள்**
**அரசடிப்பிள்ளையார் கோவிலடி,**
**கோண்டாவில்.**

முதலமைச்சர் செயலகம் - வடமாகாணம்
ප්‍රධාන අමාත්‍ය කාර්යාලය - උතුරු පළාත
**Office of the Chief Minister – Northern Province**

எனது இல / මගේ අංකය / My Ref. NPC/CM/01/2170/2014 உமது இல / ඔබේ අංකය / Your Ref. திகதி / දිනය / Date 08.03.2014



## வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையம் 70 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையிட்டு மகிழ்வடைகின்றோம். ஞான வீரம் என்ற மலரினை இந் நிறைவு விழாவையொட்டி வெளியிடுவதாக அறிகின்றோம். ஞான வீர சனசமூக நிலையம் என்ற பெயரும், இம் மலரின் பெயரும் அயலில் கோயில் கொண்டுள்ள ஞான வைரவரையும், வீர பத்திரரையும் ஒன்று சேர்த்து ஞானத்தையும், வீரத்தையும் பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இம் மலர் செவ்வனே வெளியிடப்பட்டு மக்கள் ஆதரவைப் பெற இறைவனை வேண்டுகின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்

**சீ.வீ.கே. சிவஞானம்**
**සී. වී. කේ. සිවඥානම්**
C.V.K. Sivagnanam

அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සභාපති, උතුරු පළාත් සභාව
Chairman, Northern Provincial Council

479



எனது இல / මගේ අංකය / My No }   உமது இல / ඔබේ අංකය / Your No }   திகதி / දිනය / Date }

## வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம் தனது எழுபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக **"ஞானவீரம்"** என்ற விழா மலரை வெளியிடுவது தொடர்பாகவும் இந்த சனசமூக நிலையம் நீண்ட நெடுங்காலமாக உயிர்த் துடிப்போடு இயங்கி வருவது பற்றி எனது பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பொதுச் சேவை நிறுவனங்கள் தோன்றி சில காலத்திலேயே மறைந்து போய்விடும். இன்றைய காலகட்டத்தில், எழுபது வருடங்கள் நிலைத்து நிற்பது என்பது வியப்புக்கும், பாராட்டுக்கும் உரியதாகும். பல்வேறு சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளுடன் அச்சு ஊடகங்கள் சிலவற்றை கிரமமாகப் பெற்று மக்களின் தகவல் அறிதலுக்கு உதவுவதுடன் இப்பகுதி மக்களின் வாசிப்பு பழக்கத்தையும் இந்த நிலையம் ஊக்குவிக்கிறது.

1994 ஆம் ஆண்டின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடிய போது இந்த நிலையத்தின் தலைவராக இருந்த லயன். கே.எம். இராசேந்திரன் ஜே.பி. அவர்களே எழுபதாவது ஆண்டு நிறைவிலும் தலைவராக இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தமிழ்த் தேசிய உணர்வை இறுக்கமாகப் பற்றி நிற்கும் சனசமூக நிலையங்களில் ஞானவீர சனசமூக நிலையம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

நான் சார்ந்து நிற்கும் இலங்கை தமிழ் அரசுக்கட்சியை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான அமரர் இ.வன்னியசிங்கம் அமரர் டாக்டர் இ.எம்.வி. நாகநாதன் போன்றவர்கள் நெருக்கமான தொடர்பினை பேணியது மட்டுமன்றி எமது தலைவர் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களே இந்த சனசமூக நிலையத்தின் கட்டிடத்தை 1972.01.31 ஆம் திகதி திறந்து வைத்தமையும் பெருமைக்குரியது.

தமிழ்த் தேசிய உணர்வை இதுவரை வளர்த்து வந்தது போல தொடர்ந்தும் எமது கலை, கலாசார, சமூக விழுமியங்களை மேம்படுத்த இந்த நிலையத்தினர் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் எமது வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீ. வீ. கே சிவஞானம்,
அவைத் தலைவர்,
வடக்கு மாகாண சபை.

சீ.வீ.கந்தையா சிவஞானம்

A9 வீதி, கைதடி. ( யாழ்ப்பாணம் )
A9 පාර, කයිතඩි. ( යාපනය )
A9 Road, Kaithady. ( Jaffna )
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / e - mail } cvkayes@gmail.com
தொலைபேசி / දුරකතන / Telephone } 021 205 7084, 021 205 7081 (207,208)
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 205 7086

30,மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்
15.03.2014



# පාර්ලිමේන්තුව
# பாராளுமன்றம்
# PARLIAMENT

## ஞானவீர சனசமூக நிலையம்
## 70ஆண்டு நிறைவுவிழா வாழ்த்து

யாழ்ப்பாணத்தில் நல்லூர் முருகன் கோவில், நல்லூர் சங்கிலியன் கோட்டை, நல்லூர் தமிழர் ஆட்சியின் தலைநகரம் ஆங்கோர் தமிழ் ஊர் கோண்டாவில், ஆங்கே ஞானவீர சனசமூக நிலையம் எழுபது ஆண்டுகள் தமிழர் சமூகத்தின் மொழி, கலை, பண்பாடு எனும் விழுமியங்களைப் போற்றி வளர்ந்து வாழ்கிறது எனும் போது பெருமை சேர்கிறது.

அதைவிட அவ்வூர் மக்கள் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஆளவேண்டும் நம் தமிழ் மண்ணில் தமிழர் ஆட்சி செய்ய வேண்டும்' எனும் கொள்கைப் பிடிப்பும் இலட்சியப்பற்றுங் கொண்ட தந்தை செல்வாவின் தமிழரசுப் பாசறையில் வளர்ந்தவர்கள்.

அதனால் தங்கள் சமுதாயத்தின் எழுச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பெரியார் முருகேசு தன் நிலத்தைத் தமிழர் வாழ வழங்கி மகிழ்ந்தார். தந்தை செல்வநாயகத்தை அழைத்து விழாவெடுத்து மகிழ்ந்தவர்கள். திருநெல்வேலித் தமிழரசுக்காரன் பெரியவர் கந்தையா தந்தையை அழைத்து வந்தவர் என்று நினைவு கூர்ந்தனர். நன்றிமறவாத நல்லதொரு மக்கள் கூட்டம் இணுவில் கனகசபாபதி அண்ணர் என்று தம்பிகளாய் வளர்ந்தவர்கள்.

அந்த அடியொற்றி இரும்பு மனிதன் நாகநாதன், அமிர் அண்ணர், பெரியார் சிவசிதம்பரம் என்று கூறி என்னையும் அழைத்துப் புதிய மாடி கட்டட விழா எடுத்து மகிழ்ந்தனர், நெஞ்சில் பசுமையாய் நினைவு நிறைகின்றது.

தம் மக்கள் எதிர்காலச் சந்ததி கல்வியில் அறிவு ஆற்றல் பொருள்வளம் பெற்ற சமூகமாய மிளிர ஞான வீரராய் சனசமூகமாய் உழைத்து வாழ்ந்து காட்டி எழுந்து நிற்க வைத்த தலைவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

அவர்கள் தங்கள் சொந்த உழைப்பில், வியர்வையில் உப்பைச் சொரிந்து ஞான வீர சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பியபோது எத்தனையோ தடைகளையும், தொல்லைகளையும் தாங்கி பொறுப்பைச் சுமந்து திடசங்கற்பத்துடன் தம்மை அர்ப்பணித்து எழுபது ஆண்டுகள் ஏழு தசாப்தங்கள், வைர விழாவையும் கடந்து எழுந்து நிற்கிறார்கள் என்பது தமிழர் வரலாற்றில் இதுவுமொரு சாதனைதான் பொன் எழுத்தக்களால் பொறிக்கப்படும் பெருமைதான். வாழ்க, வளர்க என வாழ்த்துகிறோம்.

மாவை.சோ.சேனாதிராசா, பா.உ



## வாழ்த்துச் செய்தி......

ஞானவீர சனசமூகநிலையம் தனது 70வது அகவையை நிறைவு செய்யும் இந்நாளில் வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் பெரிதும் அகமகிழ்வடைகின்றேன். இச்சனசமூகநிலையத்தின் சமூகசெயற்பாடுகளிலும், வருடாந்த கலை நிகழ்வுகளிலும் நேரடியாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கடந்த 6 வருடங்களாக எனக்குக்கிடைத்தது பெருமைக்குரியது.

சமூகத்தின் பொருளாதார, கலை, கலாச்சார வளர்ச்சியில் சனசமூக நிலையங்களே கடந்தகாலங்களில் அச்சாணிகளாக செயற்பட்டுவந்துள்ளன. எனினும் பல சனசமூகநிலையங்கள் தற்பொழுது செயலிழந்தநிலையில் வெறும் கட்டிடங்களாகவே இன்றும் காட்சிதருகின்றன. எனினும் ஞானவீர சனசமூகநிலையம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை 70 ஆண்டுகளில் பல்வேறு பரிநாம வளர்ச்சிப்படிநிலைகளை அடைந்து யாழ்.மாவட்டத்தில் முன்னணி சனசமூகநிலையமாக மிளிர்ந்துகொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இந்நிலையத்தின் செயற்பாடுகளுக்கு போதுமான இடவசதி இல்லாதநிலையிலும் தம்மால் இயன்ற சமூகம்சார் சேவைகளை வினைத்திறனோடு ஆற்றிவருகின்றார்கள். வருடாந்த இரத்ததான நிகழ்வுகள், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள், மாணவர்களுக்கான கல்விவளர்ச்சிக்கான உதவிகள் போன்றவற்றை குறிப்பிட்டுக்கூறலாம். அத்துடன் டெங்குஒழிப்பு வேலைத்திட்டம், நீர்வெறுப்புநோய்க்கட்டுப்பாடு போன்ற சுகாதாரம்சார் வேலைத்திட்டங்களிலும் கணிசமான பங்களிப்பை தொடர்ந்து வழங்கிவருகின்றார்கள்.

இச்சனசமூகநிர்வாகத்தின்கீழ், ஞானவீர முன்பள்ளி சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. நிர்வாகத்தின் வினைத்திறனான செயற்பாட்டால் முன்பள்ளியின் அனைத்து தேவைகளும் நிறைவுசெய்யப்பட்டு மாணவர்களின் கற்றலுக்கு வசதியான முன்பள்ளியாக தற்போது திகழ்கின்றது. இவற்றின் விளையாட்டு நிகழ்வுகள், கலைவிழாக்கள் என்பவை வருடாந்தம் சிறப்பான முறையில் நடாத்தப்படுகின்றன.

இவைமட்டுமின்றி எமது கோண்டாவில் லயன்ஸ் கழகம் செயற்படுவதற்கான மத்தியநிலையமாகவும் இச்சனசமூகநிலையம் தொழிற்பட்டு, உதவிபுரிகின்றது.

சிறந்த நிர்வாகத்தின் கீழ் இயங்கும்வாய்ப்பும், இச்சனசமூகநிலையக்கட்டமைப்பும் இப்பிரதேச மக்களுக்குக் கிடைத்தது பெரும்வரப்பிரசாதமென்றே கருதுகின்றேன். இச்சனசமூகநிலையத்தின் முன்னோட்டமான செயற்பாடே எமது கொக்குவில் பகுதியில் "பொற்பதி அறிவாலயம்" எனும் பொதுக்கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கு எம்மை ஊக்கப்படுத்தியது.

தொடர்ந்தும் இந்நிலையம் வளர்ச்சிபெற்று சேவைகள் புரிந்திட என்றும் வாழ்த்துகின்றேன்!

S.N.பிறேம்குமார்,
பொதுச்சுகாதார பரிசோதகர்,கோண்டாவில்.
செயலாளர், லயன்ஸ் கழகம், கோண்டாவில்.



நிலையத் தலைவர்

லயன்.க.ம.இராஜேந்திரன் (J.P)

# தலைவரின் பேனாவிலிருந்து.......

எமது நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 70வது அகவையை மிகச்சிறப்பாக நிறைவு செய்துள்ளது. அதனைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் மலருக்கு இச்செய்தியை எழுதுவதில் என்மனம் பூரிப்படைகின்றது. ஞானமும் வீரமும் மேலோங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எமது நிலையம் 22-07-1944ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஞானவீர சனசமூகநிலையம் 2014ம் வருடமாகிய இவ்வருடத்தில் 70வது ஆண்டு நிறைவை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. 1984ம் ஆண்டிலிருந்து 2014ம் ஆண்டாகிய இன்றுவரை கடந்த 30 வருடங்களாக என்மீது நம்பிக்கை வைத்து நிலையத்தின் தலைவராகத் தொடர்ந்து செயலாற்றச் சந்தர்ப்பம் அளித்த நிலைய உறுப்பினர்களுக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். இச்சந்தர்ப்பத்தில் “ஞானவீரம்” என்னும் நாமம் கொண்ட மலரினை வெளியிடத் தீர்மானித்து உள்ளோம். இந்த மலர் மூலம் எமது வளர்ச்சிப்பாதையில் முக்கிய நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து, வரலாற்றுப் பதிவுகளாக எதிர்காலச் சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளாக மேற்கொண்டுள்ளோம். இப்பதிவுகளைச் சில ஆண்டுகளின் பின்னர் பார்வையிடும் இளவயதினர் இவற்றை ஒரு முன் உதாரணமாகக் கொள்வதுடன் தாங்களும் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனைகள் மேலோங்கக் கூடியதாக இருக்கும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எம்மால் வெளியிடப்பட்ட 50வது ஆண்டு மலரினை பார்வையிடும் இளவயதினர் சில விடயங்களையிட்டு ஆச்சரியப்படுகின்றனர். உதாரணமாக நிலையத்தின் 30வது ஆண்டு காலப்பகுதியில் வருடச் சந்தாவாக 1/= (ஒரு ரூபா) அறவிடப்பட்டதைத் தற்பொழுது ஆச்சரியப்பட்டுச் சிரிக்கின்றனர். அவைமட்டுமல்ல தாங்கள் சிறுபராயமாக இருந்தபோது மலரில் பதிவாகிய படங்களை இருபது வருடங்களின் பின்னர் பார்வையிடுவோர் அப்போதிருந்த தோற்றங்களை நினைவுகூர்ந்து ஒருவரை ஒருவர் கேலி செய்து மகிழும்போது அவர்களுக்கிடையேயான அன்னியோன்னியம், ஒற்றுமை வலுவடைகின்றது. எமது வீடுகளிலே இல்லாத பல பதிவுகள் இப்படியான மலரினைப் பார்வையிடுவதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அத்துடன் போர்க்காலப் பதிவுகள், இடப்பெயர்வுகள், இழப்புகள் போன்ற வரலாற்றுப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. எமது செயற்பாடுகளின் பதிவுகளூடாக யார் எப்போது திருமணம் செய்தார்கள்? யார் எப்போது மரணமடைந்தார்கள்? யார் எப்போது வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தார்கள்? என்ற விபரங்களைப் பெறக்கூடியதாக உள்ளது.

இந்நிலையம் இயங்கத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் உலகம் சுற்றிய தமிழன் A.K.செட்டியார் அவர்கள் யாழ்ப்பாணம் சுற்றுலா வந்த சமயம் இந்நிலையத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மேலும் இலங்கைக் கம்யூனிச, சமசமாஜக் கட்சிகளின் தலைவர்களாக இருந்த அமரர்களான பீட்டர் கெனமன், என்.எம்.பெரேரா ஆகியோரை அழைத்து கூட்டங்களை நடத்தியிருந்தனர். 1955ம் ஆண்டு மலாயன் பென்சனியர் அமரர் இ.முருகேசு தலைவராக இருந்த காலப்பகுதியில் கோண்டாவில் பகுதியை உள்ளடக்கிய கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வன்னியசிங்கத்தின் உதவியுடன் யாழ்தேவி புகையிரதத்தைக் கோண்டாவில் புகையிரத நிலையத்தில் தரித்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவரின் முயற்சி கைகூட முன்னர் அவர் அமரராகி விட்டார். அப்படி இருந்தபோதும்

யாழ்தேவி கோண்டாவிலில் தரித்துச் சென்ற முதல்நாள் விழாவிலே அமரர் வன்னியசிங்கத்தின் படத்திற்கு மலர்மாலை சூட்டி யாழ் புகையிரத நிலையத்திற்கு புகையிரதம் மூலம் எடுத்துவரப்பட்டு எமது நிலையத்தில் விழா நடத்தப்பட்டது. இவ்வைபவத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் டாக்டர்.ஈ.எம்.வி.நாகநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். அமரர் ந.சுப்பிரமணியம், J.P தலைவராக இருந்தபொழுது. 1982/1983 காலப்பகுதியில் யாழ் மாவட்ட மங்கையர் கழகத்தின் தொடர்புகள் மூலம் கனேடிய அரசாங்கத்தின் நிதி உதவி கிடைக்கப்பெற்று பாலர் பாடசாலைக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. இக்கட்டிடம் 28.07.1983ல் கனேடிய உதவித்தூதுவர் திரு.கொல்கெட்டினால் திறந்து வைக்கப்பட்டது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பாலர் பாடசாலை இக்கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றது.

தற்பொழுது நிலையம் அமைந்துள்ள இடத்தில் முன்பு ஒரு நிரந்தரக் கட்டிடம் இளைஞர்களின் முயற்சியால் அமைக்கப்பட்டு அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், பா.உ. அவர்களால் 31-01-1972ல் திறந்துவைக்கப்பட்டது. அக்கட்டிடம் 14-11-1987 இந்திய இராணுவத்தினரின் பீரங்கித்தாக்குதலினால் சேதமாக்கப்பட்டது. எனவே, சேதமாக்கப்பட்ட கட்டிடத்தை அகற்றி, அவ்விடத்தில் புதிய மேல்மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் 1991ம் ஆண்டு நாட்டப்பட்டபோதும் நாட்டில் அக்காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த போர் நெருக்கடிகளினாலும், கட்டிடப் பொருட்களுக்கு இருந்த தட்டுப்பாடு காரணமாகவும், 1995ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வலிகாமம், யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து தென்மராட்சி, வடமராட்சி வன்னிப்பகுதிகளுக்கு இடம்பெற்ற பாரிய மக்கள் இடம்பெயர்வு காரணமாகவும் கட்டிடவேலைகள் தாமதமாகி இருந்தன. இருந்தபோதிலும் கட்டிடத்தின் கீழ்ப்பகுதியைப் பூரணப்படுத்தி எமது செயற்பாடுகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தோம். இடப்பெயர்வின் பின்னர் திரும்பி வந்து அங்கத்தவர்கள் தங்களை நிலைப்படுத்திய பின்னர் ஒன்று சேர்ந்து அயராத முயற்சியினால், சிரமதானம் மூலமும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, நல்லூர் பிரதேசசபை, வெளிநாட்டிலுள்ள உறுப்பினர், உறவினர், உள்ளூர் அன்பர்கள் ஆகியோரின் நிதியுதவியுடனும் மேல்மாடிக் கட்டிடம் வரை பூரணப்படுத்தியிருந்தோம். இம்முழுமையான கட்டிடம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களினால் 19-01-2003ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. அண்ணன் மாவை அவர்கள் எமது நிலையத்தின் 60வது, 65வது ஆண்டு விழாக்களிலும் வேறுபல நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்தமை மட்டுமன்றி எமது நிலையத்துடன் நீண்டகாலத் தொடர்பையும் பேணிவருகின்றார். தற்போது மேல்மாடி "தந்தை செல்வா" நாமம் கொண்ட நூல் நிலையமாகவும், ஞானவீர ஐக்கிய நாணய சங்கக் கூட்டம் மற்றும் கூட்டங்களை நடத்தும் மண்டபமாகவும், கணினி வகுப்பு நடைபெறும் இடமாகவும் பயன்பட்டு வருகின்றது.

எமது நிலையம் அமைந்துள்ள காணி திரு.இ.முருகேசு (மலாயன் பென்சனியர்) அவர்களினால் சனசமூக நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தும் நிலையத்தின் பெயரில் உறுதி எழுதப்படாமல் இருந்தது. பின்னர் ஜேர்மனியில் இருந்த அவரது மகனான திரு.மு.சிவராஜாவுடன் தொடர்புகொண்டதன் பயனாக 2001ம்ஆண்டில் நிலையத்தின் பெயரில் காணி எழுதப்பட்டது. சனசமூக நிலையத்திற்கான கீதம் இல்லாத நிலை உணரப்பட்டு காரை.M.P.அருளானந்தம் அவர்களுடன் தொடர்புகொண்டு அவர் மூலம் நிலையத்திற்குப் பொருத்தமான ஒரு இனிய கீதம் 1999ம் ஆண்டில் இயற்றப்பட்டது. தற்பொழுது நிலையம் சொந்தமான காணியில் நிரந்தரக் கட்டிடம், உபவிதி, நிலையகீதம், இலட்சினை, கொடி போன்ற அடையாளங்களுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மேலும் 2011ம் ஆண்டு எமது சனசமூக நிலையத்திற்கான இணையத்தளத்தை www.gnanaveera.com என்ற பெயரில் உருவாக்கி

உள்ளோம். இவ் இணையத்தளம் மூலம் வெளிநாட்டு உறவுகள் எம் நிலையம் சம்பந்தமான செய்திகளை உடனுக்குடன் அறியக்கூடியதாக இருக்கின்றது. எமது நிலையத்தின் செயற்பாடுகளை நல்லூர்பகுதி சனசமூகநிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் கேட்டறிந்து கொண்ட SOND நிறுவனம் எமது நிலையத் தலைவர், செயலாளர், பொருளாளர், பயனாளிகள்,மாணவர்கள் ஆகியோரிடம் செவ்வி கண்டு ஒரு குறுந்திரைப்படத்தைத் தயாரித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு அவர்களை நிர்வாகசபைக் கூட்டங்களில் உரிமையுடன் கலந்துகொண்டு கருத்துகளைத் தெரிவிப்பதற்காக நிர்வாகசபை உறுப்பினர் தொகையில் குறைந்தது 1/3 பங்கினர் பெண்களாக இருக்க வேண்டும் என எண்ணி 2010ம் ஆண்டில் உபவிதியில் திருத்தம் செய்து தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றோம். தினசரி 03 பத்திரிகைகளை வாசகர்களுக்கு வழங்கி வருவதுடன், பாலர் பாடசாலை நடத்துதல்,விளையாட்டுப்போட்டிகள் வருடாந்த இரத்ததான நிகழ்ச்சி, நூலக சேவை போன்ற சேவைகளை வழங்கி வருவதுடன் அங்கத்தவர்களுக்கும், வெளியாட்களுக்கும், நிறுவனங்களுக்கும் பல சேவைகளை வழங்கி வருகின்றோம். உதாரணமாக 2012ம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் மிகவும் துன்பமடைந்திருந்தனர். அப்பகுதி மக்கள் சுனாமியாலும், போரினாலும் பின் வெள்ளப்பெருக்கினாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். எனவே எம் சகோதர மக்களுக்கு சிறு உதவி என்றாலும் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இளைஞர்களின் உதவியுடன் பலரிடம் பணமாகவும், பொருட்களாகவும் பெற்று முல்லைத்தீவுப் பட்டணப் பிரதேசசெயலருடன் தொடர்புகொண்டு அவரின் சிபார்சின் பேரில் தற்காலிக முகாம்களில் வசித்து வந்த கொக்குத்தொடுவாய் மக்களுக்கு 2012 தைமாதம் நிர்வாகக்குழு நேரடியாக அவ்விடம் சென்று ரூபா 150,000/- பெறுமதியான உலருணவும், உடுபுடைவைகளையும் வழங்கியிருந்தது.

2013ம் ஆண்டு திரு.ந.தயானந்தராஜா, திரு.ந.மேகன்ராஜ் ஆகியோரால் தமது பெற்றோராகிய அமரர்களான நடராசா – தேவி ஆகியோரின் நினைவாக அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூபா 100,000/- பெறுமதியான இரண்டு கணினிகளின் உதவியுடன் தற்பொழுது கணினிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றோம். 2014ம் ஆண்டு நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட தைப்பொங்கல் நிகழ்ச்சியில் திரு.இ.அஜந்தனின் நண்பரும் சுவிற்சிலாந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான Mr.Severin Toberer அவரது வாழ்க்கைத் துணைவியாராகிய Andrea ஆகிய இருவரும் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் எமது நிலையத்தின் செயற்பாடுகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் புகைப்படங்களையும் பார்வையிட்டனர். அவற்றின் மூலம் மகிழ்ச்சியடைந்த அவர்கள் எமது நிலையத்தின் வங்கிக் கணக்கிலக்கத்தினைப் பெற்றுச்சென்றனர். என்ன ஆச்சரியம்? அவர்கள் சுவிற்சிலாந்து சென்ற மூன்றாவது தினமே எமது செயற்பாடுகளை விரிவுபடுத்த ரூபா 215,000/- அனுப்பியிருந்தனர். அவர்களின் நிதி உதவியுடனும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களின் 75,000/- நிதியுடனும், யாழ் பல்கலைக்கழக ஆங்கிலப் பகுதித் தலைவர் திரு.A.இராசகுமாரன் அவர்களின் ரூபா 11,000/- நிதியுடனும் சிறுவர்களுக்கான பூங்கா ஒன்றை அமைத்துள்ளோம்.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் 44 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. நல்லூர்

பிரதேச சபையால் காலத்திற்கு காலம் சனசமூகநிலையங்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வது வழமை. அப்படி மதிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் எமது சனசமூகநிலையம் ஒருமுறை மூன்றாம் இடமும், ஒருமுறை இரண்டாம் இடமும், இருமுறை முதலாம் இடங்களும் பெற்றுக்கொண்டதைப் பெருமையுடன் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நிலையத்தின் தலைவராக இருந்த காரணத்தினால் பொதுச்சபையினர் ஒருமனதானத் தீர்மானத்தித்து என்னைச் சமாதானநீதவானாகப் பரிந்துரை செய்ததன் விளைவாக நான் சமாதானநீதவானாகப் பதவிப்பிரமாணம் செய்யப்பட்டேன். 06-11-2002ல் யாழ் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாண நிகழ்ச்சி நடைபெற்றபோது ஊர்மக்கள் திரண்டுவந்து கலந்துகொண்டமையையும், பின்னர் செம்மாதோட்ட ஞானவைரவர் ஆலயத்திலிருந்து என்னையும், துணைவியாரையும், மங்கல வாத்தியங்களுடன் மாலைகள் அணிவித்து ஊர்வலமாக வீடுவரை அழைத்து வந்து, பாராட்டிக் கௌரவித்தமையும் எனது சனசமூக நிலையத் தொடர்பின் பசுமையான நிகழ்வுகளாகும்.

இத்தகைய பெருமைகளோடு இயங்கிவருகின்ற ஞானவீர சனசமூகநிலையம் மேலும் மேலும் வளர்ச்சிகளையும் வெற்றிகளையும் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இத்தகைய மலர்கள் தொடர்ந்தும் வெளியிடப்பட்டு எமது சமூகமாணவர்களின் அறிவுப்பசியாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு நிலைய வளர்ச்சிக்காக உழைக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் குறிப்பாக என்னுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக இணைந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற இளைஞர்கள், யுவதிகள் அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு, இம்மலராக்கத்தில் ஈடுபட்ட மலர்க்குழுவினருக்கும், குறிப்பாகத் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி திரு .க.க.ஈஸ்வரன் அவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் எம்உறவுகள், விளம்பர நிதியுதவி செய்தோர், ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், வழங்கிய பெரியோர்களுக்கும் கட்டுரைகளை வழங்கி மலரை மேன்மைப்படுத்திய அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் மலரை நூல்வடிவாக்கிய கங்கை பிறிண்டேர்ஸ் நிறுவத்தினருக்கும், மற்றும் அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றேன்.

"ஒற்றுமையுடன் செயற்படுவோம், புது உலகம் படைப்போம்."

சுபம்

**லயன் க.ம.இராஜேந்திரன்,** J.P
***தலைவர்***
**ஞானவீர சனசமூக நிலையம்,**
**கோண்டாவில்**



# செயலாளரின் எண்ணம்..........

**"ஞான வீரம்" வாசிக்க மட்டும் அல்ல சுவாசிக்கவும் தான்...........**

எமது சமுதாயத்தை வளம்படுத்தும் நிறுவனங்கள் பலவற்றுள்ளும் சனசமூக நிலையங்களுக்குத் தனியான பங்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. பத்திரிகைச் செய்திகளைச் சமூகம் அறியச் செய்கின்ற தன்னலம் அற்ற உயர்ந்த சேவைக்கும் அப்பால் சமூகப் பணி என்ற நிலையில் எங்கெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் சென்று தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாகவும் சனசமூக நிலையங்கள் திகழ்கின்றன. அத்தகையதொரு பணி நிறுவனமாகவே எமது ஞான வீர சனசமூக நிலையம் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

பல தீர்க்கதரிசிகளினால் 70 ஆண்டுகளுக்கு முன் விதையாக உருவாக்கப்பட்ட எமது நிலையம் இன்று பல விழுது விட்ட விருச்சமாக கோண்டாவில் பதியில் கம்பீரமாக செயற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததுவே.


70 ஆண்டு கால சமூக ரீதியாக செயற்பாடுகளினால் நல்லூர் பிரதேச சபை ரீதியில் முதல்தர நிலையமாகவும் யாழ் மாவட்டத்தில் முதன்மை நிலை நிலையமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

70வது ஆண்டு நிறைவில் "ஞானவீரம்" மலரை வெளியிடுவதை முன்னிட்டு நாம் பெருமை கொள்கிறோம். இத்தருணத்தில் நாம் வெற்றிச் சிகரத்தை அடைய படிக்கற்களாக இருந்த ஒவ்வொருவரையும் நெஞ்சில் நிறுத்தி அவர்களை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இவ் ஞானவீரம் வாசிக்க மட்டுமல்ல ஒவ்வொருவரும் சுவாசிக்கவும் தான்.

**"தங்களின் ஆதரவிற்கு எங்களின் உளமார்ந்த நன்றி உரித்தாகட்டும்"**

**செயலாளர்**
**செ.தனுஜன்**



# பொருளாளரின் எழுத்துகள்......

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம் தனது 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடும் "ஞானவீரம்" என்ற சஞ்சிகைக்கு இச்செய்தியை எழுதுவதில் மிகவும் பூரிப்படைகிறேன். இந்நிறுவனத்தில் நடப்பாண்டுக்கான பொருளாளராகப் பணியாற்ற எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மனம் மிக மகிழ்ச்சி கொள்கிறது.

எமது நிலையமானது பல நல்லுள்ளங்களைக் கொண்ட பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று தன்னலம் அற்ற சேவையால் பல சனசமூக நிலையங்களில் தனித்துவம் மிக்கதாக விளங்குகின்றது. எமது பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் பலரின் ஒத்துழைப்பு இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்க மிகவும் பங்களிப்பு செய்தது. தந்தை செல்வா தொடக்கம் மாவை சேனாதிராஜா வரையுள்ள அரசியல் தலைவர்களின் உயர்ந்த எண்ணமே இந்த நிலையம் இவ்வாறு மிளிர்வதற்குக் காரணமாக அமைந்தது எனில் மிகையில்லை.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு நிதி மிகவும் அவசியமாகும். அந்த வகையில் உள்ளூர் நண்பர்கள் வெளிநாட்டில் இருக்கும் எம் நாட்டு அன்பர்கள், வெளிநாட்டு அன்பர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் என நிதிப் பங்களிப்புச் செய்தோரின் பட்டியல் நீண்டு கொண்டெ செல்லும். எமது நிலையத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனையும் நிலைய அங்கத்தவர்களின் அயராத உழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.அவ் உழைப்பின் பயனை அறுவடை செய்வதாகவே இம் மலர் வெளியிடப்படுகின்றது. இனி வரும் காலங்களிலும் இத்தகைய மலர்கள் வெளிவர அனைத்து அன்பு உள்ளங்களும் ஆதரவு நல்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்வதோடு நிதிப்பங்களிப்புச் செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மீண்டும் நன்றி கூறி மகிழ்கின்றேன்.

**திரு.சு.விஜிஜேந்திரன்**
**நிலையப் பொருளாளர்**





1972ல் தந்தை செல்வா
நிலையத்தை
திறந்து வைத்த போது



1972ல் தந்தை செல்வா நிலையத்தின் ஞாபகார்த்த
கல்லை திரை நீக்கம் செய்த போது




1972ல் கட்டடத்திறப்பு விழாவின் போது



1986 நிர்வாக சபை





1983 ஞானவீர முன்பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்த போது
கனேடியத் தூதராக செயலாளர் வீச்சி,
முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க
அதிபர் யோகேந்திரா துரைச்சாமியுடன்
28.07.1983




இருப்பவர்கள் (இ-வ) செல்வி.விமயு ரி(உறுப்பினர்) , திரு.சு.விஜிஜேந்திரன்(பொருளாளர்), திரு.க.க.ாஸ் வரன்(ஆசிரியர்), திரு.க.ம.இரோஜேந்திரன்J.P (தலை
திரு.செ.தனுசன்(செயளாளர்), செல்வி.சிகஸ்தூரி(உறுப்பினர்)

நிற்பவர்வர்கள் (இ-வ) திரு.இ.ராஜ்குமார்(உறுப்பினர்) , திரு.ச.அனித்ராஜ்(உறுப்பினர்) , திரு.இ.அஜெந்தன்(உறுப்பினர்) ,
திரு.சி.பகலவன்(உறுப்பினர்) , திரு.யோ. தர்சன்.(உறுப்பினர்) திரு. த.கஜேந்திரன்(உறுப்பினர்)

# மலர்க்குழுவின் உள்ளத்திலிருந்து......

கோண்டாவில் ஞான வீர சனசமூகநிலையத்தின் 70வது ஆண்டு நிறைவைப் பதிவு செய்யுமுகமாக வெளிவரும் ஞானவீரம் சஞ்சிகையினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். ஒரு சமூக சேவை நிறுவனம் தனது சேவைகளின் பதிவுகளை எதிர்காலசந்ததி அறிந்த கொண்டு பின்பற்ற வேண்டும் என்பதற்காக அறிக்கைகளாகப் பதிவு செய்வதுண்டு. அவ்வறிக்கைகளின் தொகுப்பாகவும் மற்றும் பள்ளி மாணவர்களின் ஆக்கங்களாகவும் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்தும் மலராக வெளியிடுவதுண்டு. அந்த வகையில் ஞான வீர சனசமூக நிலையம் 50வது ஆண்டு நிறைவைப் பதிவு செய்த சிறு நூலுக்கு மேலும் மெருகூட்டும் முகமாக 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 70வது ஆண்டு நிறைவு மலராக ஞானவீரம் என்ற நூலை வெளியிடுகின்றது.

இந்நூலானது நூல் வடிவம் பெறுவதற்குரிய எண்ணத்தை மனம் கொண்டு எங்களிடம் அதன் ஆக்கப்பணியை ஒப்படைத்து ஆக்கபூர்வமான உதவிகளையும் செய்த தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாக சபையையும் நன்றியுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம். இந்நூலுக்குரிய நிதிப்பங்களிப்பை நல்கிய விளம்பரதாரர்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு நல் உள்ளங்களையும் நன்றியுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இவற்றிற்கும் மேலாக நூலை அலங்கரிக்கின்ற ஆக்கங்களை மனம் கோணாது அள்ளித்தந்த மாணவர்கள் மற்றும் நிலைய உறுப்பினர்கள் துறைசார் வல்லுநர்கள் அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றேன். இந்நூல் இனிது சிறப்புடன் வெளிவர ஆசிகள் வழங்கிய சமயப் பெரியோர்களுக்கும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெருமனதுள்ள பெரியோர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

என்னுடன் பணியாற்றிய மலர்க்குழு அங்கத்தவர்களுக்கும் அழகிய முறையில் அச்சு வடிவமைத்து புத்தக வடிவாக்கிய கங்கை பிறிண்டேர்ஸ் நிறுவனத்துக்கும் நன்றி கூறி மகிழ்கின்றோம். மேலும் இது போன்ற பல நூல்கள் நிலையம் சார்பாக வெளிவந்து சிறந்ததொரு கல்வியில் தன்னிறைவு பெற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட எல்லாம் வல்ல செம்மாந்தோட்ட ஞான வைரவப் பெருமானின் அருளை வேண்டிப் பிரார்த்தித்து மகிழ்கின்றோம்.

**மலர்க் குழு சார்பாக**
**க.க.ஈஸ்வரன் ஆசிரியர்**



# கவிதைப் பூங்கா

## வீதி விதிகள்

பள்ளி செல்லும் பிள்ளையே
பாடம் ஒன்று கற்றுக்கொள்
நல்லசாலை விதிகளை
நன்கு மனதில் வைத்துக்கொள்

நடக்கும் பாதைவழியிலே
நானும் நீயும் நடக்கணும்
கடக்கும் இடத்தில் கவனமாய்
கடந்து போகத் தெரியணும்

சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய்
சேர்ந்து நால்வர் சாலையை
மறித்துச் செல்லல் நல்லதோ?
மனதில் எண்ணிப் பாருங்கள்

வளைவில் பிறரை முந்தினால்
வந்து நிற்கும் விபத்துமே
அளவில்லாத வேகத்தால்
ஆபத்துண்டு தெரிந்து கொள்

பாதையில் பந்து பம்பரம்
பட்டம் போன்ற விளையாட்டு
வேதனை தருமே யாவர்க்கும்
வேண்டாம் இவற்றை தவிர்த்திடு

வீதி விதிகள் பேணிநிற்கும்
விரும்பும் இடமே போய் வரலாம்
எனினும் வீதியில் விபத்துகள்
எல்லாம் தவிர்த்தே மகிழ்வோம்

ராஜ்குமார் ராகவி
தரம் - 02
யா/ இந்து மகளிர் கல்லூரி

## புன்னகை வேண்டும்

ஒழுக்கம் சிறந்தது பாப்பா - உன்
உயிரின் உயர்ந்தது பாப்பா
நன்னெறி சேர்ந்திட வேண்டும் பாப்பா
நல்லோரைச் சார்ந்திட வேண்டும்

பொய்கொலை களவு வஞ்சகம் உடன்
போக்கிடு வாயுன் நெஞ்சம்
அன்பே இன்ப ஊற்று இதய
ஆசையுடன் அது போற்று

வாழ்வைக் கெடுப்பது கோபம் - உயிர்
வதைசெய்து உண்பது பாவம்
பாபப் பலன் பரி நாசம் - ஊர்
பேசுவ தும் பரி காசம்

இன்சொல் பேசுவாய் நாளும் - என்றும்
இவ்வுலகுன் பெயர் வாழும்
புன்னகை பூத்திட வேண்டும்
எண்ணிய பேறெய்தி வாழ்வாய்.

சு.சஞ்சயன்
தரம் - 03

# அம்மா



அன்பின் உருவமே அம்மா
அள்ளி அணைப்பவரும் அம்மா
பள்ளியால் துள்ளி வர
அரவணைப்பவரும் அவரே

கண்டிப்பானவர் அம்மா
கல்வி புகட்டுவார் தினமும்
எம் வளர்ச்சியில்
உள்ளம் பூரிப்பவரும் அவரே

அம்மா அம்மா அம்மா
அருமையான அம்மா

சி. சாத்விகன்
தரம் - 04
யா/இந்து ஆரம்ப பாடசாலை

# பள்ளி நட்பு

பலகாலம் பள்ளி வாழ்க்கையில் - அந்நாட்கள்
தேன்சுவை பருகும் நாட்கள்
இனிக்க இனிக்க பல கதைகள் பேசி
இடை இடையில் குட்டிச் சண்டைகள் செய்து
செல்லமாக அன்பையூட்டிஅவ் அன்பின் வழி
நட்பை வளர்த்துக் கொண்டோம்
நம் சந்தோசத்தைப் பகிர கவலை போக்க
கவலையில் பகிர்ந்து கொள்ளவும்
காலமெல்லாம் கூட கைகோர்ப்பது நம் நண்பர்கள்!

நம் பள்ளி வாழ்க்கையில் சந்தித்த ஒவ்வொருவரும்
நம் நட்பிற்கு இலக்கணமாவார்கள்
செல்லமாகத் திட்டுவதும் தேவையின் போது செல்லம் பொழிவதும்
பள்ளி வாழ்க்கையின் தொடர்கதைகளாகும்
அவை முற்றுப் புள்ளி இன்றி என்றும்
தொடர்பவையே என்றால் அது மிகையல்லவே
கள்ளங்கபடமற்ற வெண் தாமரை நட்பு
நாட்டமின்றி வாழ்வோன் மனிதனில்லை நிஜம்.

ஈ.அம்ஸவி
தரம் 7
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# நம்ம ஊர் போல வருமா?

பத்து மாதங்கள்
சித்தம் அழகிய
முத்தான எங்களம்மா
எம்மைச் சுமந்தாள்!
சொத்தான மண்ணில்...
வித்தகப் பூமியில்
விரிந்து பரந்து கிடந்த
எங்கள் ஊரில்
வித்தாக எம்மை
விதைத்து விட்டாள்?

முளைத்து மூன்றிலை விட்ட
குருத்துகளாகி
மெல்லத் தழைத்து வருகின்ற
குழந்தைகளாகி
தவழ்ந்தும்
விழுந்தும்
எழுந்தும்
தளர்நடை போட்ட காட்சி
இருண்ட மன மூலையில்
ஒளியாய் கிடக்குது

அண்ணன் தங்கையோடு
அப்பா அருகிருக்க
அம்மா நிலாக்காட்டி
அன்பின் அமுதூட்ட
சின்னநிலவாய் நாம்
சிரித்த தேசம் அது!

கிட்டிப்புள்ளோடு
கிளித்தட்டு, சடுகுடு
கும்மி, கோலாட்டம்
ஆடிக்களித்த
தாத்தாவின் வயல்வெளி
நெஞ்சில்
புல்வெளியாய்
பரந்து கிடக்கிறது!



ஆயிரம் பனை சாட்சியாக
அத்தன் தன் காதலை
அமுத்தமாய்ச் சொல்லப்
பித்து பிடித்தவளாய்
தோழிக்கு
பிதற்றித் திரிந்த பனங்கூடல்
பசுமையாய்த் தெரிகிறது!

ஆச்சி அப்புவோடு
குஞ்சியம்மா, குஞ்சியப்பு
விஞ்சுதமிழ் பேசி
அருகருகே உறவெல்லாம்
ஆல மர விழுதுகளாய்
ஆறியிருந்த அந்த
செம்மண் தரை தவிர்ந்த
ஓலைக்குடிசைகள்

வெள்ளைப் புறாக்களாய்
துள்ளி எழுந்து
பள்ளி சென்று
வாத்தியார் சொன்னதென
மனத்திடை ஏற்றி வைத்துப்
போற்றி நின்ற
வசந்த காலம் நெஞ்சில்
சந்தம் நிறை பாடலாய்
சந்தோசம் தருகிறது!

கீரிமலை நீராடி
மாவிட்டபுரம் சென்று
மயிலோனை வணங்கி
வல்லிபுர கோவில் சென்று

மணலில் துள்ளி விளையாடி
நல்லூரான் திருவிழா
ஆவணியில் வர
பாவாடைத் தாவணியில்
பவனி வந்து
முத்து மாலையொடு
கண்ணாடி வளையல் வாங்கி
கலகலத்த நினைவோடைத்
தண்ணீர் ஓடிவந்து
புகைக்கும் மனத்தின்
புழுக்கம் தவிர்க்கிறது

உள்ளம் குளிரும் வரை
உவந்து நீராடி...
வானுயரப் பறந்துநின்ற
வாழைக்கு வாய்க்கால் வெட்டி
நீர்செல்லும் அழகை
நீண்ட நேரம்
இரசித்தபடியே நீராடும்
அந்த நாள்...

ஆம்
ஆறுவற்றினாலும்
ஆடிநீர் ஊற்று
வற்றாத
அமுதசுரபிக் கிணற்றுநீர்
எம்மனத்தே வற்றிடுமோ?

அப்பாவின் நெல் வயலும்
மாமாவின் மாந்தோப்பும்
அப்புவின்ர
ஐம்பது ஏக்கர் தென்னந்தோப்பும்
மாமியின் சீதனமாம்
மணல் நிறைந்த பனங்கூடலும்
எங்கள் பாதச்சுவடுகள்
தாங்கிய இடங்களன்றே

காலச்சக்கரத்தின்
துன்பரேகை விழுந்ததோ!
என்னவோ!

திருமணம் என்றும்
திரு சேர்க்கும் வழிஎன்றும்
அழியாத கல்வி என்றும்
அவலத்தின் விடுதலை என்றும்
அயல்நாடெல்லாம்
நாம்
அலை அலையாய்
படையெடுத்தோம்

புறத்தே செல்வம்
கொட்டிக் கிடக்கிறது
ஆனாலும்
அகத்தே வராமை
வாட்டி வதைக்கிறது

ஆம்!
கோடிகள் எம்மிடத்தே
கொட்டிக் கிடந்தாலும்
எங்கள் கோடிக்குள்
வாழ்ந்த வாழ்வு...

சொர்க்கமே ஆனாலும் - அது
நம்ம ஊர் போலாகுமா?

ஜெ. சுமித்திரன்
தரம் - 11
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

# ஞான வீர சனசமூக நிலையமே... உன் சேவை இன்னும் தொடரட்டும்...

கோண்டாவில் மண்ணில் தவழும் நிலவு - நீ
ஊரெங்கும் ஒளிவீசும் - பொழுது நீ
கோண்டாவில் மண்ணின் பெருமைக்காய்
தலை நிமிர்ந்த நிலையம் நீ...

எல்லை அற்ற மகிழ்வை இதயத்துள்
விதைக்கின்றாய் - இமய சோகத்தை
இருளுக்குள் புதைக்கின்றாய் - உன்
சேவையால் எம்மண் என்றும் ஒளிவீசும்...

மகிழ் வான வாழ்வு அது சிரியுங்கள்
நண்பர்களே எம் சன சமூக நிலையத்தால்
என்றும் சமூக சேவைதான் கோண்டாவில்
மண்ணுக்கு...

எட்டுத் திசைகளும் ஓங்க எழுகின்ற சனசமூக
நிலையங்கள் - அதனால்
கெட்டுச் சிதற வில்லை எம் நிலையம்

ஏழ் பத்து ஆண்டு ஆயினும் - கலங்காமல்
நின்று எம் மண்ணின் வளர்ச்சிக்காய்
வளம் தேடுகின்றாய்...
வரம் கொடுக்கின்றாய்...

ஈர்ப்புக் கூடியது சூரியன் என அறிந்தேன்
அதிலும் ஈர்ப்புக்கூடியது உன் - சேவை
உள்ளம் தான் எனக் கொள்ள
வைக்கின்றாய்...

கரையில்லா கடலாகவும்
எல்லை அற்ற வனமாகவும்
முடிவற்ற வானமாகவும்
உன் சமூக சேவை நோக்கை அறிந்தோம்...

வாழ்க்கைப் போராட்டம் இணைந்த வண்ணம்
ஆகலாம் சான்றோர் தாழ்த்தி - உனைப்
பேசலாம்
உனை நீ நம்பு...

கோண்டாவிலில் ஒரு மையம் - அமைத்து
மலர்கின்றாய் முல்லையாய் உன் அன்பின்
உச்சத்தால் எம் சமூகம் தவள்கின்றது
உன் மடியில் பிள்ளையாய்...

பாதை நீண்டு கொண்டே போகலாம்
பயணம் தொடர்ந்த வண்ணமாகலாம்
அது போல் உன் பணியும் நடந்து
கொண்டே போகணும்...

உன் தூய மனதைத் தொடர்ந்து
வளர விடு இன்னும் தெளிவாய் உன்
துடிப்பான பணியின் சிறப்பை அறிவாய்
ஞான வீர சன சமூக நிலையமே...

சிவநேசன் பிருந்தா
முன்பள்ளி ஆசிரியை (Dip. in Primary)

# முன்பள்ளி

குழந்தைகளின் இல்லமாய்
முன்பள்ளி என்னும் பூங்கா
அதிலே ஓடித் திரியும் மழலைகள் - அந்த
மழலைகளின் சிரிப்பொலி
வீணையின் நாதத்தை விட
மனதினை இதமாக்குகின்றன
இனிய ஓசையாய்...

நான்கற்ற முன்பள்ளி - இன்று
நான் கற்பிக்கும் என்பள்ளி
கண்மூடும் நேரம் எல்லாம் - மாணவ
கண்மணிகள் கண்ணுக்குள்ளே
கலையோடு கதைசொல்லியும்
ஆடியும் பாடியும் நாம்
மீண்டும் மாணவரானோம்

முன்பள்ளி என்னும் இன்பத்தில்
என்னை இன்னோர்
தாயாக எண்ணிய மழலைகள்
பசுமை மிக்க மலர்தோட்டம் - இங்கு
பரவசப்படும் பல பைங்கிளிகள்
உள்ளன உயரப்பறக்க...

குழந்தைகளின் கள்ளமில்லா சிரிப்பும் அழுகையும்
ஒருங்கே இணைந்த முன்பள்ளி
சிறார்களின் சின்னச் சின்ன வீரக் குறும்புகள்
சிறிய மழலையிலேயே
மனதினை மயக்க வைக்கும்
இனிய பேச்சுகள்...

அகரம் சொல்லி அவர்களை
சிகரம் தொட வைக்கும் வரை
ஓயாது எம் ஆசிரியப்பணி
காயாது எம் வியர்வைத்துளி.

கஸ்தூரி சிவலிங்கம்,
ஆசிரியை, ஞான வீர முன்பள்ளி.
(Dip. in Primary)

# எது வெற்றி?

பூமியில் புத்திரர் பிறப்பது வெற்றி
பூவாய் மலர்ந்து சிரிப்பது வெற்றி
வாழ்க்கை தோட்டத்தை வளர்ப்பதும் வெற்றி
வரும் தடையை உடைத் தெறிதல் வெற்றி
முன்னேற்றப் பாதையில் தோல்விகள் அது
வெற்றி
முரண்பாடுகள் அது நாளை புதியதோர் வெற்றி
தோல்விகள் வெற்றிப்படி தேடு அது வெற்றி
தோழமைகள் உருவாகி தோள் கொடுக்கும்
அது வெற்றி
கல்விக் கண் திறந்தால் ஞானம் அது வெற்றி
கண்மடல் திறந்தால் காட்சி தரும் அது வெற்றி
கார்மேகம் உருண்டால் நீர்சொரியும் அது
வெற்றி
கண்விழித்து பூமித்தாய் சிரிப்பாள் அது வெற்றி
பேனா முனையில் எழுத்துகள் அது வெற்றி
போர் முனையில் படைவீரர் விழுவது வெற்றி
சூரிய ஒளி வயல்மீது விழுவது வெற்றி
சோறு பசி தீர்க்கும் அது வெற்றி
தொலைக்காட்சி தரும் காட்சி அது வெற்றி
தோற்றத்தால் நாம் பார்ப்பது அது வெற்றி
படைவீரர் எல்லை தாண்டுவது அது வெற்றி
பாரெங்கும் புகழ்ந்து சிரிப்பது அது வெற்றி
ஆசானின் அறிவுரை கேட்டால் அது வெற்றி

ஆ. ரேகா
13 கலை 2014
யா/இந்துமகளிர் கல்லூரி

# எங்கள் சனசமூக நிலையம்

ஞானவீர சனசமூக நிலையம்
எங்கள் ஞானங்களில் இருப்பிடம்
வீரமுள்ள நிலையமாய்
வீரர்களை சுமந்து நிற்கும் நிலையம்
எங்கள் சனசமூக நிலையம்

அன்பான நிலையமாய்
அறிவின் இருப்பிடமாய்
கல்வியைப் புகட்டுவது
எங்கள் சனசமூக நிலையம்

அம்மாவின் பாசமும்
அப்பாவின் கருணையும்
ஒன்றாய் கிடைக்கும் நிலையம்
எங்கள் சனசமூக நிலையம்



பாசத் தலைவர்களின் வழிகாட்டல்கள்
பாசங்களின் இருப்பிடமாய்
முன்னோரின் முதுரைகள்
முயன்றோரின் சாதனைகளாய்
எழுந்து நிற்கின்றது
எங்கள் சனசமூக நிலையம்

முன்வாழ்ந்த முருகேசுவின்
முற்போக்கு சிந்தனையால்
முன் மாதிரியாய் நிற்கும் நிலையம்
எங்கள் சனசமூக நிலையம்

1947ல் சிதைந்து 2003ல் பொலிவுற்றது
மங்காத புகழுடன் மைந்தர்கள் பலரை
வளர்த்தெடுத்த நிலையம்
வளமுடன் வளர்ந்து நிற்கிறது
எங்கள் சனசமூக நிலையம்

எதிர்காலத் தலைவர்களின் அத்திவாரம்
மாணவர் மறுமலர்ச்சிக் கழகம்
மறுமலர்ச்சிகளின் எழுச்சி
எங்கள் சனசமூக நிலையம்
வளமுடன் வாழ்க - என்றும்
வளமாய் வாழ்க...

செல்வி த. எழிலரசி
ஆசிரியை,
Guide கல்வி நிலையம்,
கோண்டாவில்.





50வது ஆண்டு விழாவின் போது வானொலி செய்தி நிகழ்ச்சி



50வது ஆண்டு விழாவின் முதியோர் கௌரவிப்பின் போது

20.04.1997

# மாணவர் கட்டுரைகள்



# நன்றி மறவேல்

மனிதராகப் பிறந்த நாம் பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்து விடலாகாது. நாங்கள் என்றுமே தனித்து வாழ்ந்துவிட முடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரதும் உதவியைப் பெறவேண்டியிருக்கும். அவ்விதமாக நாம் பெறும் உதவியை என்றும் நினைத்திருக்க வேண்டும். அதனையே வள்ளுவப் பெருந் தகை

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

எனக் கூறி யுள்ளார். அதாவது எமக்குப் பிறர் செய்த உத வியை என்றும் நினைத்திருத்தல் வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீமை செய்திருந் தால் அதனை நாம் உடனே மறத்தல் வேண்டும்.

அதே போன்று எமக்கு எவராயினும் செய்யும் உதவி பெரிதாகவும் இருக்கலாம், சிறிதாகவும் இருக்கலாம். ஆனால் அவ் உதவி தக்க தருணத்தில் செய்திருந்தால் இவ் உலகை விடப் பெரிதாகக் கருத வேண்டுமெனக் கூறும் வள்ளுவர்

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"

என விளக்கியுள்ளார்.

எனவே மாணவராகிய நாம் நன் றியை மறவாத சிறந்த மாணவர்களாக இவ் உலகில் திகழ வேண்டும்.

ச. அபினயன்,
தரம் - 05,
யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை



# காவியங்கள் கண்ட கற்பின் செல்விகள்

தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாதையில் காவிய காலம் என்று சிறப்பிக்கப்படுவது சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலம் என்று வரலாற்றாய்வாளர்கள் உரைப்பர். ஆனால் காவியம் என்பது சோழர் காலத்திற்கு முன்பே தோன்றிவிட்டது என்பது பொதுவான கருத்தாக அமைகின்றது. எது எவ்வாறாயினும் காவியங்கள் யாவும் எமது தமிழ்மொழியை அழகு செய்கின்றன என்றால் அதில் சிறிதேனும் ஐயம் ஏற்பட இடமில்லை என்றே கூறிவிடலாம்.

தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் என்ற நிலையில் சிலப்பதிகாரம், மணி மேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவிகசிந்தாமணி, சூளாமணி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் என்பனவும் பெரியபுராணம், கந்த புராணம் போன்ற பக்தியிலக்கியங்களும் இதிகாசங்கள் புராணங்கள் போன்ற வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்கள் என்ற பகுதிக்குள் அடக்கிக் கூறப்படத்தக்கவை என்பர்.

காப்பியம்/ காவியம் என்பது சில வரையறைக்குட்பட்டே அமைந்து விடுகின்றது. அவ்வரையறைகளையே காவிய இலக்கணம் என்று கூறுவர். பெரும்பாலும் பெருங்காப்பியங் களுக்குரிய இலக்கணங்களாகத் தன் னிகரில்லாத் தலைவன் ஒருவன் இருத்தல், தன்னிகரில்லாத் தலைவி ஒருத்தி இருத்தல், அவர்களின் நாடு நகரச் சிறப்புகள் மற்றும் புருடார்த்தங்கள் பற்றிய விளக்கங்கள் அமைந்து காணப்படுவதாகும். இதில் ஏதாவ தொரு குறைபாடு அமையுமாயின் அவை சிறு காப்பியங்கள் என்றே அழைக்கப்படும்.

தமிழில் எழுந்த காப்பியங்கள் அனைத்தும் பெண்களின் நலத்தைப் பாடுவ தைப் பொருளாகக் கொண்டிருக்கின்றன. அதிலும் கற்பின் செல்விகள் பற்றிப் பாடாத காப்பியங்கள் இல்லை என்றே கூறிவிடலாம். சிலப்பதிகாரத்திலே சோழநாட்டின்காவிரி பூம்பட்டிணத்திலே தோன்றிக் கற்பின் பெருமையையே உலகிற்குணர்த்திய வணிகர் குலப் பெண்ணான கண்ணகி தன் கற்பின் வலிமையால் தெய்வமாக உயர்ந்து நின்றாள். இன்று இந்துக்கள் கண்ணகி வழிபாட்டில் பக்தி பூர்வமாகத் திழைத்தி ருப்பதும், கண்ணகி கதையை நாடகமாக, கூத்துகளாக நடிப்பதும் கண்ணகியின் கற்பின் வலிமையை எமக்கு எடுத்து விளக்கு கின்றது.

கண்ணகியின் கணவன் கோவல னுக்கும் மாதவி என்ற நாடக மங்கைக்கும் பிறந்தவள் மணிமேகலை. துறவறம் பூண்டு நின்று உலகில் அறம் தழைக்க அரும்பாடு பட்டாள் எனில் மணிமேகலையும் ஒரு கற்பின் செல்வியாக எண்ணத் தோன்று கின்றது.

பெரிய புராணத்தில் அமைகின்ற கற்பின் செல்விகள் என்ற நிலையில் திலக வதியார், பாண்டிமாதேவி, மங்கயற்கரசியார் போன்றோரை எடுத்துக் காட்டலாம். தமது கற்பின் வலிமையால் இறைவனை வண ங்கி, மாம்பழம் வரவைத்த கதையும், இறைவனால் அம்மையே என்று அழைக் கப்பட்டமையும், என்றும் நடராஜப் பெருமா னின் திருநடனத்தைக் காணும் பேறுபெற்றுக் கைலயங்கிரியிலே தங்கியிருந்ததையும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இதிகாசக் காவியங்களாகிய கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற வற்றிலே கற்பின் செல்விகள் பலரைக் காவிய கர்த்தாக்கள் அறிமுகம் செய்துவிடுகின்றனர். அந்த வகையில் கம்பராமாயணத்திலே சீதா பிராட்டியின் கற்பு நிலைக்கு எதிர்நிற்க இயலாது இலங்கை வேந்தன் இராவணனே தோற்று விடுகின்றான். கற்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த சீதா பிராட்டி இன்று தெய்வ நிலைக்கு உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மகாபாரதத்திலே காந்தாரி, திரௌபதி போன்ற பெண்களின் கற்பு நிலை விரிவாகப் பேசப்படுகின்றது. ஐந்து பேருக்கு மனைவியான போதும் கற்பில் நின்றும் சற்றும் வழுவாத கற்புக்கரசியாகத் திகழ்ந்தமையால் தான் இன்று திரௌபதி அம்மன் வழிபாடு தோற்றம் பெற்றது எனலாம்.

மகா பாரதத்திலே வரும் கிளைக் கதைகளே, சத்தியவான் சாவித்திரி கதை, நளதமயந்தி கதை, அரிச்சந்திரன் கதை என் பவையாகும். இக்கதைகளிலும் பெண்களின் கற்புநிலை மிகவும் விரிவாகப் பேசப்படுகின் றன. அந்த வகையில் சாவித்திரி என்ற பெண் தனது கணவனுடைய உயிரை யமன் கவர்ந்து சென்றபோதும் தனது கற்புநெறியால் யம லோகம் சென்று தனது புத்திசாதுர்யத்தால் கணவன் உயிரையே மீட்டுவந்து தெய்வத் திற்கே கற்பின் வலிமையை உணர்த்தி யவளாகத் திகழ்கின்றாள். அதேபோல் விதரப்ப நாட்டின் மன்னன் வீமராஜனின் மகள் தமயந்தி விதிவசத்தால் பிரிந்த கணவனைத் தன் கற்பின் வலிமையால் மீட்டுச், சிறப்பான வாழ்வை அமைத்துக் கொண்டமை சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறாகத் தமிழ்க் காப்பியங் களிலும் வடமொழிக் காப்பியங்களிலும் பெண்களின் கற்புநிலையை மேம்படுத்தி கதை அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்ற வாக்குக்கிணங்க வாழ்ந்து காவியங் களாகி விட்ட கற்பின் செல்விகளை நாமும் போற்றி வாழ்வோமாக.

ஈ. அம்ஸவி,
தரம் - 07
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



# முதியோரைப் பேணுவோம்

வயதில் மூத்தவர்களை முதியோர் என்போம். இவர்கள் சமூகத்தின் முதுகெலும்புகளாவர். மனித வாழ்வில் முதுமை என்பது தவிர்க்க முடியாததும் யாவருக்கும் பொதுவானதுமாகும்.

தற்கால சிறியோர் முதியவர்களை மதிப்பது, பராமரிப்பது போன்ற கடமைகளைச் செய்யத் தயங்குகின்றனர். முதியவர்களும் பிள்ளைகள் இருந்தும் இல்லாதது போல் வாழ்கின்றனர். சில பிள்ளைகள் பெற்றோரை கண்கண்ட தெய்வங்கள் போல் பராமரிப்பது மறுப்பதற்கில்லை.

முதியவர்களாலேயே எமது கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் இன்று வாழுகின்றன. அதாவது அவற்றைப் பேணி, கடைப்பிடிப்பதற்கு உறுதுணையாக நிற்பவர்கள் முதியவர்களே! முன்பு எமது முதியவர்களால் கலாசாரம் பேணப்பட்டு வந்த கலாசாரம் தற்போது அருகி விட்டது.

முதியோர் தினம் ஒக்டோபர் 1ம் திகதி கொண்டாடப்படுகின்றது. சிறுவர்களாகிய நாம் முதியவர்களுக்காக என்ன செய்கின்றோம்? சிறு சிறு உதவிகளாவது பொது இடங்களில் செய்கின்றோமா? சிந்திக்க வேண்டும். நாமும் ஒரு காலத்தில் முதுமை அடைவோம் என்பது இயற்கையே. "காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்" இது ஒரு முதுமொழி.

நாம் முதியோருக்குச் செய்யும் உதவிகளாக வீதியைக் கடக்க உதவுதல், வரிசையில் நிற்கும்போது முன்னுரிமை கொடுத்தல், அவர்கள் அறிவுரைக்கு ஏற்ப செயற்படல், நோய்வாய்ப்படும் போது உதவுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

முதியவர்கள் முதுமையில் தாம் வாழ்ந்த வாழ்க்கையைச் சிந்திப்பார்கள். தம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் தான் அவர்களது உலகமாக இருக்கும். அவர்களது மேன்மையில் இன்பம் காணும் உள்ளம் கொண்டவர்கள் முதியவர்கள். இச் சமூகம் சிறப்பாக வாழவேண்டும் என்பதற்காக பாடுபட்டவர்கள்.

நாளைய சமுதாயத் தூண்களாகிய எம்மைப் போன்ற சிறார்கள், கட்டடம் நிலையாக நிற்க உதவும் அத்திவாரம் போன்ற முதியோரை மறக்கலாமா? சிந்திக்க வேண்டும். அவர்களை மதித்து, பணிந்து எதிர்காலத்தில் மிகச் சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோமாக!

எழுந்திடுவீர்!
முதியவர்களை
பராமரிப்பீர்!

சி. ஆரணி
தரம் - 07
யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை



# சிறந்த அறநூல்களும் அவற்றின் விழுமிய சிந்தனைகளும்

"அறத்தான் வருதே இன்பம் மற்றெல்லாம் புறத்தே புகழுமில"

என்பது வள்ளுவர் வாய்மொழி. அந்த வகையில் அறம் என்பது பாவங்களை அறுத்தல், தீமைகளை அறுத்தல், ஆசையை அறுத்தல் என்ற பொருளில் அமைவது குறிப்பிடத்தக்கதாகும். மனிதனுடைய வாழ்வு அறத்தோடு கூடியது என்பது பொதுவான கருத்தாகும். மனிதன் என்பவன் மனம் உடையவன். அதாவது பிறருக்குத் தீங்கு விளைக்காது மனம், மொழி, மெய்களால் நன்மை புரிய வேண்டும் என்ற மனம் மிக்கவன் என்ற கருத்து அறம் என்ற சிந்தனைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகின்றது.

அதனாலேயே அறம் என்ற சிந்தனையை விளக்குகின்ற அடிப்படை நோக்கோடு இலக்கியங்கள் செய்யப்பட்டன. இலக்கியங்களின் பிரதான நோக்கம் அறக் கருத்துகளை மக்கள் மனங்களில் மிகுவித்து அதனை உலகில் நிலைநாட்டுவதாகும். மதம், மொழி, கலாசாரங்களைக் கடந்த நிலையில் அறம் என்ற எண்ணக்கரு சமய, பண்பாட்டு, வாழ்வியல் நெறிகள் ஊடாக உலகத்தில் நிலைபெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு நூல்கள் இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இலக்கியங்களிலும் அதற்கு முன்பும் அறம் என்ற சிந்தனை மேன்மைப் படுத்தப்பட்டே வந்துள்ளது. வேத இலக்கியங்களில் அறத்தின் காவலனாக வர்ணன் என்ற தெய்வம் வர்ணிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இதிகாசங்களில் அறம் முதன்மை பெற்றுத் திகழ்ந்தது. அறம் தாழ்த்து, மறம் ஓங்கும் போது மறத்தை அழித்து அறத்தை நிலைநாட்ட யுகம் தோறும் அவதாரமெடுப்பதாக பகவத்கீதையிலே கிருஷ்ண பரமாத்மா அருளியிருப்பது மனங்கொள்ளத்தக்கது.

மனித வாழ்வில் தான் உறுதிப் பொருட்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். இந்நான்கு உறுதிப் பொருட்களுள்ளும் அறமே தலையாயதாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இதனையே ஔவை ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல் பொருள் என்று விளம்புகின்றார். அத்தோடு "அறஞ்செய்ய விரும்பு" என்று ஆத்திசூடியில் அறிவுறுத்துகின்றார். இந்த அறமே சத்தியமாக அரிச்சந்திரன் கதையிலும், செய்ந்நன்றியாக கர்ணன், கும்பகர்ணன் போன்ற பாத்திரங்களுடாகவும் எடுத்துக் கூறப்படுகின்றது. இவையே உயர்ந்த விழுமியங்கள் என்ற நிலை போற்றப்படுகின்றன. குருவை மதித்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், வலிமை அற்றோருக்கு உதவுதல் போன்ற இன்னோரன்ன விழுமிய சிந்தனைகள் அற நூல்களிலே போதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க மருவிய காலம் அறநெறிக்காலம் என்று சிறப்பிக்கப்படுகின்றமை நோக்கத்தக்கது. இக்காலத்தில் எழுந்த பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் தலையாய திருக்குறள் சிறந்ததொரு அறநூலாகும். சமயம், மொழி, இனம் என்ற வரையறை கடந்து நின்று எல்லோர்க்கும் பொதுவான அறத்தை வலி யுறுத்துவதில் திருக்குறளுக்கு நிகர் வேறில்லை என்றே கூறிவிடலாம். வள்ளுவர் தனது 133 அதிகாரங்களிலும் அதாவது சுமார் 380 குறள்களை அறம் கூறுவதற்காக சிறப்பாக அமைத்துள்ளமை அறநெறியின் உன்னதத்தை வெளிப்படுத்துவதாக ஆகும்.

திருக்குறளோடு நாலடியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக் கோவை

போன்ற நூல்களும் அறநெறியை வலியுறுத்தி அதனூடாக விழுமியக் கருத்துகளை விளம்பி நிற்கின்றன.


மனித வாழ்வு அறநெறியோடு அமைய வேண்டும் என்பதே நூல்கள் அனைத்தினதும் ஒட்டுமொத்தமான கருத்தாகும். "அறனெப்ப ட்டதே இல்வாழ்க்கை" என்பது வள்ளுவன் வகுத்த வாழ்வியல் சிந்தனையாகும். இந்த வள்ளுவன் வாய்மொழியைப் பின்பற்றி நூல்கள் செய்தோர் எண்ணிலடங்காதோர்.

அறக்கருத்துகளை மிகவும் முதன்மைப்படுத்திக் கடைப்பிடிப்பவர்கள் என்ற நிலையில் சமண மதத்தவர்கள் குறிப்பிடக் கூடியவர்களாவர். அறத்தைப் போதிப்பதே வாழ்வு என்றும் விழுமிய சிந்தனைகளைக் கடைப்பிடித்தலே இறைவனை வணங்கும் நெறி என்றும் கூறியதோடு அவற்றை வாழ்வியலில் கடைப்பிடித்தும் வெற்றி கண்டவர்கள் சமண பௌத்தர்கள். அவர்களின் பஞ்சசீலம், அட்டசீலம், தசசீலம் ஆகிய கொள்கைகள் மிகவும் உயர்வானவை.

இந்து சமய இலக்கியங்களாகிய திருமுறைகள், நாலாயிரம் திவ்விய பிரபந்தங்கள் என்பவையும் பக்தியின் மூலம் அறத்தைக் கடைப்பிடிக்கும் மார்க்கங்களை விளம்பி நிற்கின்றன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது வாழ்வில் அறநெறியைக் கடைப்பிடித்து முன்னுதாரணமாகத் திகழ்ந்து மறைந்துள்ளனர். இவர்கள் படைத்த நூல்கள் இன்னும் காலத்தால் அழியாத காவியங்களாக நிற்கின்றன எனின் மிகையல்ல.

அந்த வகையில் அறம் என்ற உன்னதமான விழுமிய சிந்தனை மொழி, மத, இனங்களைக் கடந்த நிலையில் உயர்வான வாழ்வியல் நெறியாக அமைந்துள்ளமையை மேற்கொள்ள நூல்கள் சான்றுகளாக எடுத்துக் கூறுகின்றன எனின் மிகையல்ல. அறநெறியைப் போற்றுவோம், அகிலம் போற்ற வாழ்வோம்.

ஈ. அபிநயமேனன்,
தரம் - 09
யா/பரியோவான் கல்லூரி
(சென்ஜோண்ஸ்)



# விடா முயற்சி வெற்றியைத் தரும்

உலகில் வாழ்ந்த பெரியோர் "முயற்சியே வெற்றிக்கு அடிகோலுவது" என தம் அனுபவத்தால் கூறியுள்ளனர். பல ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும், வீரர்களும் ஆரம்பத்தில் தோல்வியை முகங்கொடுத்த போதிலும் அயராத முயற்சியால் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்கள் ஏராளமுண்டு.

கடின உழைப்பின்றி எதனையும் சாதிக்க முடியாது. தோமஸ் அல்வா எடிசன் எனும் விஞ்ஞானி ஒரு நாளில் இருபத்தொரு மணி நேரம் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ஆய்வுகூட மேசையில் விஞ்ஞான நூல்களையே தலையணையாகப் பயன்படுத்தி நித்திரை செய்தார். மறைந்த பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒரு நாளில் பதினேழு மணி நேரமும் கடினமாக உழைத்தார். அவருக்கு விடுமுறை நாளே இல்லை என்பர். உலகம் போற்றும் உத்தமர் காந்தி இரவு பகலாக நாட்டுக்கும் மக்களுக்குமாக உழைத்தார். அவ்வுழைப்பின் பயன்தான் பாரத நாட்டின் விடுதலை சுதந்திரம்.

மாவீரன் நெப்போலியன் போரிலே தோல்வி உற்றமையால் வேதனைப்பட்டு ஆழ்ந்த துயருற்றிருந்தான். இனி மீட்சியே இல்லை என்ற ஏக்கத்தில் இருந்தவேளை விடா முயற்சியுடன் சிலந்திப் பூச்சிக்கு இத்தனை அயரா முயற்சியா? வெற்றியும் கண்டு விட்டதே! என்ற ஆச்சரியத்துடன் மீண்டும் போரிட ஆயத்தமானான். சரித்திரத்தில் இடம் பெற்றான். அத்துடன் முயற்சிக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தான்.

இலக்கிய மேதை இலிங்கன் குடிசையில் பிறந்து, படிப்பதற்கு விளக்கின்றி இரவில் அடுப்பின் நெருப்பின் ஒளியில் புத்தகத்தில் கல்வி கற்றார். கடும் உழைப்பின் பயனாகத் தன் வாழ்நாளிலே என்றும் கற்பனை செய்து பாராத அளவுக்கு உயர்ந்தார். மாபெரும் மனிதனாக அமெரிக்காவின் ஜனாதிபதியாக வளர்ந்ததன் காரணம் விடா முயற்சியும் உழைப்புமே ஆகும்.

இயற்கை எத்தனை விந்தைகளை எமக்குக் காட்டுகின்றது. ஒரே சீராக இயங்கும் நவகோள்களும் முயற்சியுடன் இயங்குவதை கண்ணுற்றாவது மானிடம் சீராக முயற்சியுடன் இயங்க வேண்டும். இன்று விழுந்தால் நிச்சயம் இருளும். அதில் எந்தத் தடங்கலும் இல்லை. இதே போல் மனிதனும் எந்த வேலையையும் தொடங்கி ஆர்வத்துடன் பிற்போடாது நிறைவேற்றினால் வெற்றி நிச்சயம்.

நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்த உழவன் சோம்பேறியாய் இருந்தால் ஏழை மக்கள் பட்டினியாலன்றோ வாட வேண்டும்? இதனை சான்றோர் "உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர்" என்றார்கள். ஏனையோர் அவனின் பின் செல்வர். பின் சென்றாலும் தத்தமது தொழில்களை முயற்சி / விடா முயற்சி, என்பவற்றுடன் செய்யின் உயர்ச்சி பெறலாம். மேலும் வள்ளுவர் வறுமையில் வாழ்தல் இயலாது வறுமையின்றி வாழ முயற்சி தேவை என வலியுறுத்தினார். பாரதியார் சோம்பல் மிகக் கெடுதி பாப்பா என வலியுறுத்தி சிறுவயது தொட்டே முயற்சியுடன் சுறுசுறுப்புடன் இயங்கினால் நிச்சயம் எம் காரியங்கள் யாவும் சிறக்கும் என்றார். எனவே விடா முயற்சியுடன் விஸ்வ ரூப வெற்றியை அடைவோம்.

வி. பிரணவகாணன்,
தரம் - 11
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

# கல்வியே அழியாச் செல்வம்

மக்கள் உடம்பில் பிறந்தவர்களாகிய மாந்தர்கள் எப்பொழுதுமே அழியாச் செல்வங்கள் மீதுதான் விருப்பினைக் கொள்வார்கள். அவர்கள் அறியாமையால் மூடப்பட்டு இருக்கின்றனர்.

நிலையான செல்வத்தை நிலையற்றதாகவும் நிலையற்ற செல்வத்தை நிலையானதாகவும் எண்ண வைப்பது அறியாமை ஆகும். இவ் அறியாமையானது பாசி மூடிய பவளத்தைப் போலவும் சிப்பியினுள் மறைந்த முத்தின் பிரகாசத்தைப் போலவும் கூடை கவிழ்த்த விளக்கின் ஒளியைப் போலவும் அறிவை அறியாமை என்கின்ற இருள் சூழ்ந்து விடுகின்றது. இதுவே அழிவடைகின்ற பொருட்கள் மீது மாந்தர்கள் நாட்டம் கொள்ள காரணமாக அமைகின்றது.

மாந்தர்கள் துணி மணிகளை வாங்குகின்ற பொழுது ஓர் இரு நாளில் கிழிந்து போகும். சீமைத் துணிகளைத் தவிர்த்து பத்து, பன்னிரண்டு கிழமைகள் நீடித்து உழைக்கக்கூடிய நம் நாட்டு புடைவைகளையே சற்று அதிகமானாலும் அதனை விலை கொடுத்து வாங்க விளைகின்றனர். இவற்றில் அழியாததைப் பெற விரும்பும் மனிதர்கள் அறியாமையால் அழிவடையக் கூடிய செல்வங்களைத் தேட விளைகின்றனர்.

ஹைதராபாத்திலும் வாணியம்பாடியிலும் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கினால் அந்த நகரமே அழிந்து போனது. அப்போது பெரும் செல்வந்தர்கள் எல்லோரும் தம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஏழைகளைக் காட்டிலும் இழிந்த நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இவ்வாறு இயற்கை அனர்த்தங்களினால் மட்டுமல்லாது யுத்த நடவடிக்கைகளினாலும் இப்பொருட் செல்வம் அழிவடைந்து செல்லக்கூடியது.

பொருட்செல்வம் பருப்பொருளாகக் காணப்படுகின்ற காரணத்தால் புற உலகில் வெற்றுக் கண்ணால் காணக்கூடியதும் தொட்டுணரக் கூடியதுமாக இருப்பதனால் வெள்ளத்தாலும், வெந்தணலாலும் அழிவடையும், கள்வர்களால் கவரப்படும், காவலுக்கு கடினம், கொடுக்க கொடுக்க குறைவடையும் முதலான தன்மைகளை அது கொண்டிருக்கும்.

ஆனால் கல்விச் செல்வமோ வெற்றுக் கண்ணுக்குத் தென்படாது, தொட்டுணர முடியாததுமான நுண் பொருளாக விளங்குகின்ற காரணத்தால் நெருப்பால் வேகாது, வெள்ளத்தால் அழியாது, வேந்தர்களால் கவரப்பட மாட்டாது, காவலுக்கு மிக எளிது கள்வர்களால் கொள்ளையிடப்பட மாட்டாது, கொடுக்க கொடுக்க குறைவடையாது போன்ற தன்மைகளை அது கொண்டிருக்கும். இதனால் தான் திருவள்ளுவரும் இவ் வேறுபாட்டினை,

"கேடில் விழுச் செல்வம் கல்வி
ஒருவர்க்கு மாடல்ல மற்று பிற"

என்றார்.

ஓர் அரசனுக்கு தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு, ஆனால் கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்காதவனை இந்த உலகம் ஏற்காது. ஒருவனிடத்தில் கல்வி இருக்குமாக இருந்தால் அவனைத் தேடி செல்வம் வரும். ஆகவே நாம் சென்ற இடமெல்லாம் சிறப்பு பெற்று வாழ கல்வி கற்க வேண்டும்.

வே. பிரவீன்,
தரம் - 11
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

# ஞானவீர சனசமூக நிலையம்




பா.கஜானி
தரம் 11
யா/ இந்து மகளிர் கல்லூரி



புதிய மேல்மாடிக் கட்டிடத்தை மாவை சேனாதி ராஜா(பா.உ) மங்கள விளக்கேற்றி திறந்து வைத்த போது

19.01.2003




2010 ஆம் ஆண்டு சனசமூக நிலையங்களில் முதல் பரிசை

உபதலைவர் சு.விஜிஜேந்திரன் பெற்ற போது

# கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

1. நீ அழுதால் அவனும் அழுவான். நீ சிரித்தால் அவனும் சிரிப்பான். அவன் யார்?

2. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?

3. கடல்நீரில் வளர்ந்து மழைநீரில் வாடினான். அவன் யார்?

4. பல்லிருக்கு ஆனால் கடிக்காது. அது என்ன?

5. மழையில் நனைவேன். வெயிலில் காய்வேன்.
வெளியில் விரிவேன். வீட்டில் சுருங்கு வேன். நான் யார்?

6. மேல் ஏறிச் செல்லும் விமானமும் அல்ல. தண்ணீரில் உண்டு குளமும் அல்ல. அது என்ன?

7. இதயம்போல் துடிப்பிருக்கும். இரவுபகல் விழித்திருக்கும். அது என்ன?

8. ஆயிரம் பேர் வந்தாலும் வந்த சுவடு தெரியாது?

9. உயர எறிந்தால் தரையில் விழுவான். தரையில் எறிந்தால் உயர எழுவான். அவன் யார்?

10. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான். வெளியே வந்தால் விரைவில் மடிவான். அவன் யார்?

# பொது அறிவு

1. வரிவிதிப்பு இல்லாத நாடு
- வடகொரியா

2. காக்கை இல்லாத நாடு
- சிங்கப்பூர்

3. ஆறுகள் இல்லாத நாடு
- சவூதி அரேபியா

4. பாம்புகள் இல்லாத நாடு
- அயர்லாந்து

5. வருமானவரி இல்லாத நாடு
- குவைத்

6. பிரதமரும் மந்திரியும் இல்லாத நாடு
- சுவிற்சர்லாந்து

7. கரடி இல்லாத நாடு
- ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா

8. குரல் இல்லாத மிருகம்
- ஒட்டகச்சிவிங்கி

9. நீர் அருந்தாத மிருகம்
- கோலாகரடி

10. வியர்க்காத மிருகம்
- நாய், சுண்டெலி


11. வாயுமண்டலம் இல்லாத கிரகம்
- சந்திரன்

12. நச்சு இல்லா பாம்பு
- மலைப்பாம்பு

ரமேஸ்கரன் யதுசன், தரம் - 02,
யா/ கொக்குவில் இந்து கல்லூரி.

# My self

My name is Sathvigan.
I'm nine years old.
I live at Kondavil.
My father's name is Sivasakthivel.
He is a principal.
My mother's name is Ananthajothy.
She is a teacher.
My sister's name is Arani.
She is a student.
I'm the youngest in my family.



I'm in grade four.
I study at J/ Jaffan Hindu Primary School.
My favourite subject is Maths.
My hobby is playing games.
I would like to be an Engineer one day.

S. Sathvigan,
Grade - 04.
J/Jaffna Hindu Primary School

# My Hobby

My hobby is reading story books. It is an interesting hobby. I get book from our school library. I started this hobby about six years ago.

I read Tamil and English books. I can improve my knowledge from this hobby. Reading makes a full man in this society. Every one must read a lot. I like my hobby very much.

S. Arani
Grade - 07
J/Vembady Girls High School



வினாடி வினாப்போட்டியில் நிலைய அங்கத்தவர்கள் பங்கு பற்றிய போது



விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக நிலையத்தைச் சார்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாக முன்பள்ளி மாணவர்களினால் அழைத்து வரப்பட்ட போது


# கண்டுபிடித்தவை:



**(பக்கம் 18 விடைகள்)**

1. கண்ணாடி
2. எறும்பு
3. உப்பு
4. சீப்பு
5. குடை
6. முகில்
7. கடிகாரம்
8. எறும்பு
9. பந்து
10. மீன்

# ஆய்வுக் கட்டுரைகள்



# வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி

## மானிடப் பிறவியின் மாண்பு

இந்தப் பிரபஞ்சத்தில் பல்லாயிரக் கணக்கான ஜீவராசிகள் வாழ்கின்றன. இந்த ஜீவராசிகள் அனைத்திலும் மானிடப் பிறப்பு மிகவும் உயர்வானது. பகுத்தறிவு மானிடப் பிறப்பிற்கு மட்டுமே உண்டு. ஞான பண்டிதனாகிய முருகப் பெருமானின் வேண்டுகோளுக்கு அமைய அரிது, பெரிது, இனிது, கொடிது என்பன பற்றிப் பாடிய முதல் வரியிலேயே "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றே பாடுகின்றார். மானிடப் பிறவியிலும் கூன், குருடு, செவிடு ஆகிய உடற்குறைபாடுகள் எதுவும் இல்லாமல் இந்த மண்ணிற் பிறந்த குழந்தை வளர்ந்து சிறுவனாக, வாலிபனாக, குடும்பத் தலைவ னாக மாறுகின்ற காலங்களில் பல்வேறு உலகியல் ஆசைகளுக்கு ஆட்பட்டு தனது வாழ்வினை நடத்துகின்றான்.

நமக்குக் கிடைத்த இந்த மானிடப் பிறப்பின் மாண்பினைப் பற்றி வாழும் காலத்தில் சிந்திப்பதில்லை. "கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" என்ற சித்த புருக்ஷரின் வாக்கிற்கு அமைய மகத்தான மானிடப் பிறவியை எடுத்தும் அதனைச் சரியாகப் பயன்படுத்தாமல் அழிந்தவர்கள் பலரை நாம் உலகியலில் காண்கின்றோம். ஆடாத ஆட்டம், தேடாத தேட்டம், கூடாத கூட்டம் எல்லாம் கூடி வாழ்நாளை வீழ்நாளாக்கிவிட்டு வயோதிபக் காலத்தில் தங்கள் செயலுக்காக வருந்து பவர்கள் பலரைப் பார்க்கின்றோம்.

"நில்லா உலக வாழ்வை ஏழைநான்
நிலையென்று கொண்டு நித்தம்
பொல்லா வழிகளிலே புத்திகெட்டு அலைந்
திட்டேன்
தாயே ஈஸ்வரி என்னைக் காத்தருள்வாய்
அம்மா"

என்று கழிவிருக்கம் கொண்டு கவி ஞன் ஒருவன் பாடியது போல தள்ளாத வயதில் உடல் உறுப்புகள் யாவும் ஓய்வை நாடிச் செல்லும் வேளையில் சிலருக்கு ஞானம் ஏற்படுவதுண்டு. இவ்வாறு முதுமையில் ஏற்படும் ஞானத்தினால் எதுவித பயனும் இல்லை.

## இளைஞர்கள் சமூகத்தின் ஆணிவேர்

இளைஞர்கள் தான் நமது சமுதாயத்தின் ஆணிவேர். சிறிய வயதில் அவர் ளுடைய சிந்தனைகள் சீர் செய்யப்படல் வேண்டும். நல்லதை நினைக்கவும், நினைத்ததை முடிக்கவும், தடைகளைத் தகர்த்தெறியவும் உரிய பலம் அவர்களிடம் உருவாக்கப்படல் வேண்டும். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுகிறான் என்றே லலிதா சகஸ்ரநாமமும் குறிப்பிடுகிறது.

"நீ எதை நினைக்கிறாயோ அது வாகவே ஆகிறாய், எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளே உள்ளன, உன்னால் எதையும் சாதிக்க முடியும், நீங்கள் ஒவ்வொருவரும் சிறந்தவர்களாக ஆகவேண்டும். ஆகியே தீர வேண்டும்" என்று வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் இளைஞர்களைப் பார்த்துக் கூறுகின்றார். "எழுமின், விழிமின், கருதிய காரியம் கைகூடும் வரை உழைமின், உழைமின்" என்று அனைவருக்கும் உத் வேகம் ஊட்டினார். முயற்சி உள்ளவனுக்குத் தான் இலட்சுமி கடாட்சமும் கிடைக்கும். "முயற்சியுள்ள மானிடரிலே சிங்கம் போன்ற வனையே திருமகளும் அணைவாள்" என்றே

பஞ்சதந்திரமும் கூறுகின்றது. உழைப்பால் உயர்வோம் என்று நினைப்பவர்களுக்கு உந்து சக்தியாகவும், நினைத்ததை முடிக்கும் கர்ம யோகிகளுக்கு ஊக்க விசையாகவும் அன்னை பராசக்தி மிளிர்வாள் என்பதை

**"உய்வம் என்ற கருத்துடையோர்கள்**
**உயிரினுக்குயிராகிய தெய்வம்**
**செய்வம் என்றொரு செய்கை எடுப்போர்**
**செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்"**

என மகாகவி பாரதியார் தனது சக்தி தோத்திரத்திலே வெளிப்படுத்துகின்றார். தன்னடக்கமும் சுயகட்டுப்பாடும் உள்ள இளைஞர்கள் தாங்கள் வாழ்வில் என்றும் உயர்வடைவார்கள்.

## மூன்று வகை மனிதர்கள்

மானிடச் சட்டை தாங்கி இந்த மண்ணிலே வாழ்பவர்களை ஆசை மனிதன், அன்பு மனிதன், அருள் மனிதன் என மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். உலகியல் இன்பங்களை முழுமையாக அனுபவிப்பது தான் வாழ்வின் நோக்கம் என்பது இன்பக் கோட்பாட்டாளர்களின் சிந்தனையாகும். இவர்கள் தமது உடலைப் பேணுவதில் மிகவும் அக்கறையோடு செயற்படுவார்கள். பிற உயிர்களின் ஊனை விரும்பி உண்டு, தமது உடலை வளர்ப்பார்கள். போதை வஸ்துகளையும் மதுபானத்தையும் உள்ளே விட்டு உடம்பின் உறுப்புகளை மயங்கச் செய்து அவற்றைப் பலவீனம் உடையதாக மாற்றுவார்கள். ஊன் உணவுகளை அதிகம் உண்பவர்களுக்கு உடற் பசியும் அதிகரிக்கும். உடற் பசியைத் தீர்ப்பதற்காகத் தகாத உறவுகள் பல கொள்வார்கள். இதனால் தீராத பல நோய்களுக்கு ஆளாகித் துன்பப்படுவார்கள். உலக போகங்களை முற்றாக அனுபவிக்க விரும்புபவன் விரைவில் ரோகியாக (நோயாளியாக) மாறி விடுவான் என்றே சித்த மருத்துவ நூல்களும் கூறுகின்றன.

இத்தகையவர்களிடம் தோன்றும் உலகியல் ஆசைகள் காலப் போக்கில் பேராசையாகப் பரிணாமம் பெற்றுவிடும். பேராசை பெரும் தரித்திரத்திற்கு வழி வகுக்கும் என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. பற்றுக்கும் ஆசைக்குமிடையே வேறுபாடு உண்டு. தன்னுடைய உடமைகளில் விருப்பம் கொள்வது பற்று. பிறருடைய உடமைகளை அபகரிக்க நினைப்பது ஆசை. இந்து தர்ம சாஸ்திரங்கள் பற்றினை அங்கீகரிக்கிறது. ஆசையை நிராகரிக்கிறது. ஆசை மனிதன் மிருக இயல்புகள் உடையவனாக மாறிவிடுவான். மண் ஆசையால் அழிந்த துரியோதனனின் வரலாற்றை மகாபாரதமும் பெண் ஆசையால் அழிந்த இராவணனின் வரலாற்றை இராமாயணமும் எடுத்துக் கூறுகின்றது.

ஆச்சிரம தர்மங்களில் அச்சாணி போல் அமைந்திருப்பது இல்லறம். இல்லற வாழ்விற்குப் பொருள்வளம் அவசியம். "தீவினை விட்டீட்டல் பொருள்" என்றே தமிழ் மூதாட்டி ஔவையாரும் குறிப்பிடுகின்றார். "நன்மையைப் புறக்கணியாதே செல்வ வளத்தைப் புறக்கணியாதே" என்று குரு சிஷ்யனுக்குக் கூறும் அறிவுரையைத் தைத்திரீய உபநிடதத்திலே காணலாம். புலனடக்கம் ஒழுக்கம் என்பவற்றைப் பேணித் தனது கல்வியைப் பூரணமாகப் பெற்று வெளியேறும் மாணவனுக்கு குரு செய்யும் ஆசீர்வாதத்தில் அவனை இல்லற வாழ்வில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றார். "சந்ததித் தர்மத்தை மேற்கொள்வாயாக" என்று கூறுகின்றார். "சக தர்ம பத்தினி ஒருத்தியோடு கூடி இல்லறத்தை நல்லறமாக நடத்துவாயாக" என்று தனது சிஷ்யனை வழிப்படுத்துகின்றார்.

காதலென்ற தூய்மையான தத்துவத்தின் தூய உருவமே திருமணம் ஆகும். "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" எனத் தமிழ் ஔவையாரும் குறிப்பிடுகின்றார். கற்புநெறி தவறாத பெண்ணைப் பத்தினி எனப் போற்றுவது இந்து சமய மரபாகும். தனது ஆன்ம உடமையாக வந்த பெண்ணை வாடச் செய்து விட்டு காம இச்சையிலே அறிவிழந்து செல்கின்ற காளையர்களைத் திருமந்திரம் சாடுகிறது. வீட்டு முற்றத்திலே உள்ள காய்ச்ச பலாவின் கனியை உண்ணாமல் முட்கள் நிரம்பிய ஈச்சம் பழப் பற்றைக்குள்ளே வீழ்ந்து துன்பப் படுகிறார்கள் எனக் கூறுகின்றது.

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ணமாட்டாமல்**
**ஈச்சம் புழத்துக்கு இடர் உள்ளவாறே**

-திருமந்திரம்

இந்து சமயம் உலகியல் வாழ்க்கையைச் சாபக்கேடென்றோ, தண்டனையென்றோ கூற வில்லை. வரப்பிரசாதம் என்றே கூறுகின்றது. புலன்களை அடக்கென்று கூறவில்லை. நெறிப்படுத்து என்றே கூறுகின்றது. அறிவற்ற மூடர்கள் புலன்களை அடக்குங்கள் என்று கூறுவார்கள். தேவர்கள் கூட ஐம்புலன் களையும் அடக்க முடியாது இல்லாத உணர்ச்சியற்ற மரக்கட்டை போலச் சடம் ஆகி விடும் ஐம்புலன்களையும் சிவ சிந்தையில் செலுத்தி ஞானத்தைப் பெற வேண்டும்.

**அஞ்சு மடக்கடக்கென்பர் அறிவிலார்**
**அஞ்சு மடக்கும் அமரரும் அங்கில்லை**
**அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்டு**
**அஞ்சு மடக்கா அறிவறிந்தேனே**

- திருமந்திரம்

ஆசை மனிதன் மிருக இயல்புகள் உடையவனாக மாறிவிடுவான். மண் ஆசையால் அழிந்த துரியோதனனின் வரலாற்றையும், பெண் ஆசையால் அழிந்த இராவணனின் வரலாற்றையும் மகாபாரதமும், இராமாயணமும் எடுத்துக் கூறுகிறது. பொருளின் மீது ஆசை காரணமாகவோ, வாழ்க்கையில் நெறி தவறக் கூடாது என்று இந்து தர்ம சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

அன்பு மனிதன் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் நேசித்து வாழ்கின்றான். வாடிய பயிரைக் கண்டபோது வாடுகின்ற உள்ளம் அவனுடையது. குடும்ப உறுப்பினர் களிடையே இருக்கும் இறுக்கமான பிணைப் பிற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருப்பது அன்பே ஆகும். அன்பிற்கு அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் போட முடியாது. அன்புடையார் படும் துன்பத்தால் ஒருவர்க்குத் தோன்றும் கண்ணீர் அவரது அன்பினை எல்லோரும் அறியக் காட்டிவிடும்.

**"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்**
**ஆர்வலர்புண்கண் நீர் பூசல் தரும்"**

- திருக்குறள்

இறைவனோடு அடியவன் வைக்கும் அன்பு தூய்மையானதாக இருத்தல் வேண்டும். காரைக்காலம்மையார் இறைவனிடம் இறவாத இன்ப அன்பை வேண்டுகின்றார். தன் உள்ளத் தில் இறைவனை நினைத்து உருகுகின்ற இடையறா அன்பினைத் தந்து உதவுமாறு ஆடவல்லானாகிய நடராஜப் பெருமானிடம் மாணிக்கவாசகர் வேண்டுவதை

**"ஆடு அகம் சீர் மணிக் குன்றே**
**இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே**
**நின்றுருகத் தந்தருள் எம் உடையானே"**

எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது. வீரவாகுத் தேவர் முருகப் பெருமானிடம் வேறு எதையும் வேண்டாது ஞான பண்டிதனின் அன்பை மாத்திரம் வேண்டி நின்றதை

"சால நின் அன்பையே வேண்டுவன் தமியேன்"

எனக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

அன்பின் முதிர்வு நிலையில் ஏற்படுவது தான் பக்தி. அடியவன் பக்தி வலை வீசினால் இறைவன் அதில் அகப்பட்டே தீருவான். "பக்தி வலையில் படுவோன் காண்க" எனத் திருவாசகம் இதனைக் குறிப்பிடுகின்றது. பூரண சரணாகதியாக பக்தி நிலையில் நின்று அடியார்கள் வணங்கினால் இறைவனின் திருவருள் உடனே கிடைக்கும் என்றே நமது சமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன.

அன்புதான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்கிறார் திருமூலர். அன்பும் சிவமும் வேறு என்பது அறிவிலிகளின் வார்த்தை. அன்பே சிவம் என்பதைப் பலரும் அறியாதிருக்கின்றார்கள். அன்பு தான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்து விட்டால் பின்பு அவர்களே அன்புருவமான சிவமாய் அமர்ந்திருப்பார்கள்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"
-திருமந்திரம்

சமய ஒழுக்கம் வேறு, ஆன்மீக ஞானம் வேறு, சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராட்சம் என்பவற்றை அணிவது, சிவமூல மந்திரமாகிய நமசிவாய மந்திரத்தை உச்சரிப்பது, விரதம் இருப்பது, தலயாத்திரை, தீர்த்த யாத்திரை செய்வது ஆகிய எல்லாம் சமய ஒழுக்கமே ஆகும். இவை ஆன்மீக ஞானத்தை ஒருவன் அடைவதற்கு உதவும் கருவிகளாக அமையும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரி கரணங்களையும் தூய்மையாகச் செயற்பட வைத்து வாழும் மனிதன் ஞான யோகியாக மிளிர்வார்கள். இப்படியாக வாழ்பவர்களின் அகத்திலும் புறத்திலும் தெய்வீகம் பிரகாசிக்கும்.

இவர்கள் அருள் மனிதர்களாக நடமாடும் கோவில்களாக மிளிர்வார்கள். தன்னைப் போலவே மனிதர் உள்ளிட்ட அனைத்து உயிர்களையும் எண்ணுவதும் நேசிப்பதும் அருள் மனிதனின் செயற்பாடாக அமையும். உயிர்களெல்லாம் இறைவனின் வடிவு என உணர்வதற்குப் பக்குவம் வேண்டும். இத்தகைய பக்குவம் பெற்ற ஞானிகளின் உள்ளத்தில் இறைவன் கோவில் கொண்டிருக்கிறான். அவன் அருளைப் பெற்றவுடன் ஞானம் பிரகாசமாகும். இதனையே தெள்ளத் தெளிந் தார்க்குச் சீவன் சிவலிங்கம் எனத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

மகத்தான பிறவியாகிய மனிதப் பிறவியை எடுத்த நாம் அருள் மனிதர்களாக மாறாவிட்டாலும் அன்பு மனிதர்களாக மாறி வாழ முயற்சி செய்தல் வேண்டும். உலகில் பந்த பாசங்களால் ஈர்க்கப்பட்டு ஆசை மனிதர்களாக மாறிவிடக் கூடாது, ஆசை மனிதர்களாக மாறினால் வாழ்வில் நிம்மதியே கிடையாது. கட்டையிலே போகும்வரை கவலைகளைத் தொடர் கதையாகச் சுமக்க வேண்டிவரும்.

ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தமாமே

என்று திருமந்திரமும் இதனைக் குறிப்பிடுகின்றது.


## நிறைவுரை

இளைஞர்களின் அறிவுத் தேடலுக்குத் தீனி போடும் இடமாகவும், ஆற்றல்களை வளர்க்கும் கேந்திர நிலையமாகவும், கூட்டுறவால் நாட்டுயர்வு என்ற கருத்தினை உணர்த்தும் மையமாகவும், பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்களின் மனதில் வைக்கும் கலைக்கூடமாகவும், நமது நாட்டில் கிராமங்கள் தோறும் சன சமூக நிலையங்கள் இயங்கி வந்தன. மனிதனை உருவாக்கும் கல்வியை வழங்கும் அறிவாலயமாகத் திகழ்ந்த

சனசமூக நிலையங்களின் உதவியினால் உருவாகிய பலர் இன்று தாயகத்திலும், உலக நாடுகள் பலவற்றிலும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையம் எழுபது வருடங்களாகத் தமது மக்களின் அறிவுப் பசிக்கு வழிகாட்டும் கேந்திர நிலையமாகச் செயற்பட்டு வருகிறது. 1971 ஆம் ஆண்டில் இப்பகுதி மக்கள் அனைவரும் ஒன்றுகூடி சனசமூக நிலையக் கட்டடத்தை இரவு நேரத்தில் அமைத்துக் கொண்டிருந்த காட்சியை இளைஞனாக இருந்த காலத்தில் காணும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கேற்ப அவர்கள் செயற்பட்ட காட்சியைப் பார்த்துப் பூரிப்படைந்தேன். எழுப தாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்தச் சனசமூக நிலையம் பல நூற்றாண்டுகள் நிலைபெற்று இப் பிரதேச மக்களுக்குப் பல வகைகளில் பயன்படும் ஞான தீபமாக மிளிர வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்திக் கின்றேன்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்,
ஓய்வுநிலை விரிவுரையாளர்
- பலாலி ஆசிரிய கலாசாலை,
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்
- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



# விளையாட்டுகளில் சமூக வலைத்தளங்களின் பங்களிப்பு

விளையாட்டு என்பதற்கு பல அறிஞர்கள் பல்வேறுபட்ட கருத்துகளை முன்வைத்திருந்த போதிலும் அதன் அடிப்படைக் கருத்து ஒன்றாகவே அமைந்துள்ளது. அந்த வகையில் விளையாட்டு என்பது ஒவ்வொரு மனிதனும் உடல் உள ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்வதோடு சமூகத்தில் சிறந்த ஆளுமை உடைய நற்பிரஜையாக வாழ்வதற்கு வழிகோலும் ஒரு கருவியாகத் திகழ்கின்றது.

இன்று இவ் விளையாட்டின் முக்கியத்துவம் கருதியே தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் முன்னுரிமை வழங்கி தமது செய்திகளைப் பிரசுரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு இவ் விளையாட்டினை இன்று ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக நடைமுறைப்படுத்துவதனால் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்புகளாகவும் டிப்ளோமா கற்கை நெறிகளாகவும் பரிணாமம் பெற்று ஒரு உயரிய முக்கியத்துவம் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் விளையாட்டின் அதீத உன்னத வளர்ச்சிக்கு சமூக வலைத்தளங்களின் பங்களிப்பானது எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உலகிலே புதிய பரிமாணமாக இணையத்தள அபிவிருத்தியின் அபரீத வளர்ச்சியாக சமூக இணையத்தளங்கள் (Social Networking Sites) காணப்படுகின்றன. பொதுத் தளத்திலே மக்களை இணைக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இச் சமூக வலைத்தளங்கள் அனுபவப்பகிர்வு, அறிவுப்பகிர்வு, பொதுநோக்கு, கல்வி அரட்டை, கருத்துப்பரிமாற்றம், ஒத்த கருத்துடையவர்கள் ஒன்றிணைதல் இவற்றை எல்லாம் தாண்டி விளையாட்டுகள், தேர்தல் பிரசாரங்கள், போராட்டக்களம் என பன்முகப்படுத்தப்பட்ட தன்மையிலே இயங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இச் சமூக வலைத்தளங்கள் ஆனது இன்றைய மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்த தேவையாகவே கருதப்படுகின்றது. இதன் அடிப்படையில் தேவைகளின் உச்சமாகவே இச் சமூக வலைத்தளங்கள் இன்றைய காலகட்டத்தில் உருவாக்கம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இச் சமூக வலைத்தளங்கள் எழுத்து, காட்சி, பல்லூடகம் என பல வடிவங்களில் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது. இச் சமூக வலைத்தளங்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது என்பதனைப் பின்வரும் ஒழுங்கின் அடிப்படையில் நோக்க முடியும்.

விளையாட்டுகளில்,

- சமூக வலைத்தளங்களின் வகைகள்
- சமூக வலைத்தளங்களின் பயன்பாடு
- சமூக வலைத்தளங்களின் பங்களிப்பு
- சமூக வலைத்தளங்களின் பாதிப்பு
- சமூக வலைத்தளங்களின் முக்கியத்துவம் என்பவற்றின் அடிப்படையில்

நோக்க முடியும்.

சமூக வலைத்தளங்களின் வகைகள் எனும்போது Face Book, Twitter, Youtube, My Space, Gala Online, Club Penguin என விரிவடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இவற்றின் பயன்பாடுகளை கீழ்க்கண்டவாறு உணர்ந்து கொள்ளலாம்.

| சமூக வலைத்தளங்கள் | பிரதான பயன்பாடு |
|---|---|
| Face Book | தனிநபர் இணைய பக்கங்கள், வீடியோ, போட்டோ, கோப்புகள் பகிர்வு, இணையத்தள அரட்டை |
| Twitter | குறுந்தகவல் அனுப்புதல், 140 சொற்கள் கொண்ட கருத்துப் பரிமாற்றம் |
| Youtube | வீடியோக்களைப் பதிவேற்றம் செய்தல், பதிவிறக்கம், பகிர்ந்து கொள்ளல் |
| My Space | பாடல்கள் செவிமடுத்தல், வீடியோ பார்வை, இணையத்தள விளையாட்டுகள், இணையத்தள பக்கங்களை உருவாக்குதல் |
| Gala Online | இணையத்தள விளையாட்டுகள், கனவு இல்லங்களை உருவாக்குதல், இணைய கருத்தரங்குகள் |
| Club Penguin | இணைய விளையாட்டு. வெளியக செயற்பாடுகள், சித்திரமும் கைவினைகளும், வண்ணத்திரட்டுக்கள் |

அடுத்து சமூக வலைத்தளங்களில் விளையாட்டுகளின் பயன்பாடு எனும்போது இன்றைய காலகட்டங்களில் விளையாட்டுகள் மனித குலத்தின் மருத்துவர்களாக மாறிவரும் காலம். அதாவது எல்லா வகையான விளை யாட்டுகளின் போது அதன் பயிற்சி முறை களானது ஒரு விஞ்ஞான முறைப்படுத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அதேபோன்று ஒரு வீரன் தேசிய ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ சிறந்த பெறுபேற்றை அடைய வேண்டுமாக இருந்தால் உரிய சிறந்த தொழில்நுட்ப முறை களைப் பயன்படுத்த வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. இதற்கு அடிப்படையாகவே இச் சமூக வலைத்தளங்கள் விளையாட்டிற்குப் பெரிதும் துணை புரிகின்றது.

இதனை இன்னும் விரிவாக நோக்கு வோமானால் விளையாட்டுச் செயற்பாடுகளில் நுட்பங்கள், பகுப்பாய்வுகள் என்பன முக் கியத்துவம் பெறுகின்ற விடயமாக காணப் படுகின்றது. இதனைப் பெறும் பொருட்டுப் பல் வேறு வகையான மென்பொருட்களை (Software) பாவனை செய்யவேண்டிய நிலை உள்ளது.

உதாரணமாக Dart Fish என்ற மென்பொருளானது ஒரு வீரனின் மருத்துவ பகுப்பாய்வு, வீடியோ பகுப்பாய்வு, வெவ்வேறு பட்ட வீரர்களை அதாவது சர்வதேச தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற வீரர்களின் பெறுபேற்றை ஏனைய வீரர்களின் பெறுபேற்று டன் தொடர்புபடுத்தி (வேகம், கோணம்) பார்த்தல் போன்ற செயற்பாடுகளுடன் ஒரு வீரரின் அசைவுகளை உருப்பெருத்து பார்க்கும் அளவுக்கு சிறந்த மென்பொருளாக செய்ய வேண்டுமாக இருந்தால் எமது நாட்டின் நாளைய பெறுமதியில் இரண்டு தொடக்கம் இரண்டரை இலட்சம் ரூபா பணத்தினை செலுத்துவதன் மூலம் பதிவினை மேற்கொள்ள முடியும். இதனால் இது விலை கூடிய மென் பொருளாகக் காணப்படுகின்றது.

இதனை விட இலகுவாகவும் இலவச

மாகவும் பாவிக்கக்கூடிய மென்பொருட்கள் பல உள்ளன.

உதாரணமாக, Kinovia எனப்படும் மென்பொருளை 100% இலவசமாகப் பெற முடியும். இதில் சர்வதேச தரத்தில் வீரர்களின் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்வது கடின மாகும். ஆனால் தேசிய ரீதியான வீரர்களின் பெறுபேறுகளை அடிப்படையாக் கொண்டு பகுப்பாய்வுகளை மேற்கொள்ள முடியும். இது மட்டுமன்றி கணினிகள் மூலம் இலகுவாகப் பயன்படுத்தலாம்.

தற்காலத்து சமூக வலைத்தள பாவனைகளில் IPad, Smart Phone என்பவற்றின் பாவனைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதில் பயன்படுத்தக்கூடிய Anrovid Operating System மாக Coaching Eye என்ற மென்பொருள் பாவிக்கப்பட்டு வருவது கண்கூடான ஒரு விடயம். இதனைவிட Dart Fish Express என்ற மென்பொருள் அதிகளவாக IPad, Smart Phone போன்றவற்றில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றுடன் மேலும் விளையாட்டுக்கள் தொடர்பான கூடுதலான அறிவினைப் பெறவேண்டுமாக இருந்தால் இன்னும் பல Web Site காணப்படுகின்றன. உதாரணமாக மெய்வல்லுநர் விளையாட்டைப் பொறுத்த வரையில் அதன் நுட்பங்கள், திறன்விருத்தி என்பவற்றைப் பார்வையிட வேண்டுமாக இருந்தால் special_education.com அல்லது brianmac.co.uk போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

விளையாட்டுகளில் சமூக வலைத்தளங்களின் ஒன்றிணைந்த பிணைவுகளினால் பல பங்களிப்பை விளையாட்டின் அபிவிருத்தி செய்வதில் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி உள்ளன. இதில் சமூக வலைத்தளங்களின் முக்கியத்துவம் சமூக வலைத்தளங்களில், சமூக வலைத்தளங்களின் பாதிப்பு என்பவற்றை ஒரே பார்வையில் சுருக்கமாக அவதானிக்க முடியும்.

| முக்கியத்துவம் | பாதிப்பு | பங்களிப்பு |
|---|---|---|
| தனிப்பட்ட விபரங்கள் | நேரவிரயம் | அறிவு விருத்தி |
| நட்புக்கான வேண்டுகோள் | உளரீதியான பாதிப்புக்கள் | குழுவாக இயங்குதல் |
| கோப்புகளைப் பகிர்தல் | இயல்பான மனிதத் தொடர்பு குறைதல் | தொடர்பாடல் விருத்தி |
| நாட்டிற்கான பகிர்தல் | நினைவாற்றல் பாதிப்பு | சிந்தனைப் பகிர்வு |
| நண்பர்கள் வலையமைப்பு | இணையத்தள கேடுறுத்தல் | புத்தாக்கம் சிந்தனை சார் தொழில் விருத்தி |
| | உடல் ரீதியான பாதிப்பு | கற்கும் முறைகள் |
| | | தகவல் தொடர்பாடல் திறன் விருத்தி |
| | | மொழி விருத்தி |

எவ்வளவுதான் சமூக வலைத்தளங்களின் ஆதிக்கமானது உயர்ந்த உன்னத பெறு பேற்றை அடைவதற்கு சிறந்த பின்னணியாக காணப்பட்டு இருந்தாலும் இதன் பயன்பாடுகள் வீரர்களையோ பயிற்றுவிப்பாளர்களையோ அல்லது விளையாட்டுத் தொடர்பான சமூக வலைத்தளங்களைப் பாவனை செய்பவர் களையோ உடல் உள ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளதை அவதானிக்க முடிகின் றது.

எவ்வாறெனில் தொடர்ச்சியான அதி களவு நேரத்தை தேடுதல்களின் பொருட்டு செலவு செய்வதனால் உடற்சமநிலை குழப்ப மடைந்து அதாவது இரவு நேரங்களின் வலைத் தளங்களினால் உறக்கமற்ற ஒரு நோய்க்கு உள்ளாக்கப்படுகின்றான். மேலும் முள்ளந் தண்டுப் பிரச்சினைகள், கண் எரிச்சல், நினை வாற்றல் மங்குதல் என்பவற்றினால் பெறு பேறுகள் குறைவடையும் நிலை காணப்படு கின்றது.

அதேபோல் இளம் சமூகத்தினர் மத்தி யில் ஆளுமைக் குறைபாடு, சமூகத்தி னர்களுக்கு எதிரான நடவடிக்கை போன்ற இன்னோரன்ன பல உளரீதியான தாக்கங் களை ஏற்படுத்து வனவாக அமைகின்றன.

எனவே விளையாட்டுகளின் அபி விருத்தி எனும் கண்ணோட்டத்தில் சமூக வலைத்தளங்களின் பங்களிப்புத் துரித அபி விருத்தியை ஏற்படுத்தும் அதேவேளையில் சில உடல் உளரீதியான எதிர்த்தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன என்பதும் அறிந்த உண் மையே.

அ.வசந்தன்
மாவட்ட விளையாட்டு இணைப்பாளர்,
யாழ். மாவட்டம்.



# "டெங்கு நோயை ஒழிப்போம், உயிர் காப்போம்"

டெங்குக் காய்ச்சல் டெங்கு வைரசால் ஏற்படும் ஒரு தொற்று நோயகும். இவ்வைரசு நான்கு வகைகளைக் கொண்டது. இது ஏடிஸ் (Ades) எனும் ஒரு வகை நுளம்பினால் காவப் படுகிறது. இது இலங்கை உட்பட பல வெப்ப கால நிலையைக் கொண்ட நாடுகளில் நிலவுகின்றது. இந்நோயானது குழந்தைகளையும், சிறுவர் களையும் ஆண்களைப் பார்க்கிலும் பெண் களையும் அதிகமாகப் பாதிக்கின்றது.

டெங்கு காய்ச்சலுடைய ஒருவரிடம் இருந்து இரத்த உணவை அருந்தும்போது நுளம்பானது டெங்கு வைரசினைப் பெறுகிறது. இவ் வைரஸ் நுளம்பின் குத்தும் அலகலிலும், உமிழ்நீர்ச் சுரப்பியிலும் நிறைந்து காணப்படும். இந் நுளம்பு வேறொரு நபரைக் குத்தும்போது அந்நபரில் டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது.

இந்த எடிஸ் நுளம்பானது சுறுசுறுப்பானது. இது தன் கறுப்பு நிற உடலில் வெள்ளை நிற கோடுகளையும் வளையங்களையும் கொண் டது. இது மனித குடியேற்றங்களை அண்டி வாழுகின்றது. தெளிந்த நீர் நிலைகள், மழை நீர், சாக்கடை நீர் தேங்கி நிற்கும் இடங்களில் முட்டைகள் இட்டுப் பெருகுகின்றது. இது ஒரு தடவையில் 100-200 முட்டைகள் வரை இடும். இவ்வாறு தன் வாழ்க்கை வட்டத்தில் 3-4 தடவைகள் முட்டைகள் இடும். இம்முட்டைகள் 6-12 மாதங்கள் வரை உலர் காலநிலையைத் தாங்கி வாழக்கூடியவை. டெங்கு நுளம்பானது காலை 6.00-9.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலும் மாலை 3.00-6.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலும் சுறுசுறுப்பாக இரத்த உணவு பெறுகின்றது. இவ்வேளை டெங்கு வைரசினை பரப்பும் காவியாகவும் செயற்படு கிறது.

இவ்வைரஸ் மனித உடலை அடைந்து சராசரியாக 4-7 நாட்களில் டெங்கு காய்ச்சாலை ஏற்படுத்தும்.

இது நான்கு வகையாக வெளிப்படலாம்

1) சாதரண காய்ச்சல் போன்ற, கேடில்லாத டெங்கு காய்ச்சல்
2) மரபார்ந்த அறிகுறிகள் கொண்ட டெங்கு காய்ச்சல்
3) டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சல்
4) டெங்கு அதிர்ச்சி

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகளாவன...

1) அதிகரித்து செல்லும் மிகையான காய்ச்சல்
2) கண்ணின் பின்னான வலியுடன் கூடிய தலைவலி
3) உடல் உபாதை (தசை, மூட்டுகளில் வலி)
4) களைப்பும் உடற்சோர்வும்
5) குமட்டல், வாந்தி
6) நிணநீர் கணுக்களில் வீக்கம்

டெங்கு காய்ச்சலின் நிலைகளில் டெங்கு குருதிப்பெருக்கக் காய்ச்சலும், டெங்கு அதிர்ச்சி யும் உயிராபத்து விளைவிக்கும் நிலைகளாலும் டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சலில் பின்வரும் அறிகுறிகள் காணப்படலாம்...

1) தோலில் சிவப்பு நிற சிறுபுள்ளி அடையாளங்கள்
2) கடுமையான வயிற்றுளைவு
3) மலம் கறுப்பு நிறமாதல்
4) முரசுகள், பல் ஈறுகளிலிருந்து குரதி கசிவடைதல்

இவ்வறிகுறிகளை இனம்கண்டு சரியான தருணத்தில் மருத்துவ உதவியை நாடுவதன் மூலம் உயிராபத்துகளைக் குறைத்துக்கொள்ள லாம்.

3 நாட்களுக்கு தொடர்ச்சியாக காய்ச்சல் காணப்படின் வைத்திய ஆலோசனையை நாடி குருதியை பரிசோதித்துப் பார்ப்பது சாலச் சிறந்தது.

இத்தீவிர உயிர்கொல்லி நோயானது முறை யான நடவடிக்கைகளின் மூலம் குறைக்கப் படக்கூடியது.

பல நாடுகள் டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு செயற்றிட்டங்களை முன்னெடுத்து இந்நோயைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான சிறந்த உதாரணங்களாக அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் உள்ளடங்குகின்றன. இந்நாடுகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பான பொதுமக்களின் அறிவும், நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதில் சமூகத்தின் ஒத்துழைப்பும் இவ்வெற்றிக்குப் பெரும் பங்காற்றியது எனலாம்.

இலங்கையில் டெங்கானது இன்னமும் முற்றாக கட்டுப்படுத்தப்படாத ஒரு தொற்று நோயாகவே காணப்படுகின்றது. இலங்கையில் 2012 ம் ஆண்டு முடிவில் 44,000 இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களும் 227 டெங்கு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

இலங்கையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகலை, அநுராதபுரம் போன்ற இடங்களில் டெங்கு பாதிப்புக்கள் அதிகமாக பதிவாகியுள்ளன. அதேவேளை யாழ்ப்பாணத்திலும் டெங்கு நோயின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சினால் பலதரப்பட்ட நடவடிக்கைகள் நகர மட்டங்களில் இருந்து கிராமிய மட்டங்கள் வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இந்நுளம்பு பெருகும் இடங்களை முற்றாக ஒழிப்பது ஒரு மாபெரும் சவாலாகக் காணப்படுகின்றது. இச்சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ள சுகாதார உத்தியோகஸ்தர்களின் பங்களிப்பு மட்டும் போதாது. இதற்கு சமூகத்தின் பங்களிப்பானது இன்றியமையாதது. சமூக மட்டத்தில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பான அறிவு பரப்பப்பட வேண்டும். சமூகத்தில் உள்ள மக்கள் தத்தமது சுற்றுப்புறச் சூழலை நுளம்புகள் பெருகாதவண்ணம் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். ஏனெனில் டெங்கு நுளம்பானது வீடுகளில் காணப்படும் சிறிது நீர் தேங்கும் இடங்களிலும் பெருகக்கூடியது. வீடுகளில் காணப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், கோப்பைகள், பொலித்தீன் துண்டுகள், பொலித்தீன் பைகள், பீங்கான் கோப்பைகள், தயிர்ச்சட்டி, மீன் டின்கள், நத்தை ஓடு, முட்டைக் கோது, சிரட்டை, இளநீர்க் கோம்பைகள் என்பன நீரைத் தேக்கி நுளம்பு பெருக வழிமைக்கக் கூடும். மேலும் அடைபட்ட மழைநீர்ப் பீலி, அடைபட்ட சீமெந்துக் காண், நீர் அடைபட்ட கொங்கிரீட், சீமெந்து நீர்த்தொட்டி, மூடப்படாத நீர்த் தாங்கிகள், வாளிகள், நீர் நிரம்பிய பரல்கள், மீன் இல்லா நீர்த்தொட்டிகள், நீர் தங்கக்கூடிய சிலை வடிவங்கள், பூச்சாடிகள், பூச்சாடிகளின் கீழ்வைக்கப்படும் நீர் தேங்கும் தட்டுகள், குளிரூட்டியின் நீர்தேக்கித் தட்டு, மேசைக்கால்களில் வைக்கப்படும் நீர்த்தட்டுகள், செல்லப் பிராணிகளின் நீர் / உணவுப் பாத்திரங்கள், இலைகளுக்குள்ளே நீர் தங்கவல்ல அழுகுத்தாவரங்கள், மரப்பொந்துகள், வெட்டிய மூங்கில் மரத்தின் அடிப்பாகம், நீர் தேங்கவல்ல வெட்டிய மரத்துண்டுகள் என்பவையும் நுளம்பு பெருகக்கூடிய இடங்களாக அமையும்.

இவற்றை ஒவ்வொரு வீட்டாரும் அறிந்து தங்கள் வீடுகளிலுள்ள இவ்வாறான பொருட்களை அகற்ற வேண்டும். இரு நாட்களுக்கு ஒரு தடவையாவது இவ்வாறான இடங்கள் உண்டா வென தத்தமது வீடுகளில் சோதித்தறிந்து அவ்வாறு இருப்பின் அவற்றைத் துப்பரவு செய்ய வேண்டும்.

இதன்மூலம் டெங்கு நுளம்பின் தாக்கத்திலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம்.

இதற்காக நாம் கையாள வேண்டிய வழிமுறைகளாவன

1) மழை காலங்களில் நீர் தேங்கக்கூடிய சிறு கொள்கலன்கள், பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், பிளாஸ்டிக் பொருட்கள், இளநீர்க் கோம்பைகள்,

சிரட்டைகள் என்ப வற்றை எரிக்கவோ புதைக்கவோ வேண்டும்.


2) பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். நீர் சேகரிக்கும் தொட்டிகள், பாத்திரங் களை நன்றாகத் தேய்த்துக்கழுவி, நீரை 4 நாட்களுக்கு ஒரு தடவை யேனும் மாற்ற வேண்டும்.
3) வீட்டில் சேகரித்து வைக்கப்படும் தேவையற்ற பாத்திரங்கள், வாளிகள் என்பன நீர் தேங்காதவாறு கவிழ்த்து வைக்கப்பட வேண்டும்.
4) பீலிகள், வாய்க்கால்கள் என்பவற்றில் நீர் தங்காதவாறு அடிக்டி துப்பரவு செய்தல் வேண்டும்.
5) டயர்கள், மரப்பொருட்கள் நீர் தேங்கா வண்ணம் மண் போடப்பட்டு மூடப் படல் வேண்டும். அல்லது டயர்கள் துளையிடப்படலாம்.
6) நுளம்புகள் தங்காவண்ணம் பற்றை களை வெட்டி, குப்பை கூழங்களை எரித்து சுற்றாடலை தூய்மையாகப் பேண வேண்டும்.
7) வீடு, அலுவலகங்களின் யன்னல் நிலைகளில் நுளம்புகள் புகாத வலை கள் பொருத்தப்படலாம்.
8) உடலை மூடி உடை அணிதல், நுளம் புச்சுருள் கொழுத்துதல், நுளம்பு விரட்டி எண்ணெய் பூசுதல் போன்றன மூலம் நுளம்புக்கடியில் இருந்து எம்மை நாம் பாதுகாக்கலாம்.

மேலும் மேலதிக உதவிகள் ஆலோசனை கள் தேவைப்படுமிடத்து உங்கள் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகரையோ அல்லது சமுர்த்தி ஊழியர்களையோ அல்லது கிராம சேவை யாளர்களையோ அணுகலாம்.

எமது சுற்றுப்புறச்சூழலை பாதுகாப் பகவும் சுத்தமாகவும் பேண வேண்டியது எமது கடமை ஆகும். இது தொடர்பாக எம் அயலவரையும் தெளிவுபடுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். ஏன் எனில் ஒரு வீட்டின் பொறுப்பற்ற தன்மை அதன் அயல் வீடுகளையம் பாதிக்கும். எனவே சமூகமாக ஒன்றிணைந்து செயலாற்றுவதே டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்க வல்ல சிறந்த நடவடிக்கை ஆகும். இவ்வாறு ஒன்று சேர்ந்து குழுக்களாக செயலாற்றுவதன் மூலம் எமது வீட்டின் சிறார்களையும் எம் அன்பு உறவுகளையும் இக் கொடிய நோயில் இருந்து பாதுகாக்க முடியும்.

**“டெங்குக்கு எதிராக ஒன்றாக செயலாற்றுவோம். எம் அன்பு உறவுகளைக் காத்துக் கொள்வோம்”**


பனாண்டோ நிரோஜன்
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்





4 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு
67வது ஆண்டு நிறைவு விழாவின் போது கல்வி ஊக்குவிப்பு வழங்கல்



60வது ஆண்டு நிறைவு விழாவின் போது 60வயதிற்கு மேற்பட்ட பெரியோர்களை
கௌரவித்த நிகழ்ச்சியில்பாரளுமன்ற உறுப்பினர் உயர்திரு மாவை சேனாதிராஜா அவர்கள்

# விவசாய நிலங்களில் இரசாயனப் பிரயோகங்களும் அவற்றின் விளைவுகளும்

பச்சைக் காடுகளுக்குள் விவசாயம் செய்து பசுமையாய் வாழ்ந்ததுதான் எமது முன்னைய சமுதாயம். தற்போது நாமெல்லாம் நஞ்சு கலந்த நிலத்தில் விளையும் உணவு வகைகளை உண்டும், நஞ்சு கலந்த நீரைப் பருகியும் வாழ்வது யாருக்குத் தெரியும்.

பூமித்தாய்க்குப் பூப்போட்டுக் கொண்டிருந்தோம். அவளும் பூத்துக் குலுங்கியே இருந்தாள். இப்போது விவசாயத்திற்கென இரசாயன வளமாக்கிகளை அதிகளவு அள்ளித் தெளித்து நச்சுச் சாயம் கலந்த உணவுகளை உற்பத்தியாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

சேதனப் பசளைகளான விலங்குக் கழிவுகள், குப்பை கூழங்களைத்தான் பயன்படுத்தி முன்னர் மண்ணை வளமாக்கி வந்தோம். தற்போது அதிக விளைச்சலுக்காக அசேதன உரங்களைப் பயன்படுத்துவதனால் அதிக பாதக விளைவுகளைச் சந்திக் வேண்டியுள்ளது.

**விளைச்சல் நிலங்களில் அசேதன இரசாயனங்கள் பயன்படும் சந்தர்ப்பங்கள்**

1) இரசாயன மண் வளமாக்கிப் பாவனை (Fertilizer Application)
2) பூச்சி, பீடைகொல்லிகளின் பாவனை (Pesticides)
3) களைநாசினிகளின் பாவனை (Weedicides)

மேற்கூறிய முக்கிய இரசாயனப் பாவனைகளினால் மண்ணில் அதிகளவில் இரசாயனங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இவை காலப்போக்கில் மண்ணில் செறிவடைந்து மண்ணை நஞ்சாக்குவது மட்டுமல்லாது, மண்ணீருடன் கலந்து நிலத்தடி நீரையும் நஞ்சாக்குகின்றது.

**அதிக இரசாயனப் பாவனைகளினால் மண்ணில் ஏற்படும் பாதிப்புகள்**

1) மண்ணின் இயற்கைக் கட்டமைப்பு மாறுபடும்
2) மண் துணிக்கைகளுக்கிடையிலான இடைவெளிகளில் இரசாயனம் சிறைப் பிடிக்கப்படும்
4) மண்ணிலுள்ள நுண்ணங்கிகள் அழிவடையும்
5) மண் விவசாயத்திற்கு ஏற்றதல்லாததாக மாற்றமடையும்

அத்தோடு மட்டுமல்லாது மண்ணில் கரைந்து செறிவடைந்த இவ் இரசாயனங்கள் மழைநீருடனோ அல்லது நீர்ப்பாசணத்துடனோ மண்ணினூடாக கரைவடைந்து நிலத்தடி நீரை அடையும். அத்துடன் விவசாய நிலங்களை அண்டிய நீர்நிலைகள் இவ் இரசாயனங்கள் கரைந்து வழிந்தோடிக் கலப்பதால் அந் நன்னீர் நிலைகள் நஞ்சாக்கமடைவதுடன் பல்வேறு சூழல் பாதிப்புகளுக்கும் உள்ளாகும்.

பிரதானமாக நைத்திரநேற்று ($No_3$) பொஸ்பேற்று ($Po_4^3$) இரசாயனங்கள் அடங்கிய உரப்பாவனை, பூச்சி பீடைக்கொல்லிப் பாவனைகளினால் நன்னீர் நிலைகள் பெரும் பாதிப்பைச் சந்திக்கின்றன. இவ் விளைவுகளில் பிரதானமான ஒன்று "நற்போசணையாக்கம்" (Europhication) எனப்படும்.

**நற்போசணையாக்கம்** (Europhication)
நன்னீர் நிலைகளில் (ஆறுகள், குளங்கள், நதிகள், கிணறுகள்)
நைத்திரேற்று ($No_3$) பொஸ்பேற்று ($Po_4^3$) சேர்வைகளின் செறிவு அதிகரித்தல் நற்போசணையாக்கம் எனப்படும்.

**நற்போசணையாக்கத்தின் விளைவுகள்**

**1) அல்கா மலர்தல் (Algne Blooming)**

நன்னீர் நிலைகள் பச்சை அல்காக்கள் மலர்ந்து நீர்நிலைகளை மூடி ஒளி ஊடுருவதலைத் தடுக்கும்

2) **முதல் உற்பத்தி குறைவடையும்**
ஒளிஊடுருவுதல் குறைவதனால நீர்நிலைகளில்முதல் உற்பத்தி பாதிப்படையும்

3) **நீரில் கரைந்துள்ள பிரதான வாயு ($O_2$) னின் அளவு (Dissolved Oxygen / D.O) குறைவடையும்**

4) **உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை (Bio Chemical Oxygen Demgnl / BOD) பெறுமானம் அதிகரிக்கும்**
கரைந்துள்ள ஒட்சிசன் குறைவடைந்ததினால் (BOD) பெறுமானம் அதிகரிக்கும்

5) **நீர்நிலைகளிலுள்ள தாவர விலங்குகள் இறக்கும்**
ஒட்சிசன் பற்றாக்குறைவினால் உயிரினங்கள் இறக்கும்

6) **நீர்நிலைகளுக்கு அண்மையில் துர்நாற்றம் வீசும்**
இறந்த தாவர, விலங்குகளை நுண்ணங்கிகள் பிரிகையாக்குவதன் (உக்க) போது வெளியிடப்படும் கெட்ட வாயுக்கள் ($Eg=Ch_4$) காரணமாக இவ்வாறான நீர்நிலைகளுக்கு அண்மையில் துர்நாற்றம் வீசும்.

இவ்வாறு நற்போசணையாக்கத்திற்கு உட்பட்ட நீர்நிலைகள் பின்னர் பாவனையின்றி கைவிடப்படும்.

புவியில் நன்னீரின் அளவே மிக மிகக்குறைவு. அதிலும் இவ்வாறான நன்னீர் நிலைகள் இழக்கப்பவதனால் எவ்வாறான விளைவுகள் ஏற்படுமென சிந்தித்துப் பாருங்கள்.

**நற்போசணையாக்கத்தைத் தடுக்கும் வழி முறைகள்**

1) நைத்திரேற்று / நைதரசன் (N) அடங்கிய இரசாயன வளமாக்கிப் பாவனைகளைக் குறைத்தல்
நைதரசன் கிடைக்கக்கூடிய மூலகங்கள்
கரையக்கூடிய சேதன நைதரசன் (Organic Nitrogen)
நைத்திரேற்று ($No_3$)
நைத்திரேற்று ($No_2$)
அமோனியச் சேர்வைகள் ($No_4$)

| |
|---|
| நைதரசன் என்பது பயிரின் வளர்ச்சிக்கு முக்கியமான மூலகம் என்பதனால் இதன் பாவனை விவசாயிகளிடையே அதிகமாகவுள்ளது Eg=>யூரியா |

2) பொஸ்பேற்று ($Po_4^3$) வளமாக்கிகளின் பாவனையைக் குறைத்தல்

**பிரதான பொஸ்பேற்று கூட்டங்கள்**
- அப்பநைற்று பொஸ்பேற்று (Ap)
- அப்பநைற்று அல்லாத அசேதன பொஸ்பேற்று (NAIP)

3) **விவசாய நிலங்களில் இருந்து நன்னீர் நிலைகளினுள் இரசாயனங்கள் வழிந்தோடு தலைத் தடுத்தல்**

- சிறந்த வயல் வரப்புகளைப் பேணுதல்
- சிறந்த அணைக்கட்டுக்களைப் பேணுதல்

எனினும் நிலத்தினூடாகக் கரைந்து நிலத்தடி நீரை அடைவதைத் தடுக்க முடியாதுள்ளது. இவ்வாறான நஞ்சாக்கம் பெற்ற நீரைப் பருகுவதனாலும் "நீலக்குழந்தை" (Blue Baby) பிறப்புகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன.

அதைவிட யாழ். மாவட்டத்தின் தற்போதைய வைத்திய புள்ளிவிபரங்களின்படி புற்றுநோயினால் (Cancer) பீடிக்கப்படுபவர்களின் அளவு அதிகமாகிக் கொண்டு செல்வதற்குமான பிரதான காரணம் இரசாயனம் தோய்க்கப்பட்ட உணவுப் பாவனையினாலே யாகும்.

உங்களுக்குத் தெரியுமா? இலங்கையில் மரக்கறிகளுக்கான இரசாயனப் பாவனையில் யாழ். குடா முதலிடத்தைத் தொட்டிருக்கிறது. மரக்கறி என்ற போர்வைக்குள் யாழ். குடாவின் ஒவ்வொரு குடிமகனும் மறைமுகமாகத் தினமும் நஞ்சையே அருந்திக் கொண்டிருக்கிறான். இவையெல்லாம் உடலில் செறிவடையும் போது எவ்வாறான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று நினைத்துப் பார்க்க இயலாதது.


யாழ். குடாநாட்டில் தற்போது அதிகளவு குடித்தொகைகள் பெருகுவதாக (Population Growth) புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. அதற்கான பிரதான காரணம் இங்குள்ள நன்னீர் கிடைக்கும் தகவே. காசில்லாமல் நன்னீர்ப் பாவனை உள்ளது. எனினும் அதிக இரசாயனப் பாவனைகளினால் நன்னீர் நஞ்சாக்கம் பெறும்போது குடிக்கும் தகவற்றதாக மாறும், நிலங்களும் நஞ்சாக்கமடைந்து பயிர் செய்ய முடியாத நிலைமை தோன்றி பட்டினி உலவும் காலம் வெகு தொலைவில் இல்லை.

**நஞ்சாவதையும் விவசாய நிலம் இரசாயனச் செறிவடைவதையும் தடுக்கும் வழிமுறைகள்**

1) சேதனப் பசளை இடுதல்
   உதாரணம்: மாட்டுச் சாணம்,
   தாவரக் கழிவுகள்
2) நைதரசன் அசேதன உரப்பாவனையைக் குறைத்தல்
3) சேதன விவசாயத்தை ஊக்குவித்தல்
4) விவசாயிகளுக்கிடையே அசேதன உரப் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்
5) இரசாயனப் பயன்பாட்டு அளவில் கூடிய அமுலாக்கங்களைக் கொண்டுவருதல்
6) அதிக செறிவடையும் இரசாயன வளமாக்கி, பீடைகொல்லிகள், களைகொல்லிகளைத் தடை செய்தல்

இவ்வாறான பல வழிமுறைகளைப் பின்பற்றுவதனால் நாம் வளர்ந்த மண்ணில் நம் வழித்தோன்றல்கள் நீலக்குழந்தையல்லாத, நஞ்சாக்கம் இல்லாத, புற்றுநோயல்லாத, உடல் நலமுள்ள, பட்டினியற்ற சந்ததியொன்றை உருவாக்கலாம்.

கு. மதுசுதன்
விவசாய பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# உளவியல்


உளவியல் என்ற சொற்பதமானது மிகவும் பழமை வாய்ந்த ஒரு சொல்லாகும். இது உள்ளம் சம்பந்தப்பட்டது. தத்துவம், உளவியல், விஞ்ஞானம் என்ற மூன்றினது வளர்ச்சியும் ஒன்றை ஒன்று தாங்கியுள்ளது. தத்துவமும் ஆன்மாவோடு தொடர்புபட்ட ஒரு விடயமாகும். உள்ளத்தின் செயற்பாடுகள் எல்லாவற்றையும் உளவியலாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். உளவியல் என்பதை ஆங்கிலத்தில் "Psychology" என்று கூறுவார்கள். இச் சொல்லானது "Psyche logos' என்ற இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து தோற்றம் பெற்றதாகும். "சைகே" என்பது ஆன்மாவையும் "லாகாஸ்" என்பது ஆராய்ச்சியையும் குறித்து நிற்கின்றது. இதனால் இது ஆன்மாவைப் பற்றி அறிய முற்படுகின்ற ஒரு இயல் என்று கூறலாம். உள்ளத்தை ஆய்வு செய்கின்ற விஞ்ஞானமே உளவியல் எனக் கருதப்படுகின்றது.

உளவியல் கலையை ஆசிரியர்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். முக்கியமாக குழந்தை உளவியல் தொடர்பான அறிவு, பிள்ளைப் பருவ உளவியல் போன்றவை ஆசிரியர்களுக்கு அவசியமானதாகும். இதனால் ஆசிரியர்களுக்கு காலத்திற்குக் காலம் இத் தகைய பயிற்சிகள் இடம்பெறுவது அவசிய மானது.

இன்றைய சமுதாயத்தின் மாற்றத்தில் நாம் நாளாந்தம் பல புதிய விடயங்களை அறிவதோடு அனுபவத்திலும் புதிய விடயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. நாளாந்தம் பல்வேறு மனிதர்களோடு பழகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. சமுதாய மாற்றத் திற்கேற்ப அறிவும் மிகவும் வேகமாகப் பரவு கின்றது. சிக்கலான சமூக அமைப்பினுள் நாம் வாழ்கின்றோம். ஆகவே இத்தகைய சூழ்நிலை யில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது மிகவும் பிரச்சினையாக உள்ளது. எனவே இவற்றை இலகுவாக எவ்வாறு கற்பிக்கலாம் என்றும், பிள்ளைகளை எவ்வாறு மகிழ்ச்சியுடன் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம் என்று தெரிந்து கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு உளவியல் தொடர்பான அறிவு அவசியமாகும்.

ஆசிரியர்களிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் குழந்தைகளைக் கையாளும் கலை பற்றி அவர்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளினுடைய இன்ப துன்பங்கள், விருப்பு வெறுப்புகள், நோய் நொடி கள், மன உளைச்சல்கள், மனமுறிவுகள் போன்றவற்றை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் உளவியல் பற்றி விளங்கிக் கொள்ளு தல் அவசியமாகும்.


செல்வி த. அனுஷா
ஆசிரியை ஞான வீர முன்பள்ளி
(Dip. in Preschool)



# வாய்ப்புற்றுநோயைத் தடுப்போம்!...

- உலகளாவிய ரீதியில் வாய்ப்புற்றுநோய் பாதிப்பில் இலங்கையானது 6வது இடத்தில் உள்ளது.
- ஆண்களில், மிக அதிகமாக காணப்படும் புற்றுநோய் ஆகும்.
- வயது வந்தவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
- முன்கூட்டியே அறிந்துகொண்டால் முழு மையாகக் குணப்படுத்தலாம்.
- ஆபத்துக் காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம், வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.




வாய்ப்புற்றுநோயைத் தடுப்போம்!...
அறிகுறிகள்
ஆறாத வாய்ப்புண்
வழமைக்கு மாறான இரத்தக்கசிவு
வாயினுள் தொடர்ந்து காணப்படும் வெள்ளை, சிவப்பு நிறமான தழும்புகள்
கழுத்துப்பகுதியில் நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல்
பற்களில் உறுதி தளர்தல்
தாடையை அசைப்பதில் சிரமம்
தவிர்க்கும் வழிமுறைகளும்
பாதகமான பழக்கவழக்கங்களை கைவிடுதல் (மது அருந்துதல், புகைபிடித்தல் )
பழங்கள் இலைகாய்கறிகளை அதிகமாக உண்ணல்
பல் மருத்துவரின் ஆலோசனையை 6 மாதத்திற்கு ஒருமுறை பெறுதல்.
வாயை அடிக்கடி சுய பரிசோதனை செய்தல்
அளவுக்கதிகமான காரப்பொருட்களை தவிர்த்தல்.

# கல்விப் பொதுத் தராதர உயர்தர பாடத்துறைகளும், பாடச்சேர்மானங்களும்

இலங்கையின் கல்வி முறைமையில், கல்வித்துறையின் முக்கிய நோக்கு நாட்டினுடைய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப விருத்திக் குகந்த அறிவு, திறன், மனப் பாங்குடைய மாணவர்களை உருவாக்குதல் என்பதாகவுள்ளது. இந்த நோக்கத்திற்காகப் பணியாற்றுகின்ற முக்கிய நிறுவனங்களாக பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் திகழ் கின்றன. பல்கலைககழகக் கல்விக்கான அடித்தளத்தை இட்டுத் தருகின்ற நிறுவனமாக பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்த வகையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர கற்கையின் அடைவைப் பரீட்சிக்கும், மாணவரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேசிய ரீதியான பொதுப் பரீட்சையாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முக்கியத்துவம் பெறுகின்றது.

#### கல்விப் பொதுத் தராதர உயர்தர கற்கைக்கான தகுதி

கல்விப் பொதுத் தராதர உயர்தர கற்கைகள் இரண்டு வருட (6 தவணைகள்) கால கற்கைகளாகும். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் போதனா மொழி (தமிழ் மொழி), கணிதம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றுள் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி (Credit) அல்லது அதனிலும் கூடியதோர் தரத்தினை பெற்றிருக்க வேண்டியது உயர்தரக் கற்கைக்கான அடிப்படைத் தேவையாகக் கருதப்படுகின்றது. இத்தகுதியினை ஒரு அமர்வில் அல்லது இரண்டு அமர்வுகளில் பெற்றுக்கொள்ளலாம் எனினும் முதல் அமர்வில் மூன்று திறமைச்சித்திகளுடன் போதனா மொழி அல்லது கணிதம் உள்ளடங்கலாக ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு அவ்வாறு பெற்றுக் கொண்டவர் அடுத்த அமர்வில குறித்த மொழி அல்லது கணித பாடத்தில் சித்தியினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தற்காலிகமாக உயர் தரத்தில் கற்க அனும திக்கப்படுவார். அதேபோன்று தேவையான திறமைச் சித்திகள் மூன்றில் ஒரு திறமைச் சித்தியினை பெற்றுக் கொள்ளாத சந்தர்பங்களில் மட்டும் க.பொ.த சா/த பரீட்சையில் சாதாரண சித்தி பெற்ற பாடத்திற்காக பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் பெற்றுக் கொள்ளும் திறமை அல்லது அதற்கு மேற்பட்ட தரச் சித்தியினை, குறித்த பாடத்தில் பெற்ற திறமைச்சித்தியாகக் கருதப்பட்டு க.பொ.த உயர் தரக் கல்வியினை கற்கமுடியும். எவ்வாறா யினும் இது போதனா மொழி மற்றும் கணித பாடங்களுக்குப் பாடங்களுக்குப் பொருந்தாது.

#### கல்விப் பொதுத் தராதர உயர்தர கற்கை

2012 ஆம் வருடம் வரை பாடசாலை களில் க.பொ.த உயர்தர கற்கைக்காக பின்வரும் நான்கு பாடத்துறை களினுள் ஏதாவது ஒரு துறையில் கல்விகற்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டி ருந்தது. அவையாவன.

1. உயிரியல் விஞ்ஞான துறை
2. பௌதிகவியல் விஞ்ஞான துறை
3. வர்த்தகத் துறை
4. கலைத்துறை

கடந்த வருடத்தில் ஐந்தாவது துறையாக தொழில்நுட்பத்துறையும் இணைத்து க்கொள்ளப்பட்டது. இன்றைய தொழிலுலகின் தேவையினைக் கருத்தில் கொண்டு பொருத்த மான மனித வளத்தை மாணவர் சமூகத்திலிருந்து உருவாக்கும் நோக்கில் இத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் கற்கும் மாணவர்களுக்கான பல்கலை கழகக்கற்கைக்காக இலங்கையின் சகல மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு

பல்கலைக்கழகக் கல்லூரி வீதம் 25 பல்கலைக் கழக கல்லூரிகள் நிறுவுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு பணிகளும் ஆரம்பிக்க ப்பட்டுள்ளன.

**க.பொத. உயர்தர கற்கைக்கான பாடச் சேர்மானங் களும் தகுதிப்பாடுகளும்**

**1. உயிரியல் விஞ்ஞானத்துறை:**

இத்துறையில் கற்பதற்காக மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் விஞ்ஞான பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியினை பெற்றிருப்பது கட்டாயமாகும். இத்துறையில் கற்க விரும்பும் மாணவர்கள் பின்வரும் பாடங்களுள் ஏதாவது மூன்றினைத் தெரிவு செய்து கற்க முடியும்.

1. உயிரியல்
2. இரசாயனவியல்
3. பௌதிகவியல்
4. விவசாய விஞ்ஞானம்
5. கணிதம்

எவ்வாறாயினும் மருத்துவத் துறை சார்ந்த (மருத்துவம், பல்மருத்துவம், விலங்கு மருத்துவம், சித்த மருத்துவம், தாதியியல், மருந்தகவியல், ஊடுகதிர்ப்படவியல், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம் போன்றன) பட்டப்படிப்பினை மேற்கொள்ளவதற்காக பொதுவாக முதல் மூன்று பாடங்களை மட்டுமே தெரிவு செய்ய முடியும். உயிரியல் விஞ்ஞானத்துறை சார்ந்த பல்வேறுபட்ட பல்கலைக்கழக கற்கைகள் உண்டு எனினும் இவற்றுள் அநேகமான கற்கை நெறிகளுக்காக இரசாயனவியல் பாடத்தினை மாணவர் தெரிவு செய்திருக்க வேண்டியது கட்டாயமாகும். இத்துறையில் கற்பவர்கள் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தினைக் கற்க முடியாது எனினும் க.பொ.த (உ/த) இல் ஒரு திறமைச் சித்தியுடன், க.பொ.த (சா/த) இல் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்த பட்சமாக திறமைச் சித்தியொன்றினைப் பெற்றிருப்பின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**2. பௌதிகவியல் விஞ்ஞான துறை**

இத்துறையில் கற்க விரும்பும் மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானத்திற்குப் போன்றே கணித, விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு கணித பாடத்தில் திறமைச் சித்தியினைப் பெற்றிருக்க வேண்டும். இத்துறையில் பின்வரும் பாடங்களுள் ஏதாவது மூன்றினைத் தெரிவு செய்து கற்க முடியும்.

1. இணைந்த கணிதம்
2. இரசாயனவியல்
3. பௌதிகவியல்
4. உயர்கணிதம்

எவ்வாறாயினும் பொறியியல் துறைசார்ந்த பட்டங்களுக்காக முதல் மூன்று பாடங்களை மட்டுமே தெரிவு செய்ய முடியும்.

**3. வணிகத் துறை**

வணிகத் துறையில் கற்கவிரும்பும் மாணவர்கள் க.பொ.த சா/த பரீட்சையில் முயற்சியாண்மைக் கற்கைகள் அல்லது வணிகமும் கணக்கீடும் அல்லது கணிதம் அல்லது வரலாறு பாடத்தில் திறமைச் சித்தியினை பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துறையில் கற்கும் மாணவர்கள் பின்வரும் பாடங்களுள் ஏதாவது இரண்டினைக் கட்டாயமாகத் தெரிவு செய்தல் வேண்டும். விரும்பின் மூன்று பாடங்களை யுமே இவற்றிலிருந்து தெரிவு செய்யலாம்.

1. கணக்கீடு
2. வணிகக்கல்வி
3. பொருளியல்

மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களில் இரண்டினை மட்டும் தெரிவு செய்த மாணவர்கள் மூன்றாவது பாடமாக பின்வரும் பாடங்களுள் ஒன்றினைத் தெரிவு செய்யலாம்.

1. வணிகப்புள்ளி விபரவியல்
2. புவியியல்
3. அரசியல் விஞ்ஞானம்
4. வரலாறு

5. அளவையியலும் விஞ்ஞான முறையும்
6. ஆங்கிலம்
7. ஜேர்மன்
8. பிரெஞ்சு
9. விவசாய விஞ்ஞானம்
10. இணைந்த கணிதம்
11. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்

#### 4. கலைத் துறை

கலைத்துறையில் கற்க விளையும் மாணவர்கள் தாம் தெரிவு செய்யும் மூன்று பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் க.பொ.த (சா/த) இல் திறமைச் சித்தியினை பெற்றிருக்க வேண்டும். இத்துறைக்காக அழகியல் பாடங்களுள் ஒன்றையோ அல்லது இரண்டையோ அல்லது மூன்றையுமோ தெரிவு செய்ய விரும்பின் அவர் குறித்த அழகியல் பாடத்தில் அல்லது ஏதாதொரு அழகியல் பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியினைக் கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகும். மொழிப்பாடங்களில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தினை ஒரு பாடமாகத் தெரிவுசெய்ய க.பொ.த (சா/த) இல் முறையே சிங்கள மொழியும் இலக்கியமும் அல்லது தமிழ் மொழியும் இலக்கியமும் அல்லது ஆங்கிலத்தில் திறமைச் சித்தியினையோ அல்லது அதற்குக் கூடிய தரத்தினையோ பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறே சமய அல்லது சமய நாகரிகமொன்றைத் தெரிவு செய்ய, குறித்த சமயத்தில் க.பொ.த (சா/த) இல் திறமைச் சித்தியினை பெற்றுக் கொள்ள வேண்டும். கலைத்துறையினைப் பொறுத்த வரையில் சமூகவிஞ்ஞான அல்லது பிரயோக சமூகக் கற்கை, சமயங்களும் நாகரிகங்களும், அழகியல் கல்விப் பாடங்கள், மொழிப் பாடங்கள் என நான்கு வகுதிக்களுக்குள் பல பாடங்கள் தெரிவிற்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன,

அ) சமூகவிஞ்ஞான அல்லது பிரயோக சமூகக் கற்கை

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு
4. மனைப் பொருளியல்,
5. அரசியல் விஞ்ஞானம்
6. அளவையியலும் விஞ்ஞான முறையும்
7. கணக்கீடு அல்லது வணிகப்புள்ளிவிபரவியல்
8. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம்
9. தொழில்நுட்பவியல பாடங்கள்
(குடிசார் தொழில்நுட்பவியல், பொறிமுறைத் தொழில்நுட்ப வியல், மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல், உணவுத் தொழில் நுட்பவியல், விவசாயத் தொழில்நுட்பவியல், உயிர்வளத் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்று)
10. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
11. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

ஆ) சமயங்களும் நாகரிகங்களும்.

1. பௌத்தம் அல்லது பௌத்த நாகரிகம்
2. கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரிகம்
3. இந்து சமயம் அல்லது இந்து நாகரிகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரிகம்
5. கிரேக்க உரோம நாகரிகம்

இ) அழகியல் கல்விப் பாடங்கள்

1. சித்திரம்
2. சங்கீதம் (கீழைத்தேய அல்லது மேலைத் தேய அல்லது கர்நாடக சங்கீதம்)
3. நடனம் (தேசிய அல்லது பரத நாட்டியம்)
4. நாடகமும் அரங்கியலும்

ஈ) மொழிப் பாடங்கள்

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2. அரபு, பாளி சமஸ்கிருதம்
3. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ருசியன் ஹிந்தி, ஜப்பான்

கலைத்துறையில் கற்க விரும்பும் மாணவர்களுக்கான தெரிவுகள் பலவாகக் காணப்பட்ட போதிலும் குறித்த துறையில் கற்கும் மாணவர்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- சமயப் பாடம் ஒன்றினைத் தெரிவு செய்யும் ஒருவர் அச்சமயத்துடன் தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினைத் தெரிவு செய் முடியாது.
- அழகியல் பாடங்களுள் ஒன்று அல்லது ஏதாவது இரண்டு பாடங்கள் தெரிவு செய்து கொள்ள முடியும். மூன்று பாடங்களும் அழகியல் பாடங்களாக அமையக்கூடாது.
- மொழிப் பாடங்களிலிருந்து ஏதாவது ஒன்றினை அல்லது இரண்டினை அல்லது மூன்றினையுமே தெரிவு செய்யலாம். ஏவ்வாறாயினும் மூன்று பாடங்களும் மொழிப் பாடமாகத் தெரிவு செய்பவர், மொழிப்பாடங்களின் கீழ் அடங்கும் முதலாவது உபதொகுதி மொழிப் பாடங்கள் மூன்றினையும் அல்லது உபதொகுதி 1, 2 ஆகிய இரண்டிலும் உட்படக்கூடிய வகையில் ஏதாவது மூன்று மொழிப் பாடங்களையும் தெரிவு செய்யலாம்.

### 4. தொழில்நுட்பத் துறை

இத்துறையினைத் தெரிவு செய்ய கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும். இதத்துறையில் பின்வரும் பாடங்களை கட்டாயமாகத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. பொறியியல் தொழில் நுட்பவியல் அல்லது உயிர்த் தொகுதி தொழில் நுட்பவியல்
2. தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

மூன்றாவது பாடமாக பின்வரும் பாடங்களுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்யலாம்.

1. பொருளியல்
2. புவியியல்
3. மனைப்பொருளியல்
4. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
5. ஆங்கிலம்
6. வணிகக்கல்வி
7. சித்திரம்
8. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்
9. விவசாய விஞ்ஞானம்
10. கணக்கீடு

பல்கலைக்கழகத் தெரிவிற்காக தற்போது Z புள்ளிகள் பயன்படுத்தப்படுவதால் மிகத் திறமையான மாணவர்கள் பட்டப் படிப்புகளுக்காகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள போதும், மாணவரின் பாடத் தெரிவானது Z புள்ளியினைத் தீர்மானிப்பதில் பெருஞ் செல்வாக்கு செலுத்துகின்ற முக்கிய காரணியாகவுள்ளது என்பது வெளிப்படையான உண்மை. மேலும் க.பொ.த (உ/த) இனைப் பொறுத்த வரையில், இலகுவாகக் கற்கக் கூடிய பாடம் எதுவெனத் தேடி தெரிவு செய்வதிலும் பார்க்க, தொழில் ஒன்றினை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கான அதிக சந்தரப்பங்களை ஏற்படுத்தித் தரும் பாடத்துறைகளை அல்லது பாடச் சேர்மானங்களைத் தெரிவு செய்து கற்பதே சிறந்ததாகும். இந்த வகையில் பாடச் சேர்மானங்கள் மற்றும் பாடத் தெரிவுகளில் மாணவரும் அவர்களை வழிப்படுத்தும் ஆசிரியர்களும் கவனஞ் செலுத்த வேண்டியது இன்றியமையாதாகும்.

**உசாத்துணை:**


- கல்வி அமைச்சு சுற்று நிருபம் இல.2009/16
- கல்வி அமைச்சு சுற்று நிருபம் இல.2008/17
- திங்கள், ஆகஸ்ட் 2013, அரசாங்கத் தகவல் திணைக்களம்.





திருமதி.பிரதீபா காயத்திரி கஜபதி
உதவிக்கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்)





**நிலையத் தலைவர் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்**

**06.11.2002**

# Vocabulary Learning Strategies Which Help ESL Learners to Enhance their Word Power

The fact that vocabulary is an important component of reading comprehension for all readers has been well established (Bensoussan & Laufer, 1984; Farr & Carey, 1986; Hague, 1987; Nation, 1990). First language reading re-searchers have estimated recognition vocabularies of fluent readers to range from 10,000 words to 100,000 words ( Nagy& Herman, 1987). Recognition vocabularies of second language readers are far lower, ranging from 5,000 to 7,000 words (Singer, 1981). This limited vocabulary does not meet the needs of second language learners who must deal with highly technical, infrequently used terms encountered in academic subject matter at the tertiary level.

In this article, I describe several specific strategies and the research that supports them. Identifying generative strategies in our classes, I teach generative reading strategies in the context of entire chapters from textbooks. Generative strategies are those that are student-initiated and monitored and can be employed in a variety of situations. Although there are a number of effective instructional strategies described in the literature, my interest was in identifying effective generative strategies that would enable students to become independent learners of the conceptual meanings of new words.

Each of the following strategies has been proven to help ESL learners develop their vocabularies as they learn from content materials. Each strategy incorporates one or more of the principles of effective vocabulary instruction offered by Stahl (1986). Both definitional and contextual information is included, students are involved in active processing, and students are given multiple exposures to the words. Each strategy also includes at least one of the three characteristics believed to be important in teaching language - first, that vocabulary learning is integrated with content instruction; second, that students are given access to vocabulary building activities in a nonthreatening cooperative context; and third, that learning activities are "scaffolded" so as to build background and promote learning (Reyes & Molner, 1991).

**Vocabulary selection strategies**

Research has shown that effective readers can tolerate a high degree of ambiguity, up to 15% of words in a passage (Irvin, 1990). Many ESL learners, on the other hand, have developed the habit of word-by-word reading, feeling the need to stop and look up, or even translate into their native language, most unknown words they encounter.

**Peer teaching.**

This is a strategy adapted from Haggard's (1986) Vocabulary Self-Collection Strategy and Parker's (1990) Desktop Teaching model. First, the student is asked to select one word from a section of the chapter the class is studying. The student must develop a justification for investing time in studying that particular word. The student then

chooses a strategy such as a word map or an image that s/he can use to teach the word's meaning to another student. The next day students share their words and the criteria they used to select them. Students are then paired according to Parker's model and alternately teach their word and learn the word of their partner. This leads to a good discussion of the criteria for crucial terms, and it also gives students the opportunity to compare the effectiveness of the different strategies used by their classmates.

**Crucial term identification.**

In this strategy the teacher selects an excerpt from the reading being studied by the class. The students are then instructed to read the excerpt and underline only those unfamiliar words that they feel they must know to comprehend the text. The next day, students compare their responses and discuss the criteria they used to select the words. This strategy is especially useful for illustrating the differences between the selection criteria for different types of reading assignments. For example, in a short story it is important that words relating to the plot be understood, while details about the appearance of a character may or may not be equally important. In a chapter from a textbook, words that appear in the introduction or summary may be targets for more intensive study, as are any words in bold type. Students are then asked to use one of the other strategies - context, imagery, or key word - to learn the meanings of the terms they have identified as crucial.

**Personal word lists**

Researchers have come to view vocabulary development as a gradual process, "the result of many encounters with a word towards a more precise grasp of the concept the word represents" (Parry, 1993, p. 127). If repeated encounters with a word in a meaningful context is the way most vocabulary is learned, a logical inference is that ESL readers should develop their ability to use context clues.

Although the effectiveness of context as a strategy for vocabulary growth in a first language has been debated, research has shown that a great deal of word meaning for an ESL student can be inferred from context (Parry, 1991). Nation (1990) also points out that the analysis of words into affixes and roots is an effective learning strategy.

Too often, ESL students ignore context and structure and instead quickly turn to their dictionaries. Their reading is peppered with frequent "stopper words" that break their concentration and comprehension (Anders & Bos, 1986). This is especially problematic if the student relies on bilingual dictionaries, which is frequently the case.

The Personal Word List or Personal Dictionary (Nist & Simpson, 1993) requires the student first to select an unfamiliar word from the current chapter. The student, rather than the teacher, does the selecting. Obviously, not all unfamiliar words have equal utility. I often spend time in class discussing the criteria for selecting a word for careful study.

The student is then directed to use either context or the structure of the word to infer a reasonable meaning. If the student is not satisfied that s/he has determined a close approximation of the meaning, or if there are no context or structure clues, s/he may go to the dictionary to find a definition. In this way, the Personal Word List is a combination of definitional and contextual approaches, but the emphasis is on determining meaning from context or structure when possible. Because the strategy is used within the

context of studying an entire chapter, it is likely that the word will reappear, thus naturally reinforcing its meaning.

In the beginning, Personal Word List assignments are very structured to ensure that students understand the process. Later the students are asked to gloss the meaning in their texts or simply list words and definitions to approximate a more realistic vocabulary learning experience.

**Semantic mapping**

There is general agreement among educators that vocabulary development involves the complex process of relating words to ideas that exist in the schema of the reader ( Irvin,1990).O ne explanation for vocabulary acquisition is the Knowledge and Access Hypothesis outlined by Hague (1987). According to this hypothesis, "new words are best learned in semantically related groups that are somehow related to words and knowledge that the reader already knows"( p. 219). Hague suggests that the vocabulary of second language learners should be taught" in semantic networks to the point of automatic access"( p. 220).

I do a variety of mapping activities in my classes. One generative vocabulary strategy is making a "word map." The student first selects a word s/he feels is worthy of special study, then tries to write down as many words as possible that relate to that word. S/he then organizes the words and relates them to one another in a meaningful way in the form of a map (see Figure 3). Word maps enable students to relate new words to those they know well. Because semantic mapping helps students see relationships between ideas and connect known information with new information, it is a valuable tool for developing their vocabulary.

**Imagery**

Relating a distinct visual image to a new word is a widely a ccepted learning tool. Likewise, associating a word with its visual or acoustic properties seems to improve recall for ESL learners (Brown & Perry, 1991 ). I encourage our students to create images whenever possible as a means of increasing under-standing and retrieval.

An approach to using imagery to develop vocabulary, which is often referred to in the ESL literature, is the "key word" method originally designed by Raugh and Atkinson (1975) for learning a foreign language. An associative link is created between a new word and a known word, phrase, or image that is acoustically and/or visually similar." For example, the Spanish word for inner side of our hand is '*palm*'. Employing the Tamil word '*paambu*' as the key word, one could imagine a person showing his palm to a snake. The new word is associated with a more familiar word in the student's first language, there-by enhancing comprehension and memory.

Although extremely effective for a small number of new words, the key word method seems to have limited usefulness in helping ESL students with the large number of abstract terms they must learn to deal with.

**Students' evaluations of strategies**

In order for a strategy to become generative (one that students will independently choose to use in the future), the strategy must be carefully modeled. Students must also be given ample practice in deciding how and when to apply the strategy effectively. Like any new skill, a new strategy requires extra effort in the beginning, and like all other learners, ESL students often resist doing something in a new way. It is a challenge for us as teachers to provide ample

practice while maintaining motivation so that our students will "own" the strategies we teach.

As ESL students enter our classes they identify using a dictionary as their primary strategy for finding a word's meaning as they read and study. At the end of the course, students more often mention using context and keeping a word list. Other strategies mentioned are using word cards, imagery, and key words.

**A mixed approach works**

Certainly reading is one of the most important skills for second language learners in academic settings. The strong relationship between reading comprehension and vocabulary knowledge presents teachers of ESL learners with the challenge of meeting their unique need for effective vocabulary-building strategies.

Although specific strategies for effective vocabulary learning have not been the subject of extensive research, both theory and research in second language acquisition seem to support a mixed approach to vocabulary acquisition in ESL. This includes encouraging extensive reading as well as teaching decontextualization and semantic map-ping skills and strengthening students' abilities to select vocabulary worthy of careful study. Teachers must work with students to identify those specific strategies that hold the most promise for helping them become enthusiastic and independent word learners.

**References**

Anders, P.L., & Bos, C.S. (1986). Semantic feature analysis: An interactive strategy for vocabulary development and text comprehension. Journal of Reading, 29, 610-616.

guessing in con-text in EFL comprehension, journal of Research in Reading, 1 ,

Brown, T.S., & Perry, F.L. (1991). A comparison of three learning strategies for ESL vocabulary acquisition. TESOL Quarterly, 25, 655-670.

Farr, R., & Carey, R. (1986). Reading: What can be measured! Newark, DE: International Reading Association. (ERIC Document Reproduction Service No. 266 438)

Haggard, M.R. (1986). The vocabulary self-collection strategy: Using student interest and word knowledge to enhance vocabulary g rowth. Journal of Reading, 29, 634-642.

Hague, S. (1987). Vocabulary instruction: What L2 can learn from LI. Foreign Language Annals,2 0, 217-225.

Irvin, J.L. (1990). Vocabulary knowledge: Guidelines for instruction. What research says to the teacher. Washington, DC: National Education Association.

Nagy, W., & Herman, P. (1987). Breadth and depth of vocabulary knowledge: Implications for acquisition and instruction. In M. McKeown& M. Curtis (Eds.), The nature of vocabulary acquisition (p p. 19-35). Hillsdale, NJ:Erlbaum.

Nation, I.S.P. (1990). Teaching and learning vocabulary. New York: Newbury House.

Nist, S.L., & Simpson, M.L.( 1993) Developing vocabulary concepts for college thinking. Lexington, MA:D .C. Heath.

Parker, J.F. (1990). Workshops for active learning. Delta, BC: JFP Productions.

Parry, K. (1991). Building a vocabulary through academic reading. TESOL Quarterly, 25, 629-651.

Parry, K. (1993). Too many words: Learning the vocabulary of an academic subject. In T. Huckin, M. Haynes, & J. Coady (Eds.),

Second language reding and vocabulary learning( pp. 109-129). Norwood, NJ: Ablex.
Raugh, M.R., & Atkinson, R.C. (1975). A mnemonic method for learning a second-language vocabulary. Journal of Educational Psychology,67 , 1-16.
Reyes, M.L., & Molner, L. (1991). Instructional strategies for second-language learners in the content areas, Journal of Reading, 35,96-102.
Stahl, S.A. (1986). Three principles of effective vocabulary instruction, Journal of Reading, 29, 662-671.



**A.Rasakumaran**
**Senior Lecturer in English Language,**
**English Language Teaching Centre**
**University of Jaffna, Sri Lanka**



# தமிழ் மொழி வாய்ப்பேச்சு மட்டுமல்ல

# எம் உயிர் மூச்சு

"பட்டினி கிடந்து பசியால் மடிந்து
பாழ் பட்ட நெஞ்சம் ஆனாலும் - எம்
கட்டுடல் தளர்ந்து கைகால் முறிந்தாலும்
என் உயிர்த் தமிழை என்றும் மறவேன்"

என்ற ஓர் அறிஞரின் கூற்றுக்கிணங்க எம் நாவோடு பிறந்த தமிழை எண்ணிப் பெருமை கொண்டு தமிழின் தொன்மை பற்றி ஆராய்ந்து சென்றால் பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றது.

உலகில் முதன் முதல் மக்கள் தோன்றிய நாடு தமிழகமும் அதனை யடுத்திருந்த கடல் கொண்ட தென்னாடுமே என நில ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

காவிரிப்பூம்பட்டினத்தில் நிலைத்து நின்று வாழும் தமிழ் மக்களை "பதியெழு அறியாப் பழங்குடியினர்" என இளங்கோ அடிகள் கூறுகின்றார். இதற்கு உரை கூறவந்த அடியார்க்கு நல்லார் " படைப்புக் காலந்தொட்டே வாழுங்குடியினர்" எனக் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் தோன்றிய காலத்தை குறிப்பிடும் பொழுது " கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியினர்" எனப் பரிமேலழகர் கூறுகின்றார். இது கற்பாறைகள் தோன்றிய காலத்திற்குப் பின்னும் அது மழை பெய்து பெய்து கரைந்து மண்ணாகத் தோன்றிய காலத்திற்கு முன்பும் உள்ள காலத்தை குறிப்பிடுவதாகும். இந்நிலத்து மக்கள் பேசிய மொழியே தமிழ் மொழியாகும்.

தமிழ் மொழியின் காலத்தை எவரும் கணித்துக் கூறுவதற்கில்லை ஏனெனில் அது காலங் கடந்த மொழி அதற்கு வரலாறு இல்லை எனவே அதன் தொன்மையை ஆராய்ந்து கூறுவதற்கில்லை எனினும், காவியமும் ஓவியமும், காவிரியும் வைகையும் கட்டிடமும், சிற்பமும், கல்வெட்டும், புதை பொருட்களும் ஒருவாறு தமிழ் மொழியின் தொன்மையை உலகிற்கு காட்டிக் கொடுக்கின்றது என்றால் மிகையாகாது.

மேலும் தமிழின் சிறப்புகளைப் பற்றி நோக்குவோமானால் தமிழ் அறிஞர்கள் பலர் தமிழை வளர்த்தாலும் G.U.போப் போன்ற தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டிருந்த அறிஞர்கள் தமிழைக் காதலித் துத் தமிழோடு வாழ்ந்து இறந்தவர்கள் மட்டுமன்றி தன் கல்லறையில் " நான் ஒரு தமிழ் மாணவன்" என்ற வாசகத்தை பொறிக்கச் சொன்னமை பெருமைக்குரியதொன்றாகும்.

நவீன விஞ்ஞானம் மிக சிறிய துணுக்கு அணு என கண்டுபிடித்து அறிந்தமை விஞ்ஞானத்தின் புரட்சிதான் ஆயினும் திருக்குறளைப் போற்றி ஔவையார்

" அணுவை துளைத்து ஏழ்கடலைப்
புரட்டி குறுகத் தந்த குறள்"

எனக் கூறினார்.

விஞ்ஞானத்தை மிஞ்சிய தமிழை நாம் ஔவையார் காலத்தில் கண்டுள்ளோம் என்றால் தமிழ் நிகரற்றதாகவே கருதமுடியும்.

தமிழின் சிறப்புக்கள் முற்றுப்புள்ளி அற்ற வாசகமாக அமையும் என்றால் அது மிகை யற்றது.

மேலும் இன்றைய காலகட்டத்தில் தமிழ்மொழியை சில இளைஞர்கள் நிராகரிக்க முயல்வது வெட்கப்படக்கூடிய வேதனையான

நிகழ்வுகள் ஆகும். நாகரிக மாற்றத்தில் தமிழை தவிக்க தவிக்க கொலை செய்வோரும் அதிகம்தான். இவ் இளைஞர்கள் தமிழை அவமானமாக கருதாமல் அவ் இனிய தமிழை அடையாளமாக கருதவேண்டும்.

மேலும்

" தமிழன் என்று சொல்லுடா
தலை நிமிர்ந்து நில்லுடா"

என்ற ஆன்றோர் கருத்துக்கிணங்க நாம் திமிரோடு தமிழைப் பேச வேண்டும் தமிழோடு வாழ வேண்டும்.

முக்கனியின் சாறுக்கு
நல்சுவையாய்
சித்திக்கும் எம்மொழிக்கு நீவீர்
எத்திக்கும் சென்றே தேடினும்
நிகரொன்று கண்டிட கூடுமோ?

என்ற கூற்றுக்கிணங்க இனிமை கொஞ்சும் தமிழை

" தாய்மொழி தமிழ் எம் கண்
வேற்றுமொழி எம் கண்ணாடி"


என்பது போல தேவைக்கு மட்டும் வேற்றுமொழியை உபயோகம் செய்து தமிழர் என்ற பெருமையை மனதார உணரவேண்டும்.

" தமிழுக்கு அமுதென்று பெயர்
அந்த தமிழ் இன்பத்தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்"

ஆகிய செம்மொழியை எம் சுவாசத்தில் நிறுத்தி தேன்மொழியை பேச்சில் மட்டுமன்றி எம் மூச்சிலும் கொள்வோம்.

" சங்கத்தின் கதிரொளி
காப்பியத்தில் வேரூன்றிய
எட்டுத் திக்கும் பரவியிருக்கும்
எம் தமிழ்"

செ.தனுஜன்
செயலாளர் - ஞானவீர ச.ச.நிலையம்
உபதலைவர்- ஞானவீர சிக்கன கடனுதவி
கூட்டுறவு சங்கம்.
கோண்டாவில்.



# தேசிய கல்விக் கல்லூரிகளின் தேவைப்பாடுகளும்

# க.பொ.த(உ.த), க.பொ.த(சா.த) மாணவர்களும்


**தேசிய கல்விக் கல்லூரிகளின் உருவாக்கம்**

இலங்கையில் ஆசிரியரது வாண்மைத்துவத்தை வழங்கும் நிறுவனங்களில் தேசிய கல்விக்கல்லூரிகள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. அத்தகைய தேசிய கல்விக்கல்லூரிகள் 1985ஆம் ஆண்டு முதல் அறிமுகமாகி இன்று நாடெங்கிலும் 18 தேசிய கல்வியியற் கல்லூரிகள் காணப்படுகின்றன. 19வது தேசிய கல்விக் கல்லூரியும் வர்த்தகப்பிரிவில் கற்ற மாணவர்களுக்காக தேசிய கல்வி நிறுவகத்தின் ஒரு பகுதியில் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இத்தகைய தேசிய கல்விக்கல்லூரிகள் செயற்படும் ஒழுங்கு விதிகள் பற்றி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் 1986ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 1986ஆம் ஆண்டின் 30ம் இலக்க கல்விக்கல்லூரிகள் சட்டம் வரையறுக்கின்றது.

இச்சட்டமானது கல்விக்கல்லூரிகளின் தோற்றம் பற்றி குறிப்பிடும் போது 1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கற்பித்தல் தகைமைகளையும், அக்கட்டளையில் குறித்துரைக்கப்படுவனவுமான நிறுவகத்தின் பட்டங்களையும், ஏனைய கல்விச் சிறப்புக் களையும் வழங்குவதற்கு இட்டுச் செல்வதற்கான கற்கைநெறியை நடத்தும் நோக்கத்துக்காக கல்விக்கல்லூரிகள் ஒன்றைத் தாபிக்கலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே தேசிய கல்விக்கல்லூரிகளின் தோற்றமானது தேசிய கல்வி நிறுவக ஆரம்பத்தின் அடுத்த கட்டமாகவே அமைகின்றன.

**கல்விக் கல்லூரிகளின் செயற்பாடுகளும் மாணவர் பெறும் நன்மைகளும்**

இலங்கையில் 19 கல்வியியற் கல்லூரிகள் உள்ளன. அவையாவன யாழ்ப்பாணம் தே.க.க, வவுனியா தே.க.க, மட்டக்களப்பு தே.க.க, அட்டாளைச்சேனை தே.க.க, தர்க்கா தே.க.க, ஸ்ரீபாத தே.க.க, நில்வளா தே.க.க, சியன தே.க.க, ருவான்புர தே.க.க, மகாவலி தே.க.க, ஊவா தே.க.க, பஸ்துன்ரட்ட தே.க.க, றுகுணு தே.க.க, வயம்ப தே.க.க, ஹாப்பிடிகம தே.க.க, புளத்ஷிபுர தே.க.க, சாரிபுத்த தே.க.க, பனிதெனியா தே.க.க(பெரதெனியா தே.க.க), மகரகம தே.க.க. அவை அமைந்துள்ள இடங்களை கீழேயுள்ள படத்தில் காணலாம்.




கல்விக்கல்லூரிகள் 3 ஆண்டுகள் கற்கை நெறிகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் முதல் இரண்டு வருடங்கள் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியாகவும். மூன்றாவது வருடத்தில் தாம் கற்றதை அறிவு ரீதியாவும், கோட்பாட்டு ரீதியாகவும் பிரயோகிப்பதற்கு கல்லூரியில் இருந்து 35 கி.மீ தூரத்தினுள் அமைந்துள்ள பாடசாலையில் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ள விடப்படுகின்றனர். இரண்டு வருடங்களும் கல்லூரியினுள் இருக்கும் போது அவர்களுக்கு தங்கும் இட வசதியும், உணவும் ஒவ்வொரு வருடமும் 10 மாதங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. மூன்றாவது வருடம் 10 மாதங்களுக்கு கொடுப்பனவாக ரூபா 3000யும் கொடுக்கப்படுகிறது. கல்லூரியல் பயிலும் மாணவர்கள் உள்ளகப் பரீட்சைகளிலும்,

இரண்டாம் ஆண்டின் இறுதியில் நடைபெறும் வெளிவாரியாக பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தும் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியானது சேவைக்கால முன்பயிற்சியாக அமைகின்றது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் உடன்வழங்கப்படுகின்றது. ஆனால் பட்டதாரி பட்டம் பெற்றவர்கள் குறிப்பிட்ட காலம் (சிலவேளையில் 5 வருடங்களும்) நியமனத் திற்காக காவல் காத்துக் கொள்ள வேண்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இவர்களின் நியமனத்தின் போது தராதர பத்திரமற்ற ஆசிரியர்கள் பெறும் சம்பளத்தை விட உயர்வாக இலங்கை ஆசிரிய சேவையில் 3-I (SLTS 3-I) இல் வைக்கப்படுகின்றார்கள். எதிர்காலத்தில் கல்விமானி (B.Ed) பட்டம் முதற்கட்டமாக, திறமையான (Merit) மாணவர்கள் உள்வாங்கப்பட்டு கல்வி நெறி 4 வருடங்களாக (ஒரு வருடம் நீடிப்பு) மாறும். இவர்கள் முதற்பட்டத்துடன் கல்வியில் பட்டமேற் டிப்ளோமா பெற்ற ஆசிரியர்கள் பெறும் சம்பளத்தைப் பெறுவார்கள். தொடர்ந்து கல்வியில் முதுமாணி கற்பதற்கும் இது வழிவகுக்கும்.

**யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் தேவைப்பாடுகளும் அனுமதியும்**

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம், கர்நாடக சங்கீதம், சித்திரம், நடனம், ஆரம்பக் கல்வி, விசேட கல்வி, கத்தோலிக்கம் ஆகிய பாடங்களும் ஆங்கில மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் போன்ற பாடங்கள் இருந்தன. தற்போது அழகியற்கலைப் பாடங்களான கர்நாடக சங்கீதம், சித்திரம், நடனம் என்பவற்றிக்கு போதியளவு ஆசிரியர்கள் இருப்பதனால் அதை இடைநிறுத்தி இருக்கின்றனர். தற்போதைய தேவையாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொடர்பாடல் தொழில் நுட்பம், ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அரசாங்கம் கொடுக்கின்றது.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ஆரம்பக்கல்வி போன்ற பாடங்களிற்கான அனுமதி கடந்த காலங்களில் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்ததை கீழே தரப்படும் அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களாக மாணவர்களின் பாடத்தெரிவு, சரியான முறையில் வர்த்தக மானியை வாசித்து நிரப்பாமை, பாடத்தெரிவு பற்றிய போதிய அறிவின்மை. போதிய வழிகாட்டல் இன்மை. க.பொ.த(சா.த) பெறுபேறு சரியான முறையில் இல்லாமை ( உதாரணமாக க.பொ.த(உ.த) இல் சிறந்த பெறுபேறு இருந்த போதும் க.பொ.த(சா.த) இல் 5 பாடங்களில் சித்தி காணப்படுதல், பின்னர் க.பொ.த(சா.த) பெறுபேறு எடுத்துத் தருவதாகக் கூறி க.பொ.த(உ.த) இல் சேர்ந்து படித்து பின்னர் எடுத்துக் கொடுப்பதற்கு மறந்தமை போன்றன). கடந்த வருடம் கல்வியற்கல்லூரிகளில் ஆரம்பக் கல்வி, வர்த்தகமும் கணக்கியலும் எனும் பாடநெறிகளுக்கு க.பொ.த. (சா.த) இல் குறைந்தது ஆங்கிலத்தில் திறமைச்சித்தி அல்லது ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி கேட்கப்பட்ட போது உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைக் கொண்டுள்ள மாணவர்கள் சிலர் மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாமை யால் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

| Year | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject | 2008 | | 2009 | | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
| | S | A | S | A | S | A | S | A | S | A | S | A |
| Primary. | 23 | 30 | 20 | 30 | 34 | 60 | 30 | 60 | 59 | 60 | 50 | 60 |
| Ma.(E.M) | 09 | 15 | 07 | 15 | 19 | 30 | 14 | 30 | 15 | 30 | 12 | 15 |
| Ma.T.M) | 10 | 15 | 07 | 15 | 18 | 30 | 12 | 30 | 10 | 30 | 07 | 30 |
| Sc(E.M) | 09 | 15 | 12 | 15 | 14 | 30 | 16 | 30 | 12 | 30 | 13 | 15 |
| Sc(T.M) | 06 | 15 | 13 | 15 | 08 | 30 | 14 | 30 | 21 | 30 | 30 | 30 |
| Eng. | 20 | 30 | 17 | 30 | 42 | 60 | 54 | 60 | 33 | 60 | 28 | 30 |
| Lib Inf. Sc | 06 | 15 | | | | | | | | | 19 | 30 |

**அட்டவணை 1 – யாழ்ப்பாண தே.க.கல்லூரி அனுமதிக்கப்பட்ட தொகையும் உள்வாங்கப்பட்ட தொகையும்**

S – தெரிவு செய்யப்பட்ட தொகை A– அனுமதிக்கப்பட்ட தொகை
E.M – ஆங்கில மொழிமூலம் T.M – தமிழ்மொழி மூலம்

தேசிய கல்வியல் கல்லூரியில் சேர்வதற்கான அடிப்படைத் தகுதிகள்

- இலங்கைப் பிரஜை
- சிறந்த ஒழுக்கம், உறுதியான உடல் உள நலம்
- குறிப்பிட்ட திகதிக்கு (உதாரணம் - 2014.01.01) இற்கு 25 வயதிற்கு மேற்படாது இருத்தல்
- கத்தோலிக்க/கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு குறிப்பிட்ட திகதிக்கு (உதாரணம் - 2014.01.01) 30 வயதிற்கு மேற்படாது இருத்தல்
- பௌத்த மத பாடநெறிக்கு குறிப்பிட்ட திகதிக்கு (உதாரணம் - 2014.01.01) 27 வயதிற்கு மேற்படாது இருத்தல்
- விவாகமாகாதவராய் இருத்தல்
- ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தில் பதிவு செய்யாதிருத்தல்
- ஏற்கனவே அரச நிறுவனங்களில் வேலை செய்து கொண்டிராமை

அடிப்படை கல்வித் தகைமைகள்

- க.பொ.த(உ.த) இல் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- க.பொ.த(சா.த) பிரதான பாடங்களில் 6 பாடங்களில் சித்தி அதில் 3 திறமைச் சித்தி (2 தடவைக்கு மேற்படாமல்). அல்லது முதலாவது தடவையில் குறைந்த பட்சம் 3 திறமைச்சித்தியுடன் 5 பிரதான பாடங்களில் சித்தி(சமயம், முதலாம் மொழி, ஆங்கிலம், கணிதம், அழகியற்கலை (சித்திரம், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும்), இலக்கியம்(சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு), விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், வரலாறு, தொழில் நுட்ப பாடம் (விவசாயம், வணிகக்கல்வியும் கணக்கீடும், நெசவுக் கைத்தொழில்) அல்லத 2008 ஆம் ஆண்டு க.பொ.த (சாதாரண) புதிய பாடத்திட்ட விண்ணப்பதாரிகள் முதலாவது மற்றும் மூன்றாவத தொகுதி பாடங்களில் ஏதாவது ஒரு பாடம்.
- மேற்குறிப்பிட்ட தகைமை இருந்தும் விசேட தகைமை இல்லாவிடின் 3 வது தடவையில் எடுத்துக் காட்ட முடியும்.
- தகைமைகள், செல்லுபடியாகும் திகதிக்கு அல்லது விண்ணப்ப இறுதித் திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

<u>பாட நெறிகளும் அதனை வழங்கும் கல்லூரிகளும் (2013 ஆம் ஆண்டின்படி)</u>

ஆரம்பக் கல்வி(தமிழ் மொழி மூலம்)

யாழ்ப்பாணம் தே.க.க, வவுனியா தே.க.க,மட்டக்களப்பு தே.க.க, அட்டாளைச்சேனை தே.க.க, தர்க்கா தே.க.க, ஸ்ரீபாத தே.க.க

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கில மொழி)

ருவான்புர தே.க.க

கணிதம்

1. தமிழ் மொழி மூலம்
   யாழ்ப்பாணம் தே.க.க, அட்டாளைச்சேனை தே.க.க, தர்க்கா தே.க.க, ஸ்ரீபாத தே.க.க
2. ஆங்கில மொழி மூலம்
   யாழ்ப்பாணம் தே.க.க, நில்வளா தே.க.க, சியன தே.க.க

விஞ்ஞானம்

1. தமிழ் மொழி மூலம்
   யாழ்ப்பாணம் தே.க.க, வவுனியா தே.க.க, மட்டக்களப்பு தே.க.க, அட்டாளைச்சேனை தே.க.க, ஸ்ரீபாத தே.க.க
2. ஆங்கில மொழி மூலம்
   யாழ்ப்பாணம் தே.க.க, நில்வளா தே.க.க, சியன தே.க.க

| | |
|---|---|
| சித்திரம் (தமிழ் மொழி மூலம்) | மட்டக்களப்பு தே.க.க |
| மனைப்பொருளியல் (தமிழ் மொழி மூலம்) | தர்க்க நகர் தே.க.க |
| தொழில்நுட்ப கற்கை – கலையும் கைப்பணியும் (தமிழ்மொழி மூலம்) | மட்டக்களப்பு தே.க.க |
| வடிவமைப்பும் தொழில்நுட்பமும்(தமிழ் மொழி மூலம்) | மட்டக்களப்பு தே.க.க |
| இரண்டாம் மொழி(தமிழ்) (சிங்கள மொழி மூலம்) | மகாவலி தே.க.க |
| இந்து சமயம்(தமிழ் மொழி மூலம்) | வவுனியா தே.க.க |
| இஸ்லாம்(தமிழ் மொழி மூலம்) | அட்டாளைச்சேனை தே.க.க |
| றோமன் கத்தோலிக்கம் ஃகிறிஸ்தவம் (தமிழ் மொழி மூலம்) | வவுனியா தே.க.க |
| தமிழ் (தமிழ் மொழி மூலம்) | பெரதெனியா தே.க.க<br>தர்க்கா தே.க.க<br>ஸ்ரீபாத தே.க.க |
| விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ் மொழி மூலம்) | வவுனியா தே.க.க |
| உடற்கல்வி(தமிழ் மொழி மூலம்) | வவுனியா தே.க.க |
| (ஆங்கில மொழி மூலம்) | ஊவா தே.க.க |
| ஆங்கிலம் (ஆங்கில மொழி மூலம்) | யாழ்ப்பாணம் தே.க.க<br>பஸ்துன்ரட்ட தே.க.க<br>மகாவலி தே.க.க<br>பேராதெனியா தே.க.க |
| சங்கீதம் (கர்நாடகம்) (தமிழ் மொழி மூலம்) | மட்டக்களப்பு தே.க.க<br>ஸ்ரீபாத தே.க.க |
| மேற்கத்தேய சங்கீதம் | மகாவலி தே.க.க |
| வணிகமும் கணக்கியலும் (தமிழ் மொழி மூலம்) | வவுனியா தே.க.க |

அட்டாளைச்சேனை தே.க.க
மகரகம தே.க.க
விசேட கல்வி (தமிழ் மொழி மூலம்) அட்டாளைச்சேனை தே.க.க,
யாழ்ப்பாண தே.க.க

பாட நெறிகளும் அதன் அடிப்படைத் தகுதிகளும் (2014 ஆம் ஆண்டின்படி)

- ப ஆரம்பக்கல்வி
    - 2012 ஆம் ஆண்டில் க.பொ.த(உ.த) தமிழ் உடன் 3 பாடங்களில் சித்தி
    - க.பொ.த(சா.த) இல் தமிழ், கணிதம், ஆங்கிலம் என்பவற்றில் C உடன் குறைந்தது 6 பிரதான பாடங்களில் சித்தி
    - மாவட்டத்தில் போதியளவு ஆங்கிலம் C உடன் இல்லாவிடின் ஆங்கிலம் ளு கவனத்தில் கொள்ளப்படும்
- விஞ்ஞானம் (தமிழ்/ஆங்கிலம்)
- க.பொ.த(உ.த)இல் பௌதீகம், இரசாயனவியல், உயிரியல் 3 பாடம் சித்தி
- க.பொ.த(சா.த)இல் தமிழ் S, கணிதம் C உட்பட பிரதான 6 பாடங்களில் சித்தி
- விஞ்ஞானம் (ஆங்கிலம்) இற்கு 50% ஆங்கில மொழி மூலம் கற்ற மாணவர்களும் 50% தமிழ் மொழி மூலம் கற்ற மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர்
- கணிதம்(தமிழ்/ஆங்கிலம்)
- பௌதீகம், இரசாயனவியல், கணிதம் (கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் இவற்றுள் ஒன்று) 3 பாடங்களில் சித்தி
- தமிழ் S, விஞ்ஞானம் C, உட்பட பிரதான 6 பாடங்களில் சித்தி
- கணிதம் (ஆங்கிலம்) இற்கு 50% ஆங்கில மொழி மூலம் கற்ற மாணவர்களும் 50மூ தமிழ் மூலம் கற்ற மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர்
- இந்து சமயம்
- 2012 ஆம் ஆண்டில் க.பொ.த(உ.த) இல் - இந்து சமயம், இந்து நாகரிகம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் மூன்றில் ஒன்று உட்பட 3 பாடங்களில் சித்தி
- O/L-தமிழ், கணிதம், இந்துசமயம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- (முன்னுரிமை — 1.இளம் சைவப் புலவர் பத்திரம், 2. சைவ சித்தாந்த பண்டிதர் பத்திரம், 3.சைவப் புலவர் பத்திரம்- 123, 12/13, 1/2/3. -)
- இஸ்லாம்
- A/L -இஸ்லாம், இஸ்லாம் நாகரிகம், அரபு ஆகியவற்றில் மூன்றில் ஒன்று
- O/L-தமிழ், கணிதம், இந்துசமயம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- (முன்னுரிமை- 1.அல் ஆலிம் ஆரம்ப, இறுதி பரீட்சை சித்தி, 2.அல் ஆலிம் ஆரம்ப, பரீட்சை சித்தி, 3.மௌலவி சான்றிதழ் - 123, 23, 3. -)
- R.C / கிறிஸ்தவம்
    - A/L- 3 பாடம்
    - O/L இல் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
    - A/L கிறிஸ்தவ சமயம் S அல்லது O/L கத்தோலிக்கம்/ கிறிஸ்தவ சமயம் C, ஆசிரியருக்கு பொருத்தம் என்று பங்குத்தந்தை உறுதிப்படுத்திய கடிதம்
    - முன்னுரிமை- தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பாக 4 வருட சான்றிதழ் /தே.க.க. மெய்யியல் சான்றிதழ் /.......
- தாய் மொழி (தமிழ்)
- க.பொ.த(உ.த) தமிழ் C உடன் 3 பாடங்களில் சித்தி
- க.பொ.த(சா.த) தமிழ் C, கணிதம் உடன் 6 பாடங்களில் சித்தி
- ஆங்கிலம்
    - க.பொ.த(உ.த) ஆங்கிலம் உடன் 3 பாடங்களில் சித்தி
    - க.பொ.த(சா.த) ஆங்கிலம் C/ ஆங்கில இலக்கியம் S, தமிழ், கணிதம் உடன் 6 பாடம் சித்திஃ லண்டன் சோதனையில் சித்தி

- க.பொ.த(உ.த) 3 பாடங்களில் சித்தி, க.பொ.த(சா.த) ஆங்கிலம் B/ ஆங்கில இலக்கியம் C, தேர்வுப் பரீட்சை
- சித்திரம்/நடனம்/கர்நாடக சங்கீதம்/நாடகமும் அரங்கியலும்
- க.பொ.த(உ.த) இல் பாடநெறிக்கு ஏற்ப சித்திரம்/ நடனம்/ கர்நாடக சங்கீதம்/ நாடகமும் அரங்கியலும் உடன் 3 பாடங்களில் சித்தி
  - க.பொ.த(சா.த) தமிழ் பாடநெறிக்கு ஏற்ப சித்திரம்/நடனம்/கர்நாடக சங்கீதம்/நாடகமும் அரங்கியலும், கணிதம் உடன் 6 பாடங்களில் சித்தி, க.பொ.த(உ.த) இல் பாடத்தில் பெற்ற தரத்திற்கு ஏற்ற புள்ளிகள்
- உடற்கல்வி
  - க.பொ.த(உ.த) இல் 3 பாடங்களில் சித்தி
  - க.பொ.த(சா.த) தமிழ் , சுகாதாரமும் உடற்கல்வியும், கணிதம் உடன் 6 பாடங்களில் சித்தி , அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள், நிகழ்ச்சிகள், செயற்பாடுகளிற்கு - புள்ளிகள் (சர்வதேச மட்டம், தேசியமட்டம், மாகாணமட்டம், மாவட்டம், வலய மட்டம், பிரதேச செயலக மட்டம், ரெஜிமன்ட் சார்ஜன்ட், ஜனாதிபதி சாரணியமும் பெண் சாரணியமும்) 1,2,3
  - வணிகமும் கணக்கியலும்
  - க.பொ.த(உ.த) கணக்கியல், வணிகக்கல்வி உட்பட 3 பாடங்களில் சித்தி
  - க.பொ.த(சா.த) வணிகமும் கணக்கியலும்/ கணிதம்/ முயற்சியாண்மைக்கல்வி என்பவற்றில் ஒரு பாடத்தில் C, ஆங்கிலம் - C /ஆங்கில இலக்கியம் S, தமிழ், உட்பட 6 பாடங்களில் சித்தி
- இரண்டாம் மொழி (தமிழ்)
  - க.பொ.த(உ.த) தமிழ் C உடன் 3 பாடங்களில் சித்தி
  - க.பொ.த(சா.த) தமிழ் , கணிதம் உடன் 6 பாடங்களில சித்தி
  - (முன்னுரிமை – 2ம் மொழி சிங்களம் S/ அரச கரும 2ம் மொழி சித்தி/ விருப்புக்குரிய சிங்களத்தில் சித்தி)
- விசேட கல்வி
  - க.பொ.த(உ.த) 3 பாடங்களில் சித்தி
  - க.பொ.த(சா.த) தமிழ் , கணிதம் உடன் 6 பாடங்களில் சித்தி

விண்ணப்பிக்கும் முறை

ஒருவர் 3 வெவ்வேறு பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும், ஒரு பாடத்திற்கு 2 மொழி மூலம் என்றால் 2 பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்கமுடியும்

தெரிவு

- ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொ.நு, உடற்கல்வி பாட நெறி தவிர்ந்த ஏனைய பாடநெறிக்கு 'Z' புள்ளி அடிப்படையாக அமையும்.
- ஒத்த புள்ளி இருப்பின் க.பொ.த(சா.த) பெறுபேறு கவனத்தில் கொள்ளப்படும். A-4, B-3, C-2, S-1பிரதான பாடத்திற்கு மாத்திரம் புள்ளிகள் இடப்படும்.
- உடற்கல்வி, சங்கீதம், நடனம் பிரயோகப்பரீட்சையில் தகைமை மட்டத்தை அடைந்திருத்தல்
- ஆரம்பக்கல்விக்கு தேசிய மட்டத்தில் 50%, கஷ்ட மாவட்டத்தில் 50%, ஏனைய பாடங்களிற்கு தேசிய மட்டத்தில் 25%,கஷ்ட மாவட்டத்தில் 75%ஆக அமையும்.

மாணவர்கள், பெற்றோர்களுக்கு கல்விக்கல்லூரி அனுமதி தொடர்பான விழிப்புணர்வையும், சரியான வழிகாட்டலையும் ஆசிரியர்கள், அதிபர், கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் போன்றோர் மேற்கொள்ள வேண்டிய கட்டாய கடமையாகும். இதை செய்யத் தவறும் பட்சத்தில் விரக்தியின் உச்சத்திற்குச் சென்று மாணவர் சமுதாயம் எதிர்காலத்தில் பல்வேறு சமுதாயப் பிறழ் நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

# க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாட விதானம்

அறிவியல் சார்ந்த சமூகத்தின் எழுச்சிக்கு கல்வி தனது உன்னத பங்களிப்பை நல்கி வருகின்றது. பிரயோக அணுகுமுறை கொண்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வேலை உலகை மற்றும் தொழில் நுட்ப உலகினை அறிமுகப்படுத்துவதன் மூலம் கல்வித்துறைசார் செயற்பாடுகளை விருத்தி செய்தல் என்பவற்றுக்காக யுனெஸ்கோ மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. "மகத்துவம் மிக்க திட்டமான திறன்கள், அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் புரட்சிக்காக கல்வித்துறையை உள்வாங்குவதன் மூலம் நாட்டிற்கு ஏற்றவகையில் கல்வியையும், அறிவையும் மீளமைப்பேன். உலகத்தில் அறிவுமிக்க மையமாக இலங்கையை மீண்டும் மாற்றுவேன்." என்பது மகிந்த சிந்தனையில் அடங்கியுள்ள வாசகங்களாகும். ( மகிந்த சிந்தனை பக். இல 16)

**இலங்கையில் தொழில்நுட்பக் கல்விக்கான தேவை**

இலங்கையில் எழுத்தறிவு வீதம் 98% ஆக இருந்தபோதிலும் தொழில்நுட்பம் சார்ந்த அறிவில் இலங்கையர்கள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். (கணினிசார் எழுத்தறிவு வீதம் 38 வீதமாகும்) காப்பற் வீதி அமைத்தல், விமானத்தள ஓடுபாதை அமைத்தல் முதலிய நுட்பமான வேலைகளை ஆற்றுவதற்கு வெளிநாடுகளிலிருந்து ஆளணியினரை வரவழைக்கும் நிலைமையே இன்று காணப்படுகின்றது. எமது நாட்டில் வழங்கப்படும் கல்வியில் இத்தகைய தொழில்நுட்பம் சார்ந்த பிரயோக அணுகுமுறை காணப்படவில்லை என்ற கருத்தை பல கல்வியாளர்கள் முன்வைக்கின்றனர்.

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட கல்வி ஒருங்கிணைவு மாநாட்டில் (Education Symposium) இலங்கையில் உயர்தர வகுப்புக்களில் பாடத்தெரிவை மேற்கொள்வோர் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்படி க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான, கணிதப் பிரிவுகளில் 22 வீதமானோரும் வர்த்தகப் பிரிவில் 27 வீதமானோரும் கலைப்பிரிவில் 51 வீதமானோரும் கல்வி கற்கின்றனர் என்ற தரவு வழங்கப்பட்டது. இதேவேளை மூன்றரை இலட்சம் மாணவர்கள் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி ஏறத்தாழ 25000 மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகின்றனர் என்ற செய்தியும் கல்வி அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் தொழில்நுட்ப கல்லூரிகளை நாடி பட்டம் பெறுவதில் ஆர்வம் காட்டுவதைவிட வெளிவாரியாக கலைப்பட்டம் ஒன்றை பெற்றுக்கொள்வதிலேயே அதிக ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர். எமது நாட்டில் பட்டம் பெற்றவர்கள் யாவருக்கும் ஏதோ ஒரு வகையில் அரச வேலைவாய்ப்பை வழங்கும் நடைமுறை காணப்படுவதாலேயே இந்நிலைமை உள்ளது.

உயர்தர கலைப்பிரிவில் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத அநேகர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். கலைப்பட்டப்படிப்பை பூர்த்தி செய்தும் உரிய தொழில்வாய்ப்பை பெறுவதில் பட்டதாரிகள் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாடவிதானத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில்சார் கற்கை நெறிகளில் மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்த முடியும். 2016 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர விஞ்ஞான, கணிதப் பிரிவில் கற்போருடைய தொகையை 40 வீதமானோராக அதிகரிப்பதற்கும் கலைப்பிரிவில் 25 வீதமானோராகக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொழில்நுட்ப கற்கைக்கான அடிப்படைத் தகைமைகள்**

கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் இல. 25/2013 இன் மூலம் உயர்தர வகுப்புகளில் தொழில்நுட்ப கற்கைக்காக மாணவர்களை அனுமதிப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 3 திறமைச்சித்திகளுடன், 6 பாடங்களில் (கணிதம், விஞ்ஞானம் உட்பட) பாடங்கள் சித்தியடைந்தவர்கள் தொழில்நுட்பவியல் பாடநெறிக்கு அனுமதிக்கப்படலாம்.
2. கணிதம், விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி போதுமானது.

**தொழில்நுட்ப கற்கையில் உள்ளடங்கும் பாடங்கள்**

இக் கற்கைநெறி மூன்று பிரதானமான பாடக்கூறுகளைக் கொண்டது.

முதலாவது பாடம் - பொறியியல் தொழில்நுட்பம் அல்லது உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

இரண்டாவது பாடம் - தொழில்நுட்பவியல் விஞ்ஞானம்

மூன்றாவது பாடம் - (பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று)

| | |
|---|---|
| பொருளியல் | புவியியல் |
| மனைப்பொருளியல் | ஆங்கிலம் |
| தொடர்பு சாதனம் மற்றும் ஊடகக்கற்கை | சித்திரம் |
| தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் | விவசாயம் |

**பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்தின் உள்ளடக்கம் வருமாறு**

பொறியியல் தொழில்நுட்பமானது நிருமாணிப்புத் தொழில்நுட்பம், போக்குவரத்துச்சாதனத் தொழில்நுட்பவியல், சுற்றாடல் பிரச்சினைகள் ஆகிய துறைகள் சார்ந்ததாகும்.

தரம் 12 வகுப்பில்

⏭ பொறியியல் தொழினுட்பத்திற்கான அறிமுகம் அடிப்படை மோட்டார் வாகனத் தொழினுட்பம்

⏭ அடிப்படை மின் தொழினுட்பம் / வீட்டு மின்சுற்று அடிப்படை கட்டுமான தொழினுட்பம்

⏭ அடிப்படை உற்பத்தித் தொழினுட்பம் பொருத்தும் தொழினுட்பம்

⏭ பொறியியல் வரைபுகள் அலகுகளும் அளவீடுகளும்

⏭ இயக்க மற்றும் வலு ஊடுகடத்தும் மூலங்கள்

⏭ தொழினுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும் ஆகிய பாடப் பரப்புக்களும்

தரம் 13 வகுப்பில்

⏭ மின் இயந்திரங்களும் வலு முறைமைகளும்

⏭ அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும்

⏭ வீட்டு நீர் விநியோகமும் சுகநல வசதிகளும் திரவ இயந்திரங்கள் (பம்பி, சுழலி)

⏭ பொறியியல் தரங்களும் தரக்கட்டுப்பாட்டு முறைமைகள்

அளத்தல்

⏭ மதிப்பீடும் B.O.Q.வைத் தயாரித்தலும்

⏭ முயற்சியாண்மையும் முகாமைத்துவமும் ஆகிய பாடப்பரப்புக்களும் இடம்பெறுகின்றன.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் பாடத்தின் உள்ளடக்கம் வருமாறு**

உயிர் முறைமைகள் தொழில்நுட்பமானது சூழலியல் பொறியியல், உயிரியல் பதப்படுத்தல் பொறியியல், உயிர் மருத்துவப் பொறியியல், விவசாயம் ஆகிய தொழில்நுட்பங்களை அடக்கியதாகும். ஆகவே உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியலானது இத்துறையில் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதும் பொறியியல் மற்றும் பிரயோகப் பொறியியல் ஆகியவற்றின் உப பிரிவாகவும் அமைந்துள்ளது.

தரம் - 12 வகுப்பில்

⏭ உயிர்முறைமைகள் தொழினுட்பத்தின் அறிமுகம்,

⏭ நீரியிலும் காலநிலையியலும்

⏭ மண்ணும் நீரும்

⏭ அளவையும் மட்டப்படுத்தலும்

- தாவர இனப்பெருக்கத் தொழினுட்பம்,
- அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பம்,
- உணவுச் சேர்மானங்கள்,
- நீரின் தரம்
- நீர்ப்பாசனத் தொழினுட்பம்
- செயற்றிட்டங்கள் ஆகிய பாடப்பரப்புக்களும்
- உணவுப் பாதுகாப்பும் சட்டவரையறைகளும்
- உணவுகளைப்பொதியிடலும் பெயர்ச்சுட்டியிடலும்
- அடிப்படை இலத்திரனியல்
- நீருயர்த்தல்
- பீடை முகாமைத்துவம்

தரம் - 13 வகுப்பில்

- கால்நடை வளர்ப்பு
- பண்ணைக் கட்டமைப்புகள்
- மலர்ச்செய்கையும் தரையலங்கரிப்பும்
- மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும்
- தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்
- உணவு நற்காப்புத் தொழினுட்பம்
- ஆளுகை நிபந்தனைகளின் கழானபயிர்ச்செய்கை
- பண்ணைப் பொறிமுறைப்படுத்துகை
- காடுகளும் வன உற்பத்திகளும்
- முயற்சியாண்மை

ஆகிய பாடப்பரப்புக்களும் போதிக்கப்படும்.

**தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் என்ற பாடத்தின் உள்ளடக்கம் வருமாறு**

- நுண்ணுயிரியல்
- பல்பகுதியப் பதார்த்தங்களின் பயன்பாடு
- செரமிக், கண்ணாடி நனோ பதார்த்தங்கள்
- அடிப்படைக் கணிதம்
- கேத்திர கணிதம்
- விவரப் புள்ளிவிபரவியல்
- விசை
- நியூட்டனின் விதிகள்
- இயக்கம்
- கணினிப் பணிசெயல் முறைமைகள்
- இணையமும் தொடர்பாடலும்
- உயிர்மூலப்பொருள்களின் முக்கியத்துவம்
- பிளாத்திக்கு மீள்சுழற்சி
- இலங்கையின் இரசாயனக் கைத்தொழில்கள்
- திரிகோண கணித விகிதம்
- சார்புகள்
- காவிகள்
- விறைப்பான பொருளொன்றின் சமநிலை
- புவியீர்ப்பு
- கணினி
- மென்பொருள்களின் பயன்பாடு
- சடப்பொருள்களின் பொறிமுறை இயல்புகள்

⏭ பாயிகள்

⏭ இலத்திரனியல்

⏭ அலைகள்

⏭ மின்னியலும் காந்தவியலும்

⏭ வெப்பம்

**கற்கைநெறியின் நோக்கங்கள்**

1. நாளாந்த வாழ்விற்கு பயன்படுத்தும் தொழில்நுட்பத்திறமைகளை மாணவர்களுக்கு வழங்குதல்.
2. உண்மையான உலகில் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்ப தீர்வுகளைக் காண்பதற்கான இயலுமைகளை விருத்தி செய்தல்.
3. ஊழியர் சந்தைக்கு ஏற்றவாறு திறமைகளை வழங்குதல்.
4. தேசியத் தொழிற்தகைமை கோட்பாட்டிற்கமைய தொழில் கல்விக்காக மாணவர்களை ஈடுபடுத்துதல்.

**இப்பாடத்துறையின் சிறப்பம்சங்கள்**

1. கல்வி அமைச்சும் இளைஞர் விவகார மற்றும் தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இணைந்தே இப்பாட நெறியை வடிவமைத்துள்ளதுடன் அமுலாக்கலில் இரு அமைச்சுக்களும் பங்கெடுக்கின்றன.
2. தொழில்நுட்ப பாடத்துக்கான ஆசிரியர்களை வழங்குதல் பிரயோக செயற்பாடுகளுக்கு வசதியளித்தல், பிரயோக பரீட்சைக்கான புள்ளியிடல் என்பன இளைஞர் விவகார மற்றும் தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.
3. இரண்டாம் வருட இறுதியில் வழமைபோல் எழுத்துமூல பரீட்சை நடைபெறும்.
4. பொறியியல் தொழில்நுட்பம் உயிரியல் முறைமைக்கான தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைக்கு 75 புள்ளிகளும் பிரயோக பரீட்சைக்கு 25 புள்ளிகளும் வழங்கப்படும்.
5. பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டாற்கூட பரீட்சையில் சித்தியடையும் யாவருக்கும் சர்வதேச அங்கீகாரமுள்ள தேசிய தொழிற்கல்வி தகைமைச் சான்றிதழ் (National Vocational Qualificational) ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| பரீட்சை பெறுபேறு மட்டம் | அனுமதி பெறக்கூடிய கற்கை நிலையம் | கிடைக்கும் சான்றிதழ் |
|---|---|---|
| உயர் புள்ளியுடன் விசேட சித்தி | பல்கலைக் கழகம் (தொழிநுட்ப விஞ்ஞான பீடம்) | Degree |
| சித்தி-I | பல்கலைக் கழக கல்லூரி | Diploma |
| சித்தி-II | ரத்மலான ஊருகொடவத்த கட்டுனாயக்க | Diploma |
| சித்தியின்மை | தொழிநுட்ப கல்லூரிகள்-18 மாதம் | NVQ IV Certificate |

க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் இல்லாமலே – அரசாங்கம் வழங்கும் - தொழில் ஒன்றை சிரமமின்றிப்பெற உதவும் ஒரு தகைமைச் சான்றிதழ் இதுவாகும். க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் இருந்தோ இல்லாமலோ ஒருவர் பட்டமொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய (B.Tech) தொழிற்கல்வியை NVQ சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதனூடாக அடையமுடியும்.

| | | | |
|---|---|---|---|
| மட்டம் 7 | திட்டமிடல் நிர்மானம் | பட்டம் | தொழினுட்ப பல்கலை |
| மட்டம் 6 | முகாமைத்துவம் | டிப்ளோமா | தொழினுட்ப கல்லூரி |
| மட்டம் 5 | மேற்பார்வை | | |
| மட்டம்4 | சுதந்திரமாக பணியாற்றல் | சான்றிதழ் | |
| மட்டம் 3 | பரிட்சியமற்ற தொழிலில் பயிற்சி | | |
| மட்டம் 2 | பரிட்சயமுடைய தொழிலில் பயிற்சி | | |
| மட்டம் 1 | அடிப்படை ஆற்றல்கள் | | |

உலகில் பல வளர்முக நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகள் இந்த கல்வி வழங்கும் முறையை தத்தமது நாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளன. NVQ மட்டம் 1-3 அரச மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்னள் தனியார் துறையினரால் பயிற்சி வழங்கப்படுகின்றது. இது இலங்கையில் இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட 382 நிலையங்களில் 14 வகையான பயிற்சிகள் இதன் கிழ் நடாத்தப்படுகின்றன.

NVQ மட்டம் 4 என்பது நாடெங்கிலும் உள்ள 38 தொழில்நுட்பக் கல்லூரிகள் ஊடாக பெறப்படும் சான்றிதழ் ஆகும். இவை 6 மாதம் முதல் 3 வருடங்கள் வரையிலான காலப் பயிற்சிகள் ஆக உள்ளன. இவற்றை பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ மேற்கொள்ள முடியும்.

NVQ மட்டம் 5உம் 6உம் தேசிய டிப்ளோமாவும் , உயர் தேசிய டிப்ளோமாவும் பட்டங்களை வழங்கும் கற்கை ஆகும். ஒரு மாகாணத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் தாபிக்கப்படும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் தேசிய டிப்ளோமாவும் உயர் தேசிய டிப்ளோமாவையும் பெற்றுக் கொள்ளலாம்.

NVQ மட்டம் 7 என்பது தொழினுட்பவியல் பட்டத்தை ( Bachelor of Technology ) பல்கலைக் கழகத்தின் ஊடாக வழங்கும் செயற்பாடு ஆகும்.

உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஒருவர் தனக்குரிய மட்டத்திற்கான கற்கைக்கு உள்வாங்கப்படுவார். பரீட்சையில் சித்தியடைந்து மேற்கல்வியைத் தொடராவிட்டாலும் சுதந்திரமாகப் பணியாற்றக் கூடிய தகைமையைப் பெறும் வாய்ப்பு இத்துறையில் கற்பதால் ஏற்படும்.

தொழினுட்பப் பாடங்களுக்குரிய பாடநூல், ஆசிரியர்கள்

தொழினுட்பப் பாடங்களுக்குரிய பாடநூல்கள் கல்வி அமைச்சினால் ஆக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இவை சிங்கள மொழியில் வெளிவரவுள்ளன. ஓரிரு மாதங்களுள் இதன் தமிழ்ப்பதிப்பு வெளிவரும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. தவிர, இத்துறையில் போதிப்பதற்காக முதற்கட்டமாகப் புதிதாக 600 ஆசிரியர்கள் 2014 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நியமிக்கப்படவுள்ளனர். ஓய்வு பெற்ற பொறியியலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களாக அமர்த்தி இத்துறையைப் போதிப்பதற்கான நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படவுள்ளன.

கற்கை நெறியை அமுற்படுத்துவதிலுள்ள சவால்கள்

இக் கற்கை நெறி புதிதானது ஆகையால் பொருத்தமான மனித வளங்களையும் பௌதிக வளங்களையும் பெற்றுக் கொள்வது சவாலானது ஆகும். இதனாலேயே கல்வி அமைச்சு தனது எல்லைகளைக் கடந்து இளைஞர் விவகார மற்றும் தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சின் உதவியை நாடியுள்ளது. முதலாவது தெரிவுப் பாடத்திற்குரிய செயன்முறைப் பயிற்சிகளை மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரி சார்ந்த வளவாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வர். இக் கற்கை நெறியை நடைமுறையில் அமுலாக்கும் போது நேரசூசிகை வழங்குதல், மற்றும் வேலைத்தளங்களுக்கான போக்குவரத்து போன்றவற்றில் சிக்கல்கள் எதிர் கொள்ளப்படும். இப் பாடத்துறை புதிதாக இருப்பதால் முதலாவது தெரிவுப் பாடத்தை முழுமையாகப் போதிக்க வல்ல ஆசிரியர்களை நியமிப்பதிலும் பாடசாலை நிர்வாகங்கள் சவால்களை எதிர் கொள்கின்றன.

தொழில்நுட்பப் பாட விதானம் செயன்முறைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டிய தேவைப்பாட்டைக் கொண்டது. இப் பாட நெறி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாயினும் இதற்குரிய ஆய்வு கூட வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. வேலைத் தளங்களுக்குச் சென்று கற்கையை மேற்கொள்ளலாம் எனக் கூறப்பட்டாலும் இதன் நடைமுறைச் சாத்தியமும் கேள்விக்குரியதே.

தற்போது தேர்தல் தொகுதி ஒன்றுக்கு குறைந்தது ஒன்று என்ற

அடிப்படையில் நாடு முழுவதிலும் 250 பாடசாலைகளில் இக் கற்கை நெறி அமுற்படுத்தப்பட்டுள்ளது. அப் பாடசாலைகள் 1 AB Super என்ற வகுதிப் பெயரைப் பெறுகின்றன. இது அனைவருக்கும் கல்வி, மற்றும் கல்வியில் சம வாய்ப்பு என்ற சிந்தனைகளை கேள்விக்குள்ளாக்குகின்றது. பெரும்பாலும் அதிக மாணவர்களைக் கொண்டுள்ள பிரபலமான பாடசாலைகளிலேயே இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் மிகப் பிரபலமான பாடசாலைகள் மேலும் தமக்கான கேள்வியை அதிகரிக்கும் அதே நேரம் இடவாய்ப்பு பற்றாக்குறைகளையும் எதிர் கொள்ள நேரிடலாம்.

கோடிக்கணக்கான பணமுதலீட்டில் இக்கற்கை நெறி இடம்பெறும் பாடசாலைகளில் தொழினுட்ப ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. இவ்வாறு ஆய்வுகூட வசதிகளை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டிருக்காத தனியார் பாடசாலைகளில் இக்கற்கையைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எது எவ்வாறெனினும் தற்போது இக்கற்கை நெறிக்கான தனியார் வகுப்பு (ரியுசன்) முறைமை எவ்வித ஆய்வுகூட வசதிகளும் இன்றி பிரபலமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தனியார் கல்வி நிறுவனக் கற்பித்தல் பரீட்சை சார்ந்த கல்வி முறையையே விதைக்கப்போகின்றது.

மூன்றாவது தெரிவுப் பாடத்திற்கு 10 பாடங்களுள் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது. இதனால் அந்தப் பாடங்களை எடுப்பவர்களுக்குரிய நேர சூசிகையை ஒரே நேரத்தில் இட வேண்டிய தேவை ஏற்படும். ஆசிரிய ஆளணி மட்டுப்பாடாக உள்ள நிலையில் ஒரே நேரத்தில் 10 பாடங்களை போதிப்பதற்குரிய ஆளணி , இட வசதி, என்பவற்றைத் தேடிக் கொள்வதில் சவால்கள் எதிர் கொள்ளப்படுகின்றன.

மூன்றாவது பாடத்திற்குரிய வகுதிக்குள் முதல் மொழி ( சிங்களம் அல்லது தமிழ் ) உள்வாங்கப்படவில்லை. இலங்கையின் இனத்துவ அடையாளமாக விளங்குபவற்றுள் பிரதானமானது மொழியாகும். தொழில்நுட்ப திறன்கள் ஊடாக மொழியை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்ல முடியும். வணிக மொழி என்ற அந்தஸ்தைப் பெறக் கூடிய தகுதிப்பாடுடைய மொழிகளே இனிமேல் வாழும் தகைமை பெற்ற மொழிகளாக விளங்கும். முதல் மொழியை இத் துறைக்குள் உள்வாங்கியிருந்தால் மொழி சார்ந்த அனுகூலங்களைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் கிடைப்பது இலகுவாகும்.

நாடு முழவதும் 25 பல்கலைக்கழகக் கல்லூரிகளை 2 வருடங்களுக்குள்

அமைக்க முடியும் என அரசு எதிர்பார்க்கின்றது. 2015ம் ஆண்டில் பாடசாலைகளில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் இதன் கட்டுமான வேலைகள் ஆமை வேகத்திலேயே நகர்வதாகத் தெரிகின்றது.

முடிவுரை

விவசாயம், கைத்தொழில் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் ஊடாக அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதைக் காட்டிலும் தொழில்நுட்பம் சார்ந்த அறிவாளிகளை உருவாக்குவதன் மூலம் - அறிவு மூலதனத்தைப் பெருக்குவதன் மூலம் அந்நியச் செலாவணியை பெருமளவில் ஈட்டிக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது. ஆசியாவின் ஆச்சரியம் என்ற கனவு மெய்ப்பட க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பக் கற்கை நெறி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என நம்பலாம்.

உதவியன


- கல்வி அமைச்சுச் சுற்றுநிருபங்கள் 25 / 2013
- தொழினுட்பவியல் பாடவிதானக் கையேடு – 2013
- கல்விசார் ஒருங்கிணைவு 2012 – கையேடுகள்
- உயர்தர வகுப்புக்களுக்கான தொழினுட்வியற்கற்கைத்துறை, தேசிய கல்வி நிறுவகம் வெளியிட்ட பாடத்திட்டம் - 2013



S.Amirthalingam
President
Jaffna N.C.O.E



மாணவர்கள் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கு பற்றிய போது



70வது ஆண்டு நிறைவு விழாவை
முன்னிட்டு நிதி சேகரிப்புக்கான
அதிஷ்ட லாபச் சீட்டெழுப்பில்
முதல் பரிசு வழங்கிய போது

# நெருக்கீடுகளும், அவற்றைக் கையாளும் முறைகளும்

விஞ்ஞானம் முன்னேற முன்னேற மனிதனும் பல நெருக்கீடுகளுக்கு ஆளாகின்றான். நாம் இப்பொழுது நெருக்கீடுகள் நிறைந்த உலகத்தில் வாழ்கின்றோம். நெருக்கீடுகள் அற்ற வாழ்வு எமக்கு இந்த உலகத்தில் கிடையாது. வாழ்வில் நாம் நெருக்கீடுகளைத் தவிர்க்க முடியாது.

## நாமும், நெருக்கீடுகளும்

நெருக்கீடுகளுக்குப் பல காரணங்கள் உண்டு. வாழ்வில் வரும் பல பயங்கர நிகழ்வுகள், வேலைப்பழு, நமக்கு நெருக்கமாக இருக்கின்றவரின் இழப்பு அல்லது சாவு, நாம் செய்யும் தொழில், நேரம் போதாமை,"இறைவனே நீ ஏன் இப்படிச் செய்கின்றாய்" என்ற ஆன்மீக வாழ்வு, காணாமல் போன பொருளைத் தேடுதல், பரீட்சைக்கு முகம் கொடுத்தல், ஏதாவது ஒன்றை எதிர்பார்த்திருத்தல் என்ற பல கோணங்களிலிருந்து நெருக்கீடுகள் வருகின்றன. எனவே நெருக்கீட்டுக்கு நாம் வரைவிலக்கணம் கொடுப்பது மிகவும் கஷ்டமானது. இருப்பினும் ஒரு சூழலிலிருந்தோ நிகழ்வுகளிலிருந்தோ எழுகின்ற தூண்டிகளால் ஒரு தனியாருடைய வெற்றிகரமாக முகாமைப்படுத்தும் திறன் பாதிப்புக்குள்ளாகும் நிலையையே நாம் நெருக்கீடு என்று அழைக்கின்றோம்.

ஹான்ஸ் சேல்ஸினுடைய (Hans Salye) ஆராய்ச்சியின் படி ஒருவருக்கு நெருக்கீடு 5 வழிகளில் வருகின்றது. அதில் முதலாவதாக நாம் உயிரியல் காரணிகளைப் பார்ப்போம். ஒருவருக்கு நெருக்கீடு வரும் போது அவரது உடலுக்கு என்ன நடக்கின்றது. நெருக்கீடுகளால் ஒருவர் பாதிப்புறும் போது உயிரியல் ரீதியில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றது.

## 1) பொது இசைவாக்க நோய்க்குறி

"பொது இசைவாக்க நோய்க்குறி" என்றால் ஒருவரின் உடல் தேய்மானம் அடைகின்றது. சூழலிருந்து பல வகைகளில் தூண்டல் ஏற்படும் போது உடலையும் இத்தூண்டல்கள் தாக்குகின்றது. உதாரணமாக உறவினர் ஒருவரின் சாவு, பணம் இழப்பு, குடும்பத்தின் ஒருவர் காணாமல் போதல் என்பவைகளால் பசியின்மை, உடல் நோவு, உற்சாகமின்மை என்று பல உடல் வருத்தங்கள் வருகின்றன. இந்த நோய் அறிகுறி 3 படி நிலைகளைக்கொண்டுள்ளது.

a. இடர் உணர்த்தி விழிப்பூட்டுதல்
b. உடல் தயாராகுதல்
c. களைப்படைதல் என்பன.

## a. இடர் உணர்த்தி விழிப்பூட்டுதல்

இங்கு உடல் அதிர்ச்சியடைந்து நோய் எதிர்புச் சக்தி குறைவடைகின்றது. இந் நிலையை எதிர்க்க உடனே உடல் ஹோமோனைச் சுரக்கின்றது. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி பாதிப்படைகின்றது. இந்த நேரத்தில் தான் ஒருவர் தொற்று நோய்க்கு உள்ளாகின்றார். அதிஸ்டவசமாக இந்த விழிப்பூட்டும் நிலை குறுகியதாக இருப்பதால் எமது உடல் எதிர்க்கக்கூடிய சக்தியை உடனே பெறுகின்றது.

**b.** "உடல் தயாராகுதல்"

இங்கு ஒருவரின் உடல் பல ஹோமோன்களைச் சுரப்பதனால் நோயுறுதலில் இருந்து அவர் காப்பாற்றப்படுகின்றார். இருப்பினும் நெருக்கீடுகளை ஒருவர் சமாளிப்பதில் தோல்வியுற்றால் அவர் களைப்பு நிலைக்குத் தள்ளப்படுவார்.

**C.** களைப்படைதல்

இங்கு உடல் தேய்மானமடைந்து நோயைக் கூட்டுகின்றது. எல்லா நெருக்கீடுகளும் கூடாதது அல்ல. ஓட்டப்பந்தயம், பரீட்சையெழுதுதல், காதலிக்கும் ஒருவரை பின் தொடர்தல் என்பன போன்றவை ஒரு இலக்கை நோக்கிய பயணமாகின்றது. இவைகள் வாழ்வை நிறைவாக்கும் அனுபவங்களாகின்றன. இவை இப்படியாக இருப்பினும் குடும்பம் அல்லது நண்பருடன் நேர்மறையான நட்புக் காரணமாக எமது நடத்தைகளைப் பொருத்தப்பாடாக மாற்றினால் நாம் நெருக்கீடுகளை நன்றாக முகாமைத்துவம் செய்யலாம்.

**2)** ஆளுமைக்காரணிகள்

போட்டி மனப்பாங்குடையவர், ஒரு இலக்கையடைய தீவிரம் காட்டுபவர். பொறுமையற்றவர், பகையுடன் வாழ்பவர், வணங்கா கழுத்துடையவர் என்போர் இருதய நோயைக் கொண்டிருப்பர். அதாவது இவர்களை A வகை எனவும் இவற்றுக்கு எதிரான குணமுடையவர் B வகை எனவும் அழைப்பர். அதாவது இலகுவாக நடக்கக் கூடியவர், பொறுமையுடையவர், எளிதில் கோபப்பட மாட்டார். மிகவும் தளர்வு நிலையுடனிருப்பவர் இவர்கள் வாழ்வில் முறுகல் நிலையை இலகுவாக்கித் தளர்வடையச் செய்வார்.

இன்னும் சிலர் மற்றவர்களைத் தங்களது கோபத்தால் அன்னியப்படுத்தாமல் தமது வேலைகளை மிகவும் அர்பணிப்புடனும், சுயகட்டுப்பாட்டுடனும் செய்வர். இவர்கள் நிகழ்வுகளைப் பயம் ஏற்படுத்தும் ஒன்றாகப் பார்க்காமல் சவால்களாக பார்த்து அவற்றை வெற்றி கொள்வர். இவர்கள் உடல் பயிற்சி செய்து சமூக ஆதரவுடன் நடப்பதால் நெருக்கீடுகளை வெற்றி கொள்வர்.

**3)** அறிகைக்காரணிகள்

ஒரு நிகழ்வை அது அபாயகரமானதா, பயன்கரமானதா அல்லது சவாலானதா எனத் தீர்ப்பிட்டு அதற்கு முகம் கொடுக்க எனக்கு வளமிருக்கின்றதா,சமாளிக்கலாமா என்று அறிகையினுடாக சீர்தூக்கிப்பார்த்தல். இது ஒரு முதல் நிலை சீர் தூக்கிப்பார்த்தலாகும் என லாசறாஸ் (1993) கூறுகின்றார். இங்கு ஒருவர் அந்த நிகழ்வு வருங்காலத்திற்குப் பாதகமானதா அல்லது வெற்றி கொள்ளக்கூடிய சவாலா என விளங்கி நோக்குகின்றார். உதாரணமாக A/L முன்னோடிப் பரீட்சையில் இரு மாணவர்கள் தோல்வியடைகின்றனர். அதில் ஒருவர் எல்லாம் முடிந்துவிட்டது இந்த முடிவுதான் எனக்கு A/L இல் குகிடைக்கப்போகின்றது என பயப்படுகின்றார். மற்ற மாணவர் தனது தோல்வியை சாதகமான சவாலாக எடுத்து வெற்றிகொண்டு மேலும் நன்றாகப்படிக்கின்றார்.

2ம் நிலை சீர்தூக்கிப்பார்த்தல் என்பது ஒருவர் குறிப்பிட்ட நிகழ்வை வெற்றி கொள்ளக்கூடிய வளத்தை தான் வைத்திருக்கின்றாரா என சீர்தூக்கி பார்த்து கணிக்க வேண்டும். முதல் மாணவன் மிகுந்த பயமுடையவராக இருப்பதனால் தனது வளத்தைப் பாவிக்க முடியவில்லை. இரண்டாவது மாணவன் தனது வளத்தை சரியாக பிரயோகித்து எஞ்சியிருக்கும் நாட்களில் தன்னை நன்றாக தயாரித்து பரீட்சையை எழுதுவதற்கான சவாலை ஏற்றுக்கொள்கின்றான். ஆகையால் நெருக்கீட்டை சவாலாக எடுத்தால் அவைகளை வெற்றிகொள்ள முடியும்.

## 4) சூழல் காரணிகள்

சிலருக்கு வாழ்வில் பெரிதும் சிறிதுமாக பல நெருக்கீடுகள் வரலாம். போர், வாகன விபத்து, உடமைகள் தீயினால் எரிந்து நாசம், அன்பானவரை இழத்தல் என்ற பல நிகழ்வுகளால் நெருக்கீடுகள் வரலாம்.சிலர் அன்றாட வேலைப்பழுவால், மனமுடைதலால், சிதைந்த உறவால், ஏழ்மையால் நெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றனர். எந்தச்சூழல் கூடிய அல்லது குறைந்த நெருக்கீடுகளைத்தருகின்றது என்பதை அவதானிப்போம்.

### வேலைப்பளு, முரண்பாடு, மனமுடைவு

இவைகளால் தீவிரமாக ஒருவர் தூண்டப்படுவதால் ஒருவரால் அதற்கேற்ற மாதிரி தன்னை முகாமைத்துவம் செய்ய முடியாமல் போகலாம். எமது இசைவாக்கும் தன்மையை (Adaptability) வேலைப்பழு இல்லாமல் செய்கின்றது. இதனால் ஒருவர் நம்பிக்கையிழந்து இயலாத நிலைக்கு வருகின்றார். இதனால் களைப்பு, சக்தியிழந்த நிலை ஒருவருக்குத் தோன்றுகின்றது. இந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக இயலாத கட்டத்திற்கும் கொண்டுசெல்கின்றது. இந்த நிலையில் ஒருவர் தன்னுள் முரண்படுகின்றார். உ+ம் தவிர்க்க முடியாத இரு தெரிவுகளில் ஒன்றைத் தெரிவது. அல்லது தாமதம் ஏற்படும்போது நெருக்கீடு வருகின்றது. மனமுடைவு என்பது ஒரு இலக்கைப் பெறமுடியாது இருக்கும்போது ஏற்படுகின்றது. அன்றாடப் பிரச்சினைகளும், வாழ்க்கை நிகழ்வுகளும் எமக்கு நெருக்கீடுகளைத் தருகின்றது. கற்க போதுமான நேரமின்மை, நண்பர்கள், காதலர்களோடு முரண்படுதல், வேலை செய்யும்போது மேற்பார்வையாளருடன் முரண்படுதல், சிறு நோய்கள், காயங்கள் ஏற்படுதல், குடும்பத்துடன் முரண்படுதல், பணமின்மை, பரீட்சை என்பவைகளும் நெருக்கீட்டை கொண்டுவரும்.

## 5) சமூக கலாசார காரணிகள்

நாடுவிட்டு நாடு போதல், இடப்பெயர்வுகள் என்பன புதிய சமூகம், புதிய கலாசாரப் பின்னணிகள் வருவதன் மூலம் நெருக்கீடுகளை எதிர் கொள்கின்றனர். ஏழ்மை நிலையும் நெருக்கீகளுக்கு சாதகமாக அமைகின்றது. இதனால் வன்முறைகள் அதிகரிக்கின்றன. வாழ்வை எதிர் கொள்ளும்போது வரும் செலவுகளை ஈடுசெய்ய முடியாது தவிக்கின்றனர்.

### நெருக்கீடுகளின் விளைவுகள்

நெருக்கீடுகள் எமது உடல், உள, நடத்தைகளைப் பாதிக்கின்றது.

### உடல் பாதிப்பு

தலையிடி, களைப்பு, சோர்வு, உயர் இரத்தமுத்தம், நித்திரையின்மை, உடல்நோவு,அடிக்கடி நோயுறல், அஜீரணம்.

### உளப் பாதிப்பு

துக்கம், வெடுவெடுப்பு, கோபம், மனச்சோர்வு, பதட்டம், மனச்சோர்வு, மறதி, பாதுகாப்புக் கவசங்களைப் பிரயோகித்தல், நினைவுகளை ஒருங்கமைக்க இயலாமை, பயங்கர நிகழ்வு பற்றிய நினைவுகள் திரும்பத்திரும்ப வருதல், திடுக்கிடுதல்.

### உணர்வுகள்

பயங்கர நிகழ்வுகள், தற்போது நடக்குமாப்போல் உணருதல், பாதுகாப்பற்ற நிலை, நிர்க்கதி நிலை, நம்பிக்கையற்ற நிலை, ஆபத்தை உடன் எதிர்பார்த் திருக்கும் நிலை, கூடிய உணர்வு காட்டல், கற்கும் திறனில் மந்தநிலை, இலகுவில் கோபப்படல், குற்ற உணர்வு.

## நடத்தையில் பாதிப்பு

சாப்பாட்டில் அதிக நாட்டமின்மை, உடல்சோர்வு, தனிமையை விரும்புதல், சுவை இழத்தல், பொறுப்பேற்பதைத் தவிர்த்தல், பொறுமையின்மை, ஒரு வேலையைச் சரிவரச் செய்ய இயலாமை, பிற்போடுதல்,கோபமடைதல், வெறுப்படைதல்.

நெருக்கீடுகளால் நீங்கள் உடைந்து போகாமல் நீங்கள் அமைதியாகி சமாளிக்கும் வழிகள் உண்டு. உங்கள் உள்ளம் கலக்கமடையா வண்ணம் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

## இறைவனில் அமைதியடைதல்

நாம் தனியாக அல்ல, நாம் எதிர்நோக்கும் அனைத்திலும் இறைவன் எம்முடன் இருக்கின்றார் என்ற உணர்வுடன் இருத்தல். இறைபிரசன்னத்தில் செபம், தியானம், ஆன்மீகப்புத்தகங்கள் வாசித்தல், என்பனவற்றில் அமைதியாக ஈடுபடும்போது எம்மைத் தளர்வு நிலைக்குக் கொண்டுவர இவை உதவுகின்றன. இறை அமைதியை எம்முள்ளே கொண்டுவருவதன்மூலம் நெருக்கீட்டு நிலையை நாம் வெற்றிகொள்ளலாம். இறையடியார்கள் எப்பொழுதும் இறைவனுடன் தனித்திருந்து உரையாடுவர். இறைவனுக்கு எம் வாழ்வில் வரும் அழுத்தங்கள் பிரச்சினைகள் யாவும் தெரியும். இவ்வேளையில் இறைவன் தன்னிடம் வர நம்மை அழைக்கின்றார். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள் நான் உங்களை இளைப்பாற்றுவேன்" என்கின்றார் இறைவன்.

நாம் அன்றாட வேலைகளில் மூழ்கிப்போகின்றோம். செபிப்பதற்கு நேரம் ஒதுக்கவில்லை என்றால் நாம் நம்முள் அவரின் குரலைக் கேட்க முடியாது. இறைவனுடன் இருப்பதால் நாம் திடம் அடைகின்றோம். எம்மையும் எமது வாழ்வையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். "என்னாலாகாவிட்டாலும் அவரால் முடியும்" என்ற மனப்பக்குவத்தை எம்மில் ஏற்படுத்த வேண்டும்.

தற்போது நடந்து முடிந்த இயற்கை, செயற்கை அனர்த்தங்களானது எமது வாழ்வில் பலவிதமான நெருக்கீடுகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு நாம் யாருமே பொறுப்பானவர்கள் அல்ல. இதன் விந்தையை எம்மால் உணரவும் முடியாது. ஏன் இவ்வாறு நடக்க வேண்டும் என்று விடை தேடி கண்டுபிடிக்கவும் இயலாது.

"இன்று இப்போது மகிழ்வாக இருங்கள். இன்று நாளை என்று உங்கள் அமைதியையும் மகிழ்வையும் தள்ளி போடாதீங்கள்".

எமது மனதில் உள்ள காயங்களை, வேதனைகளை, துன்பங்களை மனம் திறந்து பிறருடன் உரையாடுவதன்மூலம் நெருக்கீட்டை குறைக்கலாம்.

## ஓய்வு எடுங்கள்

உலாத்துங்கள், வானத்தின் அழகைப் பாருங்கள்,புத்தகம் வாசியுங்கள், இயற்கைக் காட்சிகளை இரசியுங்கள் இவைகள் உங்களின் மனதுக்கு இதமான உணர்வைக் கொடுத்து உங்களது எண்ணங்களை மாற்றலாம். அல்லது முன்னேற்றலாம்.

நெருக்கீட்டைக் கையாளும் முறை பற்றிய கருத்தரங்கில் "சாலைட்" என்ற உணர்வியலாளர் கருத்தரங்கில் பங்கு கொண்டவர்களுக்கு ஒரு அப்பியாசம் கொடுத்தார். கடந்த மூன்று நாட்களில் நடந்த செயற்பாடுகளில் அதி முக்கியம், முக்கியம், முக்கியமற்றவை என்று பிரிக்கச் சொன்னார். "நாம் முக்கியமற்றவைகள் என எவைகளைக் கருதுகின்றோமோ அவைகள் தான் எமது நெருக்கீடுகளைக் குறைத்து எம்மை உயிரூட்டுபவைகளாக இருக்கின்றன" என்றார்.

இசை கேட்டல், நல்லதொரு குளியல், படம் பார்த்தல், நண்பருடன் நேரத்தைச் செலவிடுதல் ஆகியன எம்மை எமது வாழ்க்கையில் வரும் நெருக்கீடுகளைத் தவிர்க்க உதவுகின்றன.

உங்களைப் பற்றிப் பொருத்தப்பாடான நேரான கருத்தைக் கொண்டிருங்கள். நாம் ஒவ்வொருவரும் தனித்துவமாக, நன்றாக, ஒரு விசேட நோக்குடன் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை உணருங்கள்.

ஒருவர் தன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் தாழ்வுணர்வு ஒரு நெருக்கீடான சூழலைக் கையாள அவருக்கு மிகவும் கடினமானதாக இருக்கும்.

நீங்கள் கோபமாக உள்ளவரை மன்னியுங்கள், இதனால் நீங்கள் மனதில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் கோபத்தினால், துன்பத்தினால் ஏற்படும் நெருக்கீட்டைக்

குறைக்க முடியும். அல்லது மன்னித்தல் என்ற வடிகாலின் மூலம் நெருக்கீட்டை போக்க முடியும்.

இறைவன் எம்மை எவ்வளவோ மன்னிக்கின்றார். நாமும் ஏழு முறையல்ல எழுபது முறை மன்னிப்போம்.

## உரையாடிப் பகிர்வோம்

ஒரு நண்பரோடு நெருக்கீடுகள் வரும் காரணங்கள் பற்றி உரையாடி ஆராயலாம் அல்லது உளவளத்துணையும் பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் ஒருவரின் சுமைகளைக் குறைக்கலாம்.

## உடற்பயிற்சி

உலாத்துதல் ஒருவரை நெருக்கீட்டு நிலையிலிருந்து விடுபடச் செய்கின்றது. அதேபோல் ஓடுதல், விளையாடுதல் என்ற உடற்பயிற்சிகளும் நெருக்கீடுகளைக் குறைக்க உதவுகின்றன. சில உணவுவகைகள் உதாரணம் கோப்பி, மது, போதைப் பொருட்கள் நெருக்கீடுகளைக் கூட்டவல்லது. நல்ல உணவுவகைகளை மட்டோடு சாப்பிடுங்கள். போதிய நித்திரை நெருக்கீடுகளைப் போக்கவல்லது. உறக்கமின்மை நெருக்கீட்டு நிலையைக் கூட்டும்.

## கவலையை விடுங்கள்

எமது கற்பனாசக்தி சில வேளைகளில் ''எமக்கு அது வந்துவிடுமோ, இது வந்துவிடுமோ'' என்ற கவலையை அதிகரிக்கச் செய்கின்றது. கற்பனை பண்ணுதலை விடுத்து உண்மை நிலையைக் காண வேண்டும். அன்றாட வாழ்வில் பலவிதமான மாற்றங்கள் வந்துபோகின்றன. இம்மாற்றங்கள் பயத்தையும் நெருக்கீடுகளையும் கொண்டுவருகின்றன. இவைகளை ஏற்று வாழ திடத்தையும் அமைதியையும் ஞானத்தையும் இறைவனிடம் கேட்போம். போதும் என்ற மனத்துடன் வாழ்வோம்.

## சாந்த வழிமுறைகள்

நெருக்கீடுகளைச் சாந்த வழிமுறைகளால் கட்டுப்படுத்தலாம். இதைச் செய்வதற்கு மூன்று நிபந்தனைகள் தேவை.

1. அமைதியான சூழல்
2. உணவிற்கு முன் செய்தல்
3. தளர்வான ஆடை அணிதல்

சாந்த வழிமுறைகளைச் செய்ய 5 வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.


1. மகிழ்வான எண்ணங்களை மனதிற்குள் கொண்டுவருதல்
2. பிராணாயாமம் செய்தல்
3. தலையணையற்ற விரிப்பில் மல்லாந்து படுத்திருந்து உச்சி தொடக்கம் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அங்கமாகத் தளர்வு நிலைக்குக் கொண்டுவருதல் உ-ம்:- இப்போது எனது பாதங்களை தளர்த்துகின்றேன். சாந்தி......சாந்தி..... சாந்தி எனச் சொல்லித் தளர்த்துதல்.
4. விரும்பி ஒரு சொல்லை திரும்பத்திரும் உச்சரித்தல். ஊ-ம்:- ஓம் சாந்தி, இயேசு, அல்லா
5. ஆழ்நிலைத் தியானம்

## நெருக்கீட்டை நிறுத்து!

நீங்கள் சிதைவுறாவண்ணம் இந்த மூன்று படிமுறைகளைக் கையாளுங்கள்
ஆழமான மூச்சை உள்வாங்கி பத்து எண்ணி மெதுவாக வெளிவிடுங்கள் அல்லது சிறிய நாம செபத்தை மெதுவாகச் சொல்லுங்கள்.

உங்களைப் பின்நோக்கிப் பார்த்து நெருக்கீட்டின் காரணம் எது என்பதை இனங்காணுங்கள் உலாத்துக்குப் போங்கள், பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள், நெருக்கீடான சூழலைத் தவிருங்கள். மகிழ்வுடன் வாழ்வோம்.



அருட்பணி S.J.இராசநாயகம்<br>
இயக்குநர்,<br>
குடும்பவளத்துணை நிலையம்,<br>
சென் பற்றிக்ஸ் வீதி,<br>
யாழ்ப்பாணம்.



நிலையத்துக்கான வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்ட போது
www.gnanaveera.com



நவராத்திரி விழாவின் போது





# கணினி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போது

# பிள்ளைகள் விளங்கிக் கொள்ளல்

சம்பவம்:- 01

ஆனந்தி தரம் 6ல் கற்கும் மாணவி. மிக அண்மைக்காலமாக காலையில் எழுந்ததும், வயிற்றுக்குத்து எனக்கூறி வயிற்றைப்பிடித்தபடி துடிதுடித்து அழத் தொடங்கி விடுவாள். ஆனந்தியின் தாயார் பல தடவைகள் இடம் மாறி இடம் மாறி வைத்தியர்களிடம் காட்டி மருந்து எடுத்திருந்தும் ஆனந்தியின் வயிற்றுக் குத்து முழுதுவமாக சுகமாகிய பாடில்லை. ஒரு சில நாள் சுகமாகியது போல் இருக்கும். ஆனந்தி, பின்னர் பழையபடி வயிற்றைப் பிடித்தவாறு துடிதுடித்து அழுதபடிநிற்பாள். இதனால் அவள் பாடசாலைக்குச் செல்வது ஒழுங்கற்றதாகிவிட, அவளது கற்றலிலும் அது பின்னடைவை ஏற்படுத்தி விட்டது.

சம்பவம்:- 02

நிரூபன் தரம் 7 மாணவன். தரம் 5 வரை தனது கிராமத்திலுள்ள ஆரம்பபிரிவு பாடசாலையில் கல்வி கற்ற நிரூபன் தரம் 6ல் மத்தியகல்லூரி ஒன்றில் இணைந்து கொள்கிறான். மிக அண்மைக்காலமாக பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அடிக்கடி எழுந்து சலம் கழிக்கப் போக பாட ஆசிரியையிடம் அனுமதி கேட்டு நிற்பான். ஆரம்பத்தில் இவன் எழுந்து நின்று கேடட் போது தமது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைக் குழப்புவதாக கருதி பாட ஆசிரியர் அனுமதி வழங்காது விட, நிரூபன் வகுப்பறையிலேயே சலம் கழித்து விட்டான். இதன் பின் அவன் வகுப்பில் எழுந்து அனுமதி கேட்டதும் பாடஆசிரியர்கள் இது பற்றி, அதிபரிடம் முறையிட அதிபர் பெற்றோரை அழைத்து நிரூபனது சுகவீனத்தை சுகமாக்கிய பின்னர் பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் படி கூறி பாடசாலை வருகைக்கு தடை போட்டு விட்டார்.

நிரூபன் வீட்டில் நிற்கும் நாட்களில் அடிக்கடி சலம் கழிப்பதில்லை என்பதை அறிந்து கொண்ட வைத்தியர் பெரிய பிரச்சினை எதுவுமில்லை எனக்கூறி, ஒருசில குளிசைகளை மட்டும் வழங்கி நிரூபனை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் படி கூறினார். எனினும் கடந்த மூன்ற மாதங்களாக நிரூபன் பாடசாலைக்குப் போக மறுத்து, வீட்டில் நிற்கின்றான். தனது வருத்தம் மாறவில்லை எனவும் பாடசாலை சென்றால் அடிக்கடி சலம் விட வேண்டி வரும் எனவும் கூறினாலும், தான் பழைய பாடசாலையிலேயே படிக்க விரும்புவதாகவும், ஒரு தடவை தயாரிடம் கூறியுள்ளான்.

சம்பவம்:- 03

தேனுஜன் தரம் 5 மாணவன். எதிர்வரும் ஆகஸ்டில் புலமைப்பரிசில் பரீட்சையை எதிர் நோக்கியபடி படிப்பில் கெட்டிக்காரனாக வலம் வரும் தேனுஜன் கடந்த மூன்று வாரங்களாக "நெஞ்சுக்குள் ஏதோ செய்யுது ...." "நெஞ்சக்குள்ள ஏதோ அடைக்குது..." நெஞ்சுக்குள்ள ஏதோ குத்துற மாதிரி கிடக்கு...." எனக் கூறியபடி சாப்பிடவும் மறுத்து அழுகிறான். அந்த வேளையில் தேனுஜனுக்கு நன்றாக வியர்க்கும். உடம்பில் மெல்லிய நடுக்கமும் இருக்கும். இதனால் பயந்து போன தேனுஜனின் பெற்றோர் இரண்டு மூன்று தடவைகள் வேறு வேறு மருத்துவர்களிடம் காட்டி மருந்து எடுத்திருந்தபோதிலும் தேனுஜன் முழுமையாக குணமாகிய பாடில்லை. நேற்று தேனுஜனின் பாட்டி தேனுஜனை பூசாரி ஒருவரிடம் அழைத்துச் சென்று நூல் கட்டி அழைத்து வந்திருந்தார். இருந்தும் இன்று காலையிலேயே தேனுஜன் நெஞ்சுக்குத்தால் துடிதுடித்து அழத் தொடங்கி விட்டான்.

இன்று எமது இல்லங்களில் பிள்ளைகளிடையே பரவலாக காணப்படக்கூடிய பிரச்சினைகளில் உதாரணத்தக்கு எடுத்துக் காட்டியவையே இவைகளாகும்.

இவ்வாறான பிரச்சினைக்கு உள்ளாகும் பிள்ளைகளில் பலரது பாடசாலை வருகை ஒழுங்கற்றதாக அமைய, அவர்களது கற்றல் தேர்ச்சிகள் உட்பட, உடல், உள ஆரோக்கியமும் பாதிக்கப்படுவதாகவே அமைந்த விடும். இவ்வாறான பிரதிபலிப்புக்கள் (Manifesration) பெரும்பாலும் அவர்கள் அனுபவித்த நெருக்கீட்டின் விளைவானதாகக் கூட இருக்கலாம். எனவே இவ்வகை ப்பிரதிபலிப்புக்களை முன்வைக்கும் பிள்ளைகளை எவ்வாற விளங்கிக் கொள்வது? அவர்களை எவ்வாறு கையாள்வது? என்பது பற்றி விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு பதிய சூழல், அல்லது புதிய சம்பவம் அல்லது புதுப்பிரச்சினை ஒன்றினை எதிர்கொள்ளும் போது ஒருவரது உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் எதிர்வினைகளே நெருக்கீடாக உணரப்படுகின்றது. பொதுவாக நாம் அனைவருமே அன்றாடம் அனுபவிக்கும் ஒன்றுதான் இது. ஆயினும் சில வேளைகளில் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் பிள்ளைகளது உளநலத்தில் மோசான பாதிப்பினை ஏற்படுத்தி விடுவதாக அமைந்து விடுவதும் உண்டு. பயங்கரமானதும் வேதனைக்குரியதுமான அனுபவங்களால் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு வரும் நெருக்கீடுகள் பின்னர் அவர்களது உடல் உள ஆராக்கியத்திலும், அவர்களது நடத்தைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தவதாக இருக்கும்.

இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவெனில் சிறிய பிள்ளைகள் பாதிக்கப்படுவது அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளால் அல்ல. மாறாக அச்சம்பவத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளும் முறையில் தான் சிறுவர்களது நெருக்கீட்டின் அளவு தங்கியுள்ளது. இந்த உணர்ந்து கொள்ளல் என்பதும் பல வேளைகளில் பெற்றோரிடமிருந்து அல்லது ஏனைய வளர்ந்தோரிடம் இருந்து கற்றுக் கொள்ளப்படுகின்றது.

ஒரு சம்பவத்தை பெற்றோர் அல்லது வளர்ந்தவர்கள் அனுபவிக்கம் போது, எவ்வகையான உணர்ச்சிகளை வெளிக் காட்டுவார்களே அதனையே பிள்ளையும் பெரும்பாலும் வெளிக்காட்டக் கற்றுக் கொள்கிறது. அடிக்கடி கோபப்படும் அல்லது பயப்படும், பதற்றப்படும் பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளும் அவ் உணர்வுகளை அந்த வகையிலேயே கற்றுக் கொள்கிறார்கள். இதுவே உண்மையாகும்.

இன்று எங்களது பிரதேசம் போர் அழிவின் பின்னரான சமூக, பொருளாதார, கலாசார ரீதியிலான பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருவதனைக் காண முடிகிறது. இவ்வாறான சூழல் பிள்ளைகளை அடிக்கடி நெருக்கீடான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக்கி விடுகிறது. எல்லை மீறிய கோபம், கவலை, பயங்கரம், ஏமாற்றம் போன்றவாறன உணர்ச்சிகளை தூண்டி விடும் சம்பவங்களுக்கு முகம் கொடுக்கும் போது, பிள்ளைகள் நெருக்கீட்டால் ஏற்படும் விளைவுகளை வெளிக்காட்டுவது இயல்பு.

நெருக்கீட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் பிள்ளைகளது உடல், உளம் நடத்தைகள் உட்பட அவர்களது கற்றலிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக இருக்கும். ஏனவே பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களும் பிள்ளைகளது நடத்தைகளிலும் கற்றல் செயற்பாட்டிலும் (பாடசாலை வரவு உட்பட) மாற்றங்களை அடையாளம் காணும் போது,

அவற்றுக்கு காரணமான பிரச்சினையினை அநறிந்து கொண்டு அதிலிருந்து பிள்ளை வெளிவருவதற்கும் உதவும் திறனைப் பெற்றி ருப்பது அவசியம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக பிள்ளைகள் நெருக்கீ டுகளை எதிர்கொள்ளும் சூழ்நிலைகளிலும், தமது மனதில் ஏற்படும் போராட்டங்களின் போதும் தமது புரிதலுக்கு ஏற்ப எதிர்விளை வுகளைக் காட்டுகின்றார்கள். உதாரணமாக கீழ்ப்படியாமை, படுக்கையை நனைத்தல், பொய் சொல்லுதல், களவெடுத்தல், பாடசா லைக்குச் செல்ல மறுத்தல், ஒதுங்குதல், தனிமையை நாடல், மூர்க்கத்தனத்தை வெளிப்படுத்தல், விரல் சூப்புதல், நகம் கடித்தல், மலம் கழிப்பதில் கட்டுப்பாடின்மை, உணவில் நாட்மின்மை, அடம்பிடித்தல், சிறிய சத்தங் களுக்கும் திடுக்கிடுதல், பயங்கரக் கனவு கண்டு விழித்தல், பற்றிப்பிடித்தல் போன்ற நடத்தைகளை எதிர்விளைவாக வெளிக் காட்டக்கூடும். இவ் எதிர் விளைவுகளின் தொடர் பாதிப்பாக கற்றல் இடர்பாடு உருவாகக் கூடும். இவ்வாறு உருவாகும் கற்றல் இடர்பாடு, மீண்டும் ஒரு புதிய நெருக்கீட்டை - பிரச்சனை யை தோற்றுவித்து விடுவதாக இருக்கும்.

பிள்ளைகள் எதிர்கொள்ளும் நெருக் கீட்டின் தாக்கம் அதிகரிக்க, அதிகரிக்க அவர்களிடமிருந்த உடல் நோய் தொடர்பான பல்வேறு வெளிப்பாடுகள் வெளிப்படுத்த ப்படலாம். தலையிடி, தலைவிறைப்பு, நெஞ்சு நோ, நெஞ்சுக்குத்து, நெஞ்சு எரிவு, வயிற்று வலி, வயிற்றுக்குத்து, வயிறு எரிதல், வயிற்றுப் போக்கு, கைகால் விறைப்பு, வாய் உலர்தல், வாய் அவிதல், விரைவான சுவாசம், கண்குத்து, கண் வலி, உடல் முழுவதும் நோ, சோர்வு, மயக்கம், களைப்பு, முதுகு வலி, ஓங்காளம், சத்தி, அடிக்கடி சலம் கழித்தல், நடுங்குதல், போன்றவாறான நோய் வெளிப்படுகள் அவற்றுள் சிலவாகும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் இவ் வெளிப்பாடுகளினால் மிகவும் வலிகளை அனுபவிப்பதோடு அழுது கொண்டும் இருக்கலாம். இவர்களை நாம் மருத்துவரிடம் காட்டி உடற்பரிசோதனை செய்யும் போது, அவர் இவர்களது உடலில் எவ்விதமான நோய் அறிகுறிகளும் இல்லை எனக்கூறி எம்மை திருப்பி விடலாம். ஆனால் பிள்ளைகளோ, தாம் தெரிவிக்கும் வெளிப்பாடுகளின் வலிகளால் துவண்டு, வாடிப்போய் விடுபவராக இருப்பார்.மருத்துவர் உடல் சோர்வு இல்லை என்கின்றார்.

பிள்ளையோ நோயினால் துடிக் கின்றது. இந்நிலையினை எதிர்கொள்ளும் பெற்றொரிடையே ஒரு வித குழப்ப நிலை உருவாக அவர்கள் மருத்துவர் மாறி, மருத்து வராக காட்டி, பரிசோதனை மேல் பரிசோதனை செய்ய விளையாலாம். ஒரு சில பெற்றோர் கோயில், பூசகர், நூல் கட்டுதல், கழிப்புச் செய்தல் இன்னொரு பக்கத்தால் பயன்குறைந்த செயற் பாட்டால் காலத்தையும் பணத்தையும் வீணாக்கலாம்.

இங்கு நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்ன வெனில் இவ் வகையான உடல் நோய் தொடர்பான வெளிப்பாடுகளை பிள்ளைகள் வெளிக்காட்டும் போது, மருத்துவரிடம் அவற்றிற்கு உடல் சார் நோய் காரணியல்ல என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அது பிள்ளையின் உளம் சார் பிரச்சனைகளின் வெளிப்பாடுகள் தான் என்பதனை விளங்கிக் கொள்வதேயாகும். இவ்வகை உளம் சார் வெளிப்பாடுகளை மெய்ப்பாட்டு அறிகுறிகள் என உளவியல் மருத்துவர்கள் குறிப்பிடுவர்.

பிள்ளைகள் எதிர் கொண்ட நெருக் கீட்டுத் தாக்கங்களினால் எழும் உளப் பாதிப்புக்கள் உடல் ரீதியாக வெளிப்ப டுத்தப்படுவதே மெய்ப்பாட்டு அறிகுறி என்ப தாகும்.

இம் மெய்ப்பாட்டு அறிகுறிகள் (Somatizationa) பிள்ளைகள் அனுபவித்த நெருக்கீடுகளின் விளைவாகவே வெளிப்படுவதனால் உளம் சார் ஆதரவு வழங்கல் செயற்பாடுகள், உளவளத் துணை வழங்குதல், மூலமாகவே இவற்றில் இருந்து பிள்ளைகளை வெளிக் கொண்டு வர முடியும்.

இதற்கென பல்வேறு இயல்பாக்கல் முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலகுவாக கையாளக்கூடிய இயல்பாக்கல் முறைகள், விசேடமாகக் கையாளக் கூடிய இயல்பாக்கல் முறைகள் என இயல்பாக்கல் முறைகளை இரு வகைப்படுத்தி விளங்கிக் கொள்ள முடியும். பிள்ளைகள் எதிர் கொண்டு நெருக்கீடு சம்பவத்தால் ஏற்பட்ட தாக்கத்திற்கு ஏற்ப, இயல்பாக்கல் முறைகளைத் தெரிவு செய்து பயன்படுத்திக் கொள்ள முடியும்.

பிள்ளைகளோடு, இணைந்திருந்து அவர்கள் கூறுவதை அக்கறையோடு கேட்டல், ஒத்துணர்வு வழங்கி ஆதவளித்தல், அவர்களது பிரச்சனைகளைத் தீர்த்தல், கோபத்தைக் கையாளும் திறனை வளர்த்தெடுத்தல், முரண்பாடுகள் உருவாகும் சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாக அதனைக் கையாளப்பழக்குதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் சாதாரண நெருக்கீடுகளில் இருந்து பிள்ளைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து விட முடியும். இவ் இயல்பாக்கல் முறைகளை பற்றிய திறன்களை பெற்றோர்களும் ஆசிரியர்களும் தமக்குள் வளர்த்துக் கொள்வது மிகவும் தேவையானது.

பாதிப்பு கூடிய, விசேடமாக கையாளக் வேண்டிய நெருக்கீட்டுச் சம்பவங்களை பிள்ளைகளை மீட்டெடுப்பதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட பல இயல்பாக்கல் முறைகள் பயன்படுத்தபட்டு வருகின்றன.

சாந்த வழிமுறைகள், வெளிப்பாட்டு முறைகள், (EXPRESSIVE/ EMOTIVE METHOD) நடத்தைச்சிகிச்சை (BEHAIVIOU THERAPY) சம்பவ வழிப்பு சிகிச்சை (NARRATIVE EXPOSURE THERAPY) திட்டமிட்ட விளையாட்டுக்கள் என்பவற்றுள் பொருத்தமான ஒன்றினையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளையோ, பயன்படுத்தி நெருக்கீட்டுத் தாக்கத்தில் இருந்து பிள்ளைகளை வெளிக் கொண்டு வர முடியும்.

சாந்த வழிமுறைகள் என்னும் போது தியானம், சுவாசப்பயிற்சி, மந்திர உச்சாடனம், சாந்தியாசனம், அகஅமைதிப்பயிற்சி போன்றன அடங்குகின்றன. சித்திரம் வரைதல், உருவங்களை ஆக்குதல், கதை, கவிதை, கட்டுரை வரைதல், ஆடுதல்,பாடுதல், பாடலாக்குதல், பாத்திரமேற்று நடித்தல், போன்றவை வெளிப்பாட்டு முறைகளாகும்.

நெருக்கீட்டை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக பிள்ளைகளுடன் திட்டமிட்ட முறையில் கலந்துரையாடுதல், சம்பவ விபத்து என குறிப்பிடப்படும் நடத்தை மாற்று சிகிச்சை, சம்பவ விதிப்பு முறை என்பன உளவளம் தொடர்பிலான பயிற்சி பெற்றவர்களால் மேற்கொள்ளப்படுவதே சிறந்த பயனுடையதாகும்.

எனவே எமது பிள்ளைகள் எதிர் கொண்ட நெருக்கீட்டு சம்பவங்களின் தாக்கத்துக்கு ஏறடப பொருத்தமான இயல்பாக்கல் முறைகளை அடையாளம் கண்டு அதனூடாக பிள்ளைகளை நெருக்கீட்டுப் பாதிபபில் இருந்து விடுபட நடவடிக்கை எடுக்க வேண்டியது பெற்றோர் மற்றும் உறவினர்களது மிகப்பெரிய கடமையாகும். ஏனனில், உள ஆரோக்கியம் உடல் ஆரோக்கியத்துடன் தொடர்புயைது. பிள்ளை ஒன்றினுடைய உடல், உள ஆரோக்கியமே அதனது எதர்காலத்தை தீர்மானிக்கும் மிகப்பெரிய காரணியாகும்.

திரு.வே.க.சந்திரகுமார்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வழிகாட்டல் ஆலோனை
தென்மராட்சிக் கல்வி வலயம்





வருடாந்த இரத்த தான நிகழ்ச்சியின் போது நிலைய அங்கத்தவர்கள்

## எம்மை வழிநடத்தியவர்கள்

தலைவர்கள்:

| | |
|---|---|
| அமரர் சி. அப்பையா | 1944-1949 |
| அமரர் இ. முருகேசு | 1950-1962 |
| திரு. மு. இராசையா | 1971-1978 |
| அமரர் ந. சுப்பிரமணியம் | 1981-1983 |
| அமரர் ச. சத்தியமூர்த்தி | 1983-1984 |

செயலாளர்கள்:

- அமரர் அ. இராசையா
- அமரர் சு. வேலாயுதபிள்ளை
- திரு. த. பரமநாதன்
- அமரர் அ. கனகலிங்கம்
- அமரர் க. அப்புத்துரை
- அமரர் வை. அற்புதசிங்கம்
- அமரர் ச. சத்தியமூர்த்தி
- திரு. மு. சிவஞானம்
- திரு. க. வேலழகன்
- திரு. மு. பகீரதன்
- திரு. சு. விஜிஜேந்திரன்
- திரு. கு. மதுசுதன்

பொருளாளர்கள்:

- அமரர் க. அப்புத்துரை
- திரு. மு. இராசையா
- திரு. செ. தருமலிங்கம்
- அமரர் மு. இராசலிங்கம்
- அமரர் ச. சத்தியமூர்த்தி
- திரு. கவேலழகன்
- திரு. இ. சரவணபவன்
- திரு. அ. தற்குருநாதன்

## 70வது ஆண்டு விழாவில் கௌரவம் பெறுவோர்

1. திரு.மு.சிவஞானம்
2. திரு.அ.தற்குருநாதன்
3. திரு.செ.தருமலிங்கம்
4. திரு.க.மகேந்திரன்
5. திரு.இ.சிவனேசன்





6. திரு.த.துரைசிங்கம்
7. திரு.ச.தெட்சணாமூர்த்தி
8. திரு.சி.சிவனேசன்
9. திரு.கு.முருகையா
10. திரு.ச.இராசமூர்த்தி
11. திரு.மா.சந்திரசேகரம்
12. திரு.க.ஈஸ்வரானந்தம்
13. திரு.க.யோகநாதன்

# நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரப் போட்டிகள்

## 2003

திரு / திருமதி / செல்வன் / செல்வி ......[illegible]......

நல்லூர் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட

......[illegible]...... போட்டியில் பங்குபற்றி ......[illegible]......

பெற்றமைக்காக கௌரவித்து இத்தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது

| | |
|---|---|
| T.V.K........ | ........ |
| திரு.ரி.வி.கிருஸ்ணசாமி T. V. Krishnasamy | S. SELVARATNAM<br>திரு. செ. செல்வரட்ணம் |
| பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், [illegible] Commissioner | செயலாளர் / விசேட ஆணையாளர், |
| யாழ்ப்பாணம். of Local Govt. JAFFNA | பிரதேச சபை, நல்லூர். |






2014 இல் ஞான வீர முன்பள்ளியும் ஆசிரியர்களும்

# Nallur Pradeshiya Sabha
# Kokuvil

## Local Government Week

## 201Ω.

*This is to Certify that*

Mr/Mrs/Miss/Mas........ Gnanaveera Community centre ........

..........................................................................

Was awarded........ the first place ........

for community centre's competition

in the Local Government week ~~Tournament~~ / Competition

**Mrs.M.Vasanthakumar**
R/Assistant Commissioner of Local Government,
Jaffna District.

**Mr.M.Santhaseelan**
Secretary,
Nallur Pradeshiya Sabha,
Kokuvil.




எமது நிலையத்தின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
வெளியிடப்பட்ட நூலின் முகப்பு தோற்றம் – [24.04.1994]





முல்லைத்தீவில்

வெள்ள அனர்த்த நிவாரணப் பணியில்

நிலைய அங்கத்தவர்கள்

26.01.2012



# webster networks

MAKING DREAMS REALITY

## இன்றே அமைத்திடுங்கள் உங்கள் கனவு இணையத் தளத்தினை!

உலகத்தரம் வாய்ந்த சேவை யாழ் மண்ணிலிருந்து. எமது இணைய வழங்கிகள் [Server] அமெரிக்காவின் உலகத்தரம் வாய்ந்த தரவு மையங்களில் [Data Center] இருந்து இயங்குகின்றன. நியாயமான கட்டணத்துடன் உங்கள் தேவைக் கேற்ப தெரிவு செய்யும் வசதி. இணையத்தளப் பெயர் பதிவு, இணையத்தள வடிவமைப்பு அனைத்தும் ஒரே இடத்தில். தமிழ் மொழி மூலமான தொழில்நுட்ப உதவி.

## Business Hosting

cPanel

**WEB HOSTING - BASIC**

1000 MB SPACE
10 000 MB BANDWIDTH
CPANEL CONTROL PANEL
HOST UNLIMITED DOMAINS
200+ FREE SCRIPTS

**WEB HOSTING - PRO**

3,000 MB SPACE
30,000 MB BANDWIDTH
CPANEL CONTROL PANEL
HOST UNLIMITED DOMAINS
200+ FREE SCRIPTS

**WEB HOSTING - ULTRA**

10 GB SPACE
100 GB BANDWIDTH
CPANEL CONTROL PANEL
HOST UNLIMITED DOMAINS
200+ FREE SCRIPTS

**WEB HOSTING - ULTIMATE**

100 GB SPACE
1 TB BANDWIDTH
CPANEL CONTROL PANEL
HOST UNLIMITED DOMAINS
200+ FREE SCRIPTS

cPanel Control panel
Host Unlimited Domains
Park Unlimited Domains
Unlimited Email accounts
Unlimited Sub-Domains
99.9% Server Up-time
24/7 Customer Support
Dedicated IP $24/ Year

.com .net .org .mobi .tv .BIZ
.Asia .Me .ca .us .LK
.co .eu .info DENIC .in

### Windows Cloud Server

Guaranteed RAM
Intel Xeon CPU cores
1 Gbps uplink
1000 GB Bandwidth
SAN storage
Windows Server 2008 / 2012

Windows Server

Webster Networks
214, Manipay Road,
Jaffna
021 222 0261, 0779 471 771
support@websternetworks.lk
www.websternetworks.lk

php MySQL cPanel HTML 5

www.websternetworks.lk | support@websternetworks.lk

0094 21 222 0261
0094 779 471 771

ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

சிறப்புற வாழ்த்துகின்றோம்

# உசாந் உணவகம்

சைவ உணவு வகைகள்,



அசைவ உணவுவகைகள்,

பூந்திலட்டு,பலகாரம் என்பன

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ளமுடியும்



தொடர்பு

உசாந் உணவகம்

புகையிரத நிலைய வீதி,

கோண்டாவில்

ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

சிறப்புற வாழ்த்துகின்றோம்

# இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

## இராஜபுரம்

பெண்களுக்கான சாறி,

சல்வார், ஆண்களுக்கான சேட்,

ரீசேட், ரெடிமெட் மற்றும்

சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகள்



பட்டுச்சோலைகளின் சோலை வனம்

# RAJASWARIE TEXTILES

இல.105, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்

தொ.பே. 021 – 222 6953

# ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

## சிறப்புற வாழ்த்துகின்றோம்

வாடிக்கையாளர்களே!

தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தரமானதாகவும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும், மங்களகரமான நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த சகல வசதிகளையும் உள்ளடக்கிய மண்டப வசதியைப் பெற நாட வேண்டிய ஒரே இடம்

# TCT

**TCT MULTI TRADE CENTRE**
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்



527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
**Email. tctmc@dialognet.lk**
T.P.No :- **021-7451895**

**TCT SORNAMBIKAI HALL**
ரிசிரி சொர்ணாம்பிகை மண்டபம்



எமது நிகழ்வுகளுக்கான பதிவுத்திகதிகளை இணையத்தளத்தில் பார்வையிடலாம்
**www.tcthall.com**
T.P.No :- **021-222-8025**

(இங்கு பெறப்படும் வருமானம் அனைத்தும் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது)

ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

சிறப்புற வாழ்த்துகின்றோம்

# காந்தி

# உந்துருளி திருத்தகம்

அனைத்து வகையான

மோட்டார் சைக்கிள்களும்

பழுது பார்க்கப்பட்டு

திருத்தி வழங்கப்படும்

வாகன சுத்திகரிப்பு

செய்யப்படும்







உரிமையாளர்

ஜெயராஜ்(காந்தி)

0774895741

புகையிரத நிலைய வீதி,

கோண்டாவில்,

(ஸ்ரேசன் முன்னால்)

## ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

சிறப்புற வாழ்த்துகின்றோம்

# GEETHAN DECORATION











## கீதன் அலங்கரிப்பு நிலையம்

சகல விதமான அலங்கரிப்பு வகைகளுக்கும்

ஒரே தெரிவு

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

தொ.பே - 021 2053 898
கீதன் - 077 5273 660
ரகுவரன் - 077 6655 640

# ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா


## சிறப்புற வாழ்த்துகின்றோம்


**விக்னேஸ்வரா**

**சேவிஸ் ஸ்ரேசன்**

சகல விமான வாகனங்களுக்கும்
சிறந்த முறையில் சேவிஸ் செய்து தரப்படும்.

**கே.கே.எஸ். வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**



**தொ. இல.:**
**021 222 29 98**
**077 957 49 34**

**சிறிராம்**
**அரைக்கும் ஆலை**

அரிசி,
மிளகாய்,
மல்லி,
கோப்பி,
சீயக்காய்
அரைத்தும்
ஈர அரிசி
அரைத்தும் வறுத்தும்
நெல்
உடைத்தும் தீட்டியும்
கொடுக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
077 615 49 41

சகல விதமான
இரும்பு ஒட்டு
வேலைகளுக்கு

**வவி**

**ஒட்டு வேலை**

**நவீன வகையான**
**வேலைப்பாடுகள்**

**077 631 19 29**
**குட்செட் வீதி,**
**கோண்டாவில்.**

**THE GUIDE**
**INSTITUTE**
**Kondavil**

- தரம் 01 தொடக்கம் A/L வரையான வகுப்புகள்
- அனுபவமிக்க ஆசிரியர் குழுமின் வழிகாட்டல்
- மிகக் குறைவான மாதாந்தக் கட்டணம்
- ஒழுக்கம், சுயகட்டுப்பாடுனான கல்வி

**புகையிரத நிலைய வீதி,**
**கோண்டாவில்.**

# ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

## சிறப்புற வாழ்த்துகின்றோம்

**காணுயன்**
**பந்தல்சேவை**

அனைத்து விதமான
நிகழ்வுகளுக்கும்
சிறந்த பந்தல்சேவை

தொடர்பு
077 53 34 718


**தயா ஆட்டோ சேவை**

தொடர்பு
077 53 34 718

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

**நடராசா**
**ஆட்டோ சேவை**

பாதுகாப்பான
பயணங்களுக்கு
நாடவேண்டிய சேவை



தொடர்பு:

சஞ்சயன்
வியாபார நிலையம்,
கோண்டாவில்.

**பிரவீன்.com**


பாடசாலை உபகரணங்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
அழகுசாதன பொருட்கள்
எனம் பலவகையான
தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்





பிரவீன்.com
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்..

சகல விதமான
நிகழ்ச்சிகளுக்கும்
புகைப்பட, வீடியோ
தேவைகளை
நிவர்த்தி செய்ய



**ரூபன்**
**போட்டோ**
**வீடியோ**



தொடர்பு:
077 67 02 436

# ஞான வீர சனசமூக நிலைய 70வது ஆண்டு நிறைவு விழா

## சிறப்புற வாழ்த்துகின்றோம்

# S.V.I



## மங்கலகரமான நிகழ்ச்சிகளுக்கு படப்பிடிப்பு,

## வாகன ஒழுங்கமைப்பு செய்திட அழையுங்கள்



கோண்டாவில் மத்தி மேற்

கோண்டாவில்.

சு.விஜிஜேந்திரன்

077 7634 453


# நன்றி கூறிமகிழ்கின்றோம்.

எமது நிலையம் 70 ஆண்டுகளாக இந்த மண்ணில் சேவையாற்றி அதன்விளைவாக "ஞானவீரம்" மலரையும் வெளியிட்டிருக்கின்றது. என்றால் எமது சமூக மக்களின் உயர்வான எண்ணமே அதற்கு ஊன்று கோலாக அமைந்தது எனில் மிகையில்லை. அந்தவகையில் போட்டிகள் நடத்துதல், பரிசில்கள் வழங்குதல், நிதிசேகரித்தல், இரத்ததானம் வழங்குதல், இயற்கையின் சீற்றத்தால் துன்புற்ற மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குதல், போன்ற இன்னோரன்ன பணிகளை ஆற்றி இன்று 70 கண்டு மகிழ்ந்திருக்கிறவேளையில் இம்மலர் வெளிவருவதையிட்டு நாம் மிகவு பெருமையடைகின்றோம்.

இந்நாளில் ஞானவீரம் என்ற நூல் உருவாக ஆதரவு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றோம். குறிப்பாக நிதித் தேவையை ப்பூர்த்திசெய உதவிக்கரம் நீட்டிய வெளிநாட்டில் வாழும் எம்நாட்டு அன்பர்கள், வெளிநாட்டு அன்பர்கள் விளம்பரங்களை நல்கிய வர்த்தகப் பெருமக்கள்,ஆசிச்செய்திகளை வழங்கிய சமயப்பெரியோர்கள் வாழ்த்துச்செய்திகளை வழங்கிய பெரியோர்கள், ஆக்கங்களை உவந்தளித்த துறைசார்வல்லுநர்கள் நிலையஅங்கத்தவர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த நனறியைத் தெரவித்து மகிழ்கின்றோம்.

இம்மலரைச் சிறந்தமுறையில் அச்சுவாகனமேற்றிப் புத்தகவடிவாக்கிய யாழ்ப்பாணம் கங் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் நூலை வெளியிட்டுப் பெருமைப்படுத்திய முதன்மை விருந்தி அவர்களுக்கும், முதற்பிரதி சிறப்புப்பிரதிகளைப் பெற்று மலரைப்பெருமைப்படுத்த பெரியோர்களுக்கும், மலரை மிகச்சிறந்த முறையில் ஆய்வு செய்து சிறப்பித்த சிவத்தமிழ் வித்தகர் ச. மகாலிங்கம் அவர்களுக்கும், மற்றும் அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய நல்லுள்ளங்க அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கின்றோம் நன்றி.








கங்கை பிறிண்டேர்ஸ் யாழ்
077 6184 567